www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஜூன்.02–08,1996
ரூபா 11/00


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 155



# தனிமைப்படுத்தும் தந்திரோபாயம்

## புலிகளை வெல்லப் புதிய திட்டம்



## பணக்கார ஆண்களுக்கு புரூனேயில் ஆபத்து

# மீனாவின் துணிச்சலான பேட்டி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## உரியதை உரிய நேரத்தில்.....

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இயற்கையைக் காயப்படுத்தி
அதன் விளைவை
நாமெல்லாம் அனுபவிக்கிறோம்!
பொய்த்து வரும் வான்மழையும்
புரட்டி எடுக்கும் வெப்பமும்
போதாக்குறைக்கு மின்வெட்டும்
பொறுப்பின்மையின் விளைவுகள்!

மரம் நடும் இயக்கம்
பற்றி பேசிக்கொண்டே
காடுகளை அழித்துவிட்டோம்.
சென்ற அரசாங்கமே
அதற்குப் பொறுப்பு என்கிறது
இன்றைய அரசாங்கம்.

அரசியலிலும் சரி,
அபிவிருத்திப் பணிகளிலும் சரி
அடுத்த தலைமுறை தொடர்பான
அக்கறையை
தொலைத்துவிட்டால்தான்
பொறுப்பின்மை உருவாகிறது.

சென்ற அரசாங்கம்
காடுகளை அழித்ததின் பலன்,
இன்றைய அரசாங்க காலத்தில்தானே
தெரியவந்திருக்கிறது!
அதனால் கடந்த அரசாங்க கட்சிக்கு
பாதகமில்லை;
"நமக்கென்ன
இவர்கள் சமாளிக்கட்டுமே"
என்று இருந்துவிடுவார்கள்!

தமது பதவிக் காலத்தில்
சிக்கல் இல்லாமல் போனால் சரி;
அடுத்துவரும் அரசாங்கங்கள்
பட்டுக் கொள்ளட்டும் என்று
நினைப்பதுதான் சுயநல அரசியல்!

மின்சாரப் பற்றாக்குறை
ஏற்படும் என்பது
கடந்த அரசுக்கு தெரியாததல்ல!
தெரிந்தும்,
மாற்று வழிகளை- ஏற்பாடுகளை
செய்யாமல் இருந்துவிட்டார்கள்!

மின்சாரத்தில் மட்டுமல்ல,
எரியும் பிரச்சனைகளிலும்
தமக்கு அடுத்து வருவோர்
அவதிப்படக்கூடிய நிலையைத்தான்
ஒவ்வொரு அரசாங்கமும்
உருவாக்கிவிட்டுப் போகிறது!

நாற்காலிகள் மீதான அக்கறை
நாட்டின்மீது இல்லாதபோது
தற்காலிக சமாளிப்புக்கள் மூலம்
தம் பதவிக்காலத்தை
கடந்துவிடவே விரும்புகிறார்கள்!

அரசியல் வைத்தியர்களுக்கு
நோய் என்னவென்று தெரிந்தாலும்
சிகிச்சை செய்யும் துணிவில்லை!
அதனால் நோயாளி
தொடர்ந்து நோயாளியாகவே
இருந்துகொண்டிருக்க வேண்டியுள்ளது.

தாம் பொறுப்பில் உள்ளவரை
நோயாளி-
இறந்துவிடாமல் இருந்தால் போதும்;
அதற்கேற்ற மருந்துகளை மட்டும்
கொடுத்துக் கொண்டிருப்பார்கள்.

நோயாளியை
எழவைக்கும்
உறுதியான சிகிச்சைக்கு
தேவையான பக்குவமும்,
தீர்க்கமான மனப் போக்கும்
அரசியல் வைத்தியர்களிடம்
காணாமல் போய்விட்டது!

இனப்பிரச்சனையோடு
விளையாடியதால் யுத்தம்!
இயற்கையோடு
விளையாடியதால் வெப்பம்!

தேவையானது-
வான்மழை!
தேவையற்றது-
போர் மழை!

திட்டமிட்ட செயற்பாடும்
வருமுன் காத்தலும்
யாரிடமும் இல்லாமல் போனதால்
தேவையானது கிடைக்கவில்லை;
தேவையற்றது தொலையவில்லை!

வெள்ளம் வந்தபின்னரும் கூட
அணைகட்டாமல்
ஒருவரை ஒருவர் குற்றம் சொல்வது
அரசியல்வாதிகளுக்கு
கைவந்த கலை.

இன்றைய அரசாங்கம்
அதற்கு விதி விலக்காக இருக்குமா?
வான் மழை வந்தாலும்கூட
எதிர்காலத்தை உத்தேசித்து
மின்சார உற்பத்திக்கு
நீர்மின் தவிர்ந்த
வழிகளை நாடவேண்டும்!

மின்பிரச்சனைக்கு தீர்வு கண்டால்
எதிர்காலத்தில் இருள் இருக்காது.
இனப்பிரச்சனைக்கு தீர்வு கண்டால்
வரும் காலத்தில் போர் இருக்காது.

தேவையானதை தேவையானபோது
நாளைய அக்கறையோடு
இன்றே செய்தால் நலம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

## பொருளாசை பெரும் நஷ்டம்

'தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்பதின் இயைந்த கருத்தை மனதில் நன்கு பதித்துக்கொள்ள வேண்டும். தினைப் பயிரை விதைப்பவன் தினையைத் தான் பலனாகப் பெறுவான். ஆனால் வினைகள் அல்லது செயல்களைச் செய்பவன் அவ்வினைக்கு ஏற்ற பிரதிபலன்களான செயல்களைத் திரும்பப் பெறுவான்.

'முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும்' என்பது உண்மை. நல்லவை செய்தால் நல்லவையும், தீயவை செய்தால் தீயவையுமே வந்து சேரும் என்ற உண்மையை நன்கு மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். இதுவே-

"தனக்கு அதிகம் உண்டாகத் தரித்திரனை ஒடுக்குகிறவன், தனக்குக் குறைச்சலுண்டாகவே ஐசுவரியவானுக்குக் கொடுப்பான்." (நீதி: 22:16) இவ் வாக்கியமும் இவ்வுண்மையையே விளக்குகின்றது. அவனவன் வினைக்கேற்ப அனுபவிக்க வேண்டும்.

எல்லாம் இந்த உலக, லௌகிக வாழ்விலேயே இருக்கிறது.. என்ற எண்ணமிருக்கக் கூடாது. எனவேதான்-

"நீ புசித்து திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி அவைகளில் குடியிருந்தபோதும்; உன் ஆடுமாடுகள் திரட்சியாகி உனக்குப் பொன்னும் வெள்ளியும் பெருகினாலும்.... கர்த்தரை மறவாதபடிக்கும் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமற் போகாத படிக்கும் எச்சரிக்கையாயிரு" (உபா: 8:11-14) என்று போதிக்கப்படுகிறது. அல்லாமலும்-

"பொருளாசைக்காரன் தேவனுடைய இராச்சியமாகிய கிறிஸ்துவின் இராச்சியத்திலே சுதந்திரமடைவதில்லை." (எபே5:5) என்று எச்சரிக்கப்படுகிறது.

எனவே, சிந்தித்து, சீர்தூக்கி செயலாற்ற வேண்டியது நமது கடமையாகிறதல்லவா?

ஏ.பி.வி.கோமஸ்-

## ஆன்மீகம்



## குர்ஆன் ஓதுவதின் ஒழுக்கங்கள்!

* ஒழுங்கு முறைபேணி வுழூச் செய்துகொள்ளல்.
* வாயை மிஸ்வாக்குச் செய்து சுத்தமாக்கிக் கொள்ளல்.
* சுத்தமான இடத்திலே அமர்வது.
* உள்ளச்சத்துடன் கிப்லாவை முன்னோக்கி அமர்தல்.
* ஆரம்பித்து ஓதும்பொழுது ஓதும் முறைபேணி ஓதல்.
* சிந்தனையோடு ஓதுதல்.
* முடிந்தளவு அழக்கூடியவாறு ஓதுதல்.
* கிரா அத்தைக் கொண்டு குரலை அழகாக்கி ஓதுதல்.
* தொழுபவருக்கும், குர்ஆன் ஓதும் மற்றவருக்கும், தூங்குபவருக்கும் சங்கடமில்லாதவாறு சப்தமாக ஓதல்.
* அத்தியாவசியத் தேவையைத் தவிர ஓதும் பொழுது பிறிதொருவருடன் கதைக்காமல் ஓதுதல்.
* சிரிக்காமலும், விளையாடாமலும், சிந்தனையைத் திருப்பக்கூடிய பார்வைகளைப் பாராமலும் குர்ஆனின் மீது பார்வையைச் செலுத்தி தாழ்மையாகவும், கண்ணியமாகவும், அமைதியுடனும் ஓதவேண்டும்.
* தஜ்வீத் முறைகளை கவனித்து ஓதுதல் வேண்டும்.
* குர்-ஆனை ஓதாமல் அதனைப் பார்த்துக் கொண்டிருப்பதும் வணக்கமாகும்.

(ஆதாரம்:- உஸுலுல் குர்ஆன்)

எனவே, நாமும் இம்முறைகளைக் கவனித்து குர்ஆனை ஓதுவதற்கு முயற்சி எடுப்போமாக!

எம்.ஏ.எம். மகுத் அஹமத்-காத்தான்குடி-03.

## கவிதைப் போட்டி இல.152

### பரிசுக்குரிய கவிதை

**சாதனை!**

தரை பெயர்ந்த
தாமோதரம்
பிறை நிலத்தில்
இடம் பிடிக்க(ப்)
பறந்ததுவும்
சாதனை தான்!

ச. மகாலிங்கம்- வெலிமடை

**பார்த்து வாராய்!**

கலகமே சூழ்ந்த பூவுலகில்
கதியற்று வ ழ்ந்திடும் நேரமிதில்
நிலவுக்கு மீண்டும் சென்றுவாராய்
நிம்மதி அங்குண்டோ பார்த்து
-வாராய்!

பசறையூர்- மல்லிகா பத்மநாதன்.

**இழக்காதே...!**


விடியலைத் தேடி
சூரியனை தொலைத்தவர்கள்
நாங்கள்.....!
மனிதா, நிலவையும்
இழந்துவிடாதே!
அங்காவது வெண்புறாக்கள்
பறக்கட்டும்!

செல்வி. வசந்தமலர் பத்மநாதன்-
கொழும்பு-15.

**சாதனையும் வேதனையும்!**

விண்ணில்
கால் புதைத்ததென்னவோ
சாதனைதான்!
ஆனால்-
மனிதம்
மண்ணுக்குள்
புதைக்கப்படுவது தான்
வேதனை!

ஹஜேந்தினி மகேந்திரன்-
மட்டக்களப்பு.



**தத்துப்பிள்ளை...**

வியக்க வைத்து
விந்தை காட்டி
நிலவிலே முதல் அடிபதித்து
தத்தித் தத்தி
நடை. பழகுது....
விஞ்ஞானத்தின்
தத்துப் பிள்ளை!

என். சஹாப்தீன்-ஒட்டமாவடி.

## கவிதைப் போட்டி இல-155



**கவனியுங்கள்** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.06.1996.

-முகவரி-
கவிதைப் போட்டி இல.155,
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல-1772,
கொழும்பு.

**மதியிலே மிதிப்பதென்றால்**

எல்லாரும் கூடி ஓர் இனமாய் இருப்பதென்றால்
இப்போதே விண்வெளியில் இறங்கிடுவோம்-என்றேனும்
இனவாதம் தோன்றியிப் புவிபோல் மாறுமென்றால்
மனிதனுக்கு வேண்டாம் மதி.

சதா கணபதி- உடபுஸல்லாவ.

**இடம்....!**

நீல் ஆம்ஸ்ரோங்!
நீ
கொடுத்துவைத்தவன்
எங்களுக்கும்
ஓர்
இடம்பிடித்துவை-
நாளை
நாங்களும் வரலாம்
அகதிகளாய்
அங்கு!

ரோஜா ஆனந்தராஜா-ராகலை.

**நிலவிலாவது....**

இரத்தம் சொட்டாத பூமி வேண்டும்;
நித்தம் ஷெல்லடி இல்லாது வேண்டும்.
பிணவாடை அற்ற தென்றல் வேண்டும்;
குணமுள்ள மனிதன் வாழ வேண்டும்.
நிலவிலாவது இவை இருக்கும் என்றால்
நானும் காலடி பதிக்கத் தயார்!...

அமிர்தஷாந்தி மகாலிங்கம்-
மட்/கல்லடி.

**பதில் சொல்**

சந்திரனில் காலடி வைத்த மனிதா!
சத்தியமாய் சொல்லிவிடு-
இந்த மண்ணில் நாங்கள்
தொலைத்த மனிதநேயத்தை
அந்த மண்ணிலாவது
பெற்றுக் கொள்ள
முடியுமா என்று?

ஆனந்தன் ரவிச்சந்திரன்-கொழும்பு-14

**வேற்றுமை**

சந்திரனில் இறங்கிய
வீரர் கண்ட வேற்றுமை.
'இங்கே மனிதரில்லை!
அங்கே மனிதமில்லை!'

பி.சி.அன்ரன்-மட்/
கூளாவடி.

**ஞாபகம்**

அந்த நாள் ஞாபகம் (1969ல்)
இந்த நாள் முரசிலே (1996ல்)
வந்ததே வாசகர்
வாசலை தேடி....!

எம். நடராஜா-ஆவேலியா, நுவரெலியா.

**நிலவிலும்....**

இது
நிலவில் முதல் அடி! இனி
அங்கேயும் குடியேறி
புதைப்பார்களோ பொறிவெடி!

பாண்டியூர்- அ.குமணன்.

**மிதிவெடி கவனம்!**

நிலவில் அடிவைப்போர்,
நினைவில் வையுங்கள்!
காலுக்கு கீழே மிதிவெடி!!
கற்பனையல்ல... உண்மையாகலாம்.

அ. முஹம்மது, முஸ்அப் ரஸீன்-
நிந்தவூர்-03

**சரிதை**

சந்திரன் பெருமை கூறும்
சரித்திரமெல்லாம், இவன்
சரிதை கூறும்
சத்தமிட்டே....

நா.ஹரி- நீர்கொழும்பு.

**அழிவு**

2069ல்
சந்திரனில் இருந்து
"உயிரினம்"-மனிதரில்லா
பூமிக்கு வரும்;
அதிசயப்படும்....!

சுபா வரன்- கண்டி.

## வாசக(ர்)சாலை

இனிய முரசே! அரசியலின் பக்கங்களை துல்லியமாய் ஆராயும் இராஜதந்திரியும், நாரதரும் வாராவாரம் அரசியல் வகுப்பே நடத்திவிடுகிறார்கள். யாழ்ப்பாண நிலவரம் தொடர்பாக எக்ஸ்ரே ரிப்போர்ட் தரும் கணிப்பும், கருத்தும் வெகு அருமை.

எல். கணேசநாதன், வவுனியா.



மிகவும் நெருக்கடியான காலகட்டம் இது. இலங்கை வாழ் தமிழ் மக்கள் நண்பர்களைத் தேடிக்கொள்ளவேண்டுமே தவிர, நண்பர்களையும் விரோதிகளாக்கி விடக்கூடாது. இதற்கு நம் அரசியல் கட்சிகளின் தீர்க்கமான அணுகுமுறைகளும் அவசியமாகும். எக்ஸ்ரே ரிப்போர்ட்டை படித்தபோது எனக்கு ஏற்பட்ட உணர்வு அதுதான்.

வி. சதாசிவம், மட்டக்களப்பு.

தமிழகத் தேர்தல் களச் செய்திகளை சுவையோடு தந்த முரசுக்கு பாராட்டுக்கள். ஜெயலலிதாவின் வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாயினும் இப்படியாகும் என்று கனவிலும் நினைக்கவில்லை.

சி. தர்ஷினி, கண்டி.

கார்லோஸ் தொடர் ஏகப்பட்ட விறுவிறுப்பு. கார்லோஸை என் கையாலேயே கொன்றுவிடலாம் போல இருக்கிறது. மனித உயிர்களோடு விளையாடும் கார்லோஸுக்கு மரண தண்டனை விதிக்குமாறு ரசிகனுக்கு கோரிக்கை விடுக்கிறேன்.

ஜெ. பைரோஸ், மாத்தளை.

மலையக அரசியல் தொடர் பாக முரசு வெளியிடும் கருத்துக்களுக்கு வரவேற்பு இருக்கிறது. மலையக அரசியல் அரங்கையும் முரசு மேலும் ஆழமாக ஆராய்ந்தால் என்ன?

சா. நல்லதம்பி, பண்டாரவளை.

தேன் கிண்ணம் கவிதைகளில் புதியவர்களின் எழுத்து வீச்சுக்கள் சூடு கலந்த இதம். தேன் கிண்ணத்தில் பாதியைப் பறித்து நீங்கள் தந்த 'ரஜினி ராச்சியம்' சூப்பர்.

கே. ஜோன்சன், குருநாகல்.

குள்ளநரி கார்லோஸ் நம்மையெல்லாம் என்ன செய்யப்போகிறான்? அவனிடம் அப்படி ஏன்தான் பெண்கள் மயங்குகிறார்களோ? பொறாமையாக இருக்கிறது. ஹி..ஹி..ஹி.

கு. துரைமனோகரன்,
பதுளை.

கார்லோஸ் கெட்ட வல்லவன். ஏனென்று கேட்கிறீர்களா? தனது காரியத்தை சாதிப்பதற்காக அப்பாவிகளைக் கொல்வது நல்ல காரியமா?

நிக்கவெவ கடாபி, கெக்குணகொல்லை.

ராஜேந்திரகுமாரின் தொடர் நிறைவு பெறப்போகிறதே என்று வருத்தமாக இருக்கிறது. தொய்வே இல்லாமல் சுறுசுறு ரகமாக கதை செல்கிறது.

எல்.என்.முபிதா, கல்முனை.

பல சுவையான அம்சங்களைத் தாங்கி வரும் முரசே, உரிமையுடன் உன்னிடம் ஒரு வினா: ஆன்மீகப் பகுதியில் இந்துமத, பௌத்தமத தத்துவக் கருத்துக்களை தராமல் இருப்பதேனோ?

தயாளினி பரமசாமி, கல்கிசை.

இராமாயணத்தில் உண்டுதானே! அது நிறைவு பெற்றதும் தனியாக இந்துமதக் கருத்தும் வரும். ஆ.ர்.

"முரசை ஏமாற்றலாம்; ஆனால் முரசு வாசகர்களை ஒரு போதும் ஏமாற்ற முடியாது!" என்பதை மார் தட்டிக்காட்டினார் நீர்கொழும்பு, மஹ்ஜபீன். சில இலக்கியத்திருடர்களால் எம்போன்ற இளம் எழுத்தாளர்கள் காயப்படுகிறோம்!! ஆகவே இவர்களை பகிரங்கப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. தவறை தொட்டுக்காட்டிய மஹ்ஜபீனுக்கும், உறுதியான ஒருமுடிவை எடுத்த முரசுக்கும் எனது இனிப்பான பாராட்டுக்கள்!

எம்.எம்.ஸன்பர், கிண்ணியா-06.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

* ஜே. எம். கியாஸ்-கிண்ணியா-04.
* ஏ.எச்.எம். இஜாஸ்-கஹட்டோவிட.
* ஆர். ராஜகலா- பசறை.
* தெ. பிரியாந்தன்-அக்கரைப்பற்று-08.
* எம். சுகந்தினி-புத்தளம்.
* செல்வி. இராஜசுதர்சினி-சீதுவ.
* எஸ்.காயத்திரி-கொழும்பு-06.
* ந. சித்ரா-மட்டுநகர்.
* எம். கரீமா சனூன்-புத்தளம்.
* சி. ரமணன்-கொழும்பு-13.
* நூர்முஹமட் புஜீனா-நிக்கவெவ.
* நுஸ்ரா, பஸ்மியா-களுத்துறை (தெற்கு)
* எம்.எப்.ரசூல்-வெளிமடை.
* கே. எம். இக்பால்-நிக்கவெவ.
* எம். நவாப்தீன் சஹீத்-ஏத்தாலை.
* க. உதயகுமாரன்-களுவாஞ்சிக்குடி.
* எஸ். ஜே. ஜெலீரினோஸா-கிண்ணியா-03.
* ப. ஜெயப்பிரகாஷ்-பசறை.
* இரட்ணசபாபதி வசந்தி- உடபாகை.
* விமலேசன்-நுவரெலியா.
* சிவாஜினி சதாசிவம்- மாத்தளை.
* ஏ. வேல்முத்து-உடப்பு.
* கே. தயாளன்-சுவிற்லர்லாந்து.
* வி. தவசீலன்-சவுதி அரேபியா.
* ஏ. கஜேந்திரன்- துபாய்.
* ம. பரிமளா-நுவரெலியா.

வாசக நேயர்களின் உயிர்த்துடிப்பு முரசே! வாரம் தோறும் உன்னில் வெளிவரும் அத்தனை அம்சங்களும் சூப்பர். குறிப்பாக ரசிகன்- தரும் இலங்கிய நயம், இராமாயணம், கவிதைப் போட்டி மற்றும் சகல அம்சங்களும் கொண்டுள்ள முரசுக்கு சேவைகள் தொடர வாழ்த்தும்,

கே.ரீ.இல்யாஸ், புல்மோட்டை.01.



படிப்பகம்

www.padippakam.com

# நடவடிக்கை தொடர்ந்தால் சமரசம் நிரந்தரமாக முறியும்!

# புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ செய்தி!

## வன்னியிலும் நடவடிக்கை தொடரலாம் என்றும் தெரிவிப்பு

"இராணுவ நடவடிக்கைகளை கைவிட்டு, கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறினால் மட்டுமே சர்வதேச மத்தியஸ்தத்துடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் புலிகள் இயக்கம் பங்கு கொள்ளும். இராணுவ நடவடிக்கைகள் தொடருமானால் சமரசம் நிரந்தரமாக முறியும் என்பதை புலிகள் இயக்கம் சிறீலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெரிவிக்க விரும்புகிறது." இவ்வாறு வன்னியில் இருந்து வெளியான விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வன்னியிலும் தொடரலாம்**

இராணுவ நடிவடிக்கைகள் தொடர்ந்தால் சமரச ஏற்பாடுகள் நிரந்தரமாக முறிவடையும் என்று புலிகள் தெரிவித்துள்ளனர். அதன் மூலமாக தற்போது சமரச பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கும் அறிகுறியையும் புலிகள் மறைமுகமாக தெரிவித்துள்ளனர் என்று கருதலாம்.

'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தென்மராட்சியூடாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையானது சமாதானப் பேச்சுகளுக்கான வாய்ப்புக்களை மேலும் கேள்விக்குரிய தாக்கிவிட்டது.

இந்நிலையில், அடுத்த கட்டமாக வன்னி பெருநிலப்பரப்பு மீதான நடவடிக்கைக்கும் படைகள் தயாராகிவருகின்றன.

தொடர் நடவடிக்கைப் போர் முறைத் திட்டத்தின் அடுத்த கட்டமாக அது ஆரம்பிக்கப்படும் என்று சிறீலங்கா தரைப் படையின் புதிய தளபதி ஜெனரல் றொகான் டி.எஸ்.தலுவத்த தனது பதவி ஏற்பு உரையின்போது கூறியும்விட்டார்.

இதிலிருந்து படை நடவடிக்கைகளை தொடர்ந்து தீவிரப்படுத்துவதில் அரசு முழு அக்கறை காட்டுவதை அறிய முடிகிறது.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காணும் மூலோபாயத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முடிவு செய்யுமானால், அது, சமரச வழிகளில் அரசியல் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளை நிரந்தரமாக மூடிவிடும்.

**நெருக்கடிக்குள்...**

அதேவேளை வடக்கில் நீண்ட போர் நெருக்கடிக்குள் படையினர் சிக்க வேண்டி இருக்கும் என்பதையும் சொல்லிவைக்க விரும்புகிறோம்." இவ்வாறு விடுதலைப் புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி நிலப்பரப்பில் பாரிய தாக்குதல் ஒன்றை புலிகள் எதிர்பார்த்திருப்பதாக தெரிகிறது. அதற்கிடையில் வன்னி நிலப்பரப்பிற்கு படையினர் செல்லாமல் தடுக்கக்கூடிய தாக்குதல்களை யாழ் குடாநாட்டுக்குள் புலிகள் மேற்கொள்ளக்கூடும் என்று தெரிகிறது.

"யாழ்-குடாநாட்டிற்குள் புகுவோம். தெற்கிலும் தாக்குவோம்" என்ற பொருள் படக்கூடிய கவிதை ஒன்றை புலிகளது ஆஸ்தான கவிஞர் என்று அழைக்கப்படும் புதுவை இரத்தினதுரை எழுதியுள்ளார்.

'உலைக்களம்' என்ற தலைப்போடு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் அக்கவிதை வெளியிடப்பட்டுள்ளது.

ஈரோஸ் இயக்க முன்னாள் தலைவரும், புலிகள் இயக்க பிரமுகருமான வே.பாலகுமாரன் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"புலிகளைப் பொறுத்தவரையில், தமது நீண்ட வரலாற்றில், பல பாரிய பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பின்னடைவின்போதும் முன்னைவிட வலிமையோடு நிலைமைகளைக் கையாண்டு மேலெழுந்து வந்துள்ளனர். இம் முறையும் அது நிகழும்" என்று தெரிவித்துள்ளார்.

**மறுப்பு**

இதேவேளை, கிளாலி கடல் ஏரிப்பாதை தடுக்கப்பட்டதால்தான் யாழ் குடாநாட்டு மக்கள் வெளியேறி வன்னிக்குச் செல்ல முடியவில்லை என்று புலிகள் கூறிவருகிறார்கள்.

ஆனால், கிளாலி கடல் ஏரிப் பாதையில் போக்குவரத்து நடைபெற்ற போதே மக்களை இடம்பெயருமாறு புலிகள் கேட்டிருந்தனர். படை நடவடிக்கை ஆரம்பமாகப் போவதாகவும் கூறியிருந்தனர். அப்படி இருந்தும் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இருந்த மக்கள் புலிகளின் கோரிக்கையை ஏற்க மறுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கலைஞருக்கு புலிகளின் பிரமுகர் வாழ்த்து

# தனி ஆதரவு இல்லை என்கிறார் கலைஞர்!

"இலங்கைத் தமிழர்களது இனப்பிரச்சனைக்கு திருப்தியான அரசியல்தீர்வு காணப்படவேண்டும்" என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி பதவி ஏற்றதும் கூறியிருந்தார்.

இதேவேளையில் ஃபிரான்சில் உள்ள புலிகள் இயக்க பிரமுகர் லோறன்ஸ் திலகர், கலைஞர் கருணாநிதிக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார்.

1989 இல் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் கலைஞர் வெற்றிபெற்ற போது யாழ்ப்பாணத்திலிருந்து பிரபாகரன் நேரடியாக வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். இம்முறை லோறன்ஸ் திலகர் புலிகளின் சார்பாக வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

திலகர் வாழ்த்துச் செய்தி அனுப்பியது தொடர்பாகவும், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழக முதல்வரின் நிலைப்பாடு தொடர்பாகவும் 'இந்தியா டுடே' நிருபர் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு கலைஞர் கருணாநிதி பின்வருமாறு பதில் அளித்துள்ளார்:

"இலங்கைத் தமிழர் பிரச்சனையைப் பொறுத்தவரை எங்களுடைய அணுகுமுறை இதுவரை சொல்லிவந்ததுதான்.

தமிழ்நாடு விடுதலைப் புலிகளின் புகலிடமாகவோ, வன்முறைக் களமாகவோ மாறக்கூடாது.

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும். இரு சாராரும் அரசியல் தீர்வுக்கு இணங்கி ஒரு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். எந்தக் குழுவுக்கும் நாங்கள் ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை. எங்களுக்கு வாழ்த்து அனுப்புவது அவங்க அவங்களோட கருத்து" என்று தெரிவித்துள்ளார் கலைஞர்.

கடந்த தேர்தலில் ரஜினியின் பங்கு எந்த அளவுக்கு உதவியிருக்கிறது? என்றொரு கேள்விக்கு அவர் பின்வருமாறு சொன்னார்:

"அளவு என்றெல்லாம் குறிப்பிட விரும்பவில்லை. இது ஒரு கூட்டு முயற்சி. இதில் ரஜினியின் பங்கும் உண்டு. ரஜினிகாந்த் அவர்கள் ஜெயலலிதாவின் கொடுமைகளைப் பற்றி எதிர்த்துப் பேசியதால்தான் அவருக்கே செல்வாக்கு அதிகரித்தது என்று நான் நினைக்கிறேன். இது மக்களுடைய வெற்றி என்றும் நான் நினைக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

## ஒற்றையாட்சியே ஒரே கொள்கை

# ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு

ஒற்றையாட்சி என்ற நிலையிலிருந்து மாறுபட்ட எத்தகைய ஏற்பாட்டையும் ஏற்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி கடந்த வெள்ளிக்கிழமை திட்டவட்டமாக அறிவித்துவிட்டது, இதனால் அரசாங்கத்தின் அரசியல் தீர்வுத்திட்ட யோசனைகளுக்கு ஐ.தே.கட்சியின் ஆதரவைப் பெறுவதில் சிக்கல் தோன்றியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில், இந்நாட்டில் ஒற்றை ஆட்சி முறையே தொடர வேண்டும் என்ற கோட்பாட்டிலிருந்து ஐ.தே.கட்சி எவ்வகையிலும் மாறுபடப்போவதில்லை என்று முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் தெரியப்படுத்தினார்.

ஐக்கிய தேசியக்கட்சி தனது கருத்தை வெளியிடும் போது நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சமுகமாயிருக்கவில்லை. இருப்பினும் உயர் கல்வித்துறை இணை அமைச்சர் பேராசிரியர் விஸ்வா வர்ணபாலா, ஐ.தே.கட்சியின் முடிவினை அமைச்சருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

ஐ.தே. கட்சியின் முடிவையிட்டு கட்சித் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவுடன் தான் பேசப்போவதாக நீதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய (லலித்) முன்னணி பா.உ.வான ரவி கருணநாயக்காவும் ஒற்றையாட்சி என்ற அமைப்புக்கு எத்தகைய மாற்றமும் ஏற்படுவதை தான் சார்ந்த கட்சி ஆதரிக்கப் போவதில்லை என்று தெரிவித்தார்.

## ராஜீவ் கொலை வழக்கில் புதிய சந்தேகம்!

# தி.மு.க. அரசுக்கும் அரசியல் சங்கடம்!

ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் வேறு சதிகள் இருக்கிறதா என்பதை ஆராய்ந்துவரும் ஜெயின் கமிஷன் சில புதிய சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை செய்த சிறப்பு புலனாய்வுக் குழுவினர் சில பிரமுகர்களை வழக்கில் சேர்க்கத் தவறிவிட்டனர் என்று தெரியவந்துள்ளது.

அவ்வாறு விடப்பட்ட பிரமுகர்களில் ஒருவர் சுப்புலட்சுமி ஜெகதீசன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். தற்போது மொடக்குறிச்சி தொகுதித் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடப் போகிறார்.

தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர் 1992இல் சுப்புலட்சுமி ஜெகதீசன் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார். பின்னர் பிணையில் விடுதலையானார்.

ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்ட சிவராசன், சாந்தன், வசந்தன், இரும்பொறை அகியோருக்கு சுப்புலட்சுமி ஜெகதீசனும், அவர் கணவர் ஜெகதீசனும் தமது வீட்டில் பாதுகாப்பு கொடுத்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஆயினும் சிறப்பு புலனாய்வு பிரிவினர் சுப்புலட்சுமி ஜெகதீசனை விசாரிக்கவில்லை. ராஜீவ் கொலை வழக்கில் சேர்க்கவும் இல்லை.

அதுபோல சிவராசன், சுபா ஆகியோருக்கு பாதுகாப்புக் கொடுத்த திராவிடர் கழக (தி.க) பிரமுகர் கொளத்தூர் மணி என்பவரும் ராஜீவ் கொலை வழக்கில் சேர்க்கப்படவில்லை.

கால அவகாசம் குறைவாக இருந்ததும், வழக்கில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படாமல் தவிர்க்கவுமே சிலரை வழக்கில் சேர்க்கவில்லை என்று சிறப்பு புலனாய்வுக் குழு தெரிவிக்கிறது.

எனினும் இம்மாதம் ஏழாம் திகதி (ஜூன் 7) சிறப்பு புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயனை தம் முன்பாக ஆஜராகும்படி ஜெயின் கமிஷன் ஆணையிட்டுள்ளது.

ஜெயின் கமிஷனின் சந்தேகங்களால் தி.மு.க. அரசுக்கு அரசியல் ரீதியாக சில சங்கடங்களை ஏற்படுத்தலாம் என்று கூறப்படுகிறது.

ராஜீவ் கொலையில் தி.மு.க.வுக்கு ஒரு தொடர்பும் கிடையாது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது என்று தி.மு.க. கூறிவந்தது. தற்போது சுப்புலட்சுமி ஜெகதீசன் விடயம் கிளறப்படுமானால் அதனால் சங்கடமான நிலை தோன்றலாம்.

இதேவேளை சிறப்பு புலனாய்வு குழுத் தலைவராக இருந்த கார்த்திகேயன் தம்மீதான குற்றச் சாட்டுக்களை மறுத்துள்ளார்.

"விசாரணை தொடர்பான சந்தேகங்கள் புலிகள் ஆதரவு நிலையிலிருந்து கேட்கப்படுகின்றன. யாரோ சிலர் புலிகளுக்கும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் உதவ முயற்சிக்கிறார்கள். கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட இன்னும் சில புலிகள் இருக்கலாம். அதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை). பெரிய கேள்விகளுக்கு விடை கிடைத்தாயிற்று. புலிகள் தவிர வேறெந்த அமைப்பும் இதில் ஈடுபடவில்லை." என்று கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

## நேர மாற்றத்தால் மாணவிகள் திண்டாட்டம்

## விஞ்ஞானிகளும் மாறுபட்ட கருத்து

இலங்கை நேரத்தை ஒரு மணி நேரமாகக் கூட்டி வைத்தமை ஒரு புறம் வரவேற்பையும், மறுபுறம் கண்டனத்தையும் எதிர்நோக்கியுள்ளது. குறிப்பாக பல்கலைக்கழக மட்டத்தில் உள்ள அறிவியலாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோர் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

மின்சக்திப் பாவனையைக் கட்டுப் படுத்துவதற்காக நேரமாற்றம் நடைமுறைப் படுத்தப் படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இத்தகைய நேரமாற்றத்தினால் மின் பாவினையைக் குறைப்பதில் எத்தகைய நற்பலனும் ஏற்படப் போவதில்லை என்று தொழில் நுட்பத்துறை அமைச்சர் பேர்னாட் சொய்சாவை சந்தித்த விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மொறட்டுவையிலுள்ள ஆர்தர் சி.கிளார்க் மையத்தின் தலைவர் பேராசிரியர் சாம் கருணரத்ன தகவல் தருகையில், "இந்நாட்டிலுள்ள தொழிற்துறைகள் எந்த வகையிலும் அவற்றுக்குரிய வேலை நேரத்தைக் குறைக்கப் போவதில்லை. காலையில் ஒரு மணி நேரம் முன்னதாக வேலைக்குச் செல்லும் தொழிலாளி எப்படியும் 8 மணி நேரம் வேலை செய்துதானாக வேண்டும். ஆகவே நேரத்தை முன்னரக்கி வைப்பதன் மூலம் மின்சக்தியினை மிச்சப்படுத்த முடியாது," என்று தெரிவித்துள்ளார்.

சாதாரணமாக பொழுது புலர்ந்த பின்னர் காலை நேர வெளிச்சத்தில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வேலைக்குச் செல்லும் ஊழியர்கள் புதிய நேரத்தின்படி அதிகாலையில் மின் விளக்குகளைப் பயன்படுத்தியாக வேண்டும். இரவு வேளையில் மிச்சப்படுத்தும் அதே மின் சக்தி அதிகாலை வேளையில் மேலதிகமாகவும் செலவிடப்பட நேரிடுகிறது.

காலை 7.15க்கு சில பாடசாலைகள் ஆரம்பமாகின்றன. போக்குவரத்துச் சாதன வசதியீனங்களைக் கருத்தில் கொண்டு சில பெண் பிள்ளைகள்-முன்பெல்லாம் காலை 6.00 மணிக்கே பஸ் தரிப்பிடம் வந்து விடுவார்கள். இளங்காலைவேளை போதுமான வெளிச்சம் அப்போது இருக்கும், இப்பொழுது-பழைய கணக்குப்படியான காலை 5.00 மணிக்கு இருள் சூழ்ந்துள்ள நேரத்தில் பஸ் தரிப்பிடம் வந்து ஒரு பெண்பிள்ளை காத்திருப்பதானால் பல சிரமங்கள் தோன்றும்.

வேளைக்குத் தூங்கி அதிகாலையில் விழித்துக் கருமங்களைத் தொடங்குவது நல்லதுதான். ஆனால் அரசாங்கமே இத்தகைய ஒரு முறையை நடைமுறைப்படுத்துவதனால் ஏற்படப்போகும் பாதக விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பில் புறக்கணிப்பு

## தமிழ்-முஸ்லிம் பெண்களுக்கு தடையா?

(பலப்பிட்டி)

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வதற்கு தமிழ், முஸ்லிம் பெண்களுக்கு இருந்து வந்த சலுகைகள் படிப்படியாக குறைந்து வருவதாக குறைகள் தெரிவிக்கப்படுகின்றன.

இன, மொழி, சமய பேதமற்று-சகலருக்கும் சம அந்தஸ்து வழங்குவதாக அரசாங்கம் அறிவித்தாலும்-அதிகாரிகள் இதற்கு நேர் மாற்றமாக நடந்து கொள்வது தமிழ்- முஸ்லிம் மக்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளும் ஒரு நடவடிக்கையாக அமைந்துள்ளது.

வெளிநாடு செல்லும் தமிழ்-முஸ்லிம் பெண்களுக்கு தமிழ் மொழி மூலம் பயிற்சி நிலையங்கள் தமிழ்-முஸ்லிம் பகுதிகளில் ஏற்படுத்தப்படவில்லை.

அநுராதபுரத்தில் மட்டும் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்தி இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. தூரப் பகுதிகளில் வாழும் பெண்களால் இங்கு பயிற்சி பெறுவது மிகவும் கஷ்டமான ஒரு வேலையாகும்.

பயிற்சி பெறுவோர் சிங்கள மொழியில் 5ம் வகுப்பு சித்தி அடைந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதும் தமிழ்-முஸ்லிம் சமூகத்தினரிடம் அதிருப்தி ஏற்படுத்தும் செயலாகும்.

இது பற்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலைய அதிகாரி ஒருவரிடம் விசாரித்த போது கிடைத்து பதில் இதுதான்:-

சிங்கள மொழியில் 5ம் வகுப்பு சித்தி அடைந்த பெண்களுக்கே பயிற்சி வழங்கப்படும். இதுதான் எமது திட்டம் என தெளிவாக எடுத்துக் கூறினார்.

இதேபோன்று இன்னொரு நடவடிக்கையும் இதற்கு முன் மெற்கொள்ளப்பட்டதாம். வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்காக ஆண்களிடம் விண்ணப்பங்களை அரசு கோரியது. இந்த விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழியில் விரும்பும் தொழில் எது என குறிப்பிடும்படி கோரப்பட்டிருந்தது.

தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தொழில் விபரம் கேட்கப்பட்டிருக்கவில்லை. அந்த விண்ணப்பப்படிவங்களால் எவ்வித பலனும் ஏற்படவில்லை.

## அதிகாலையில் மட்டக்களப்பு சுறுசுறுப்பு

# நேரமாற்றத்திற்கு மாறான வீதித்தடை

(ஏறாவூர் நிருபர்)

**25.05.96** அன்று முன்கூட்டி வைக்கப்பட்ட நேர மாற்றத்தின்படி மட்டக்களப்பு நகர் அதிகாலையிலேயே சுறுசுறுப்படைந்து விடுகிறது. காரியாலயங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் என்பனவற்றில் புதிய நேரப்படி கருமங்கள் ஆரம்பித்து விடுகின்றன. வைகறைப் பொழுதிலேயே அலுவல்கள் தொடங்கிவிடுவதால் பலர் மனதில் ஒரு வித மகிழ்ச்சி உணர்வு காணப்பட்டாலும் வேறு சிலருக்கு இந்நேரமாற்றம் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பது தெரியவருகிறது. பழைய நேரப்படி வழக்கமாக காலை பத்துமணிக்கு காரியாலயங்களுக்கு வரும் உத்தியோகத்தர்கள் பாடு இப்போது பெரும் கஷ்டமாகவே உள்ளது.

இது ஒரு புறமிருக்க, இந்நேரமாற்றம் வாழைச்சேனை, கல்முனைப் பகுதிகளிலிருந்து மட்டக்களப்பு வரும் ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், நோயாளர்களைப் பார்வையிடுவோர் ஆகியோருக்குப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், பிரதான வீதிகளில் ஆங்காங்கே நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் வழக்கமாக பழைய நேரப்படி காலை 6.30 மணிக்கே வீதித் தடைகளை அகற்றிப் போக்குவரத்திற்கு வழி விடுகின்றனர். எனவே இது புதிய நேரப்படி காலை 7.30 மணியாக இருக்கும். புதிய நேரம் காலை 6 மணிக்கு கிழக்கில் இருள் கவிந்திருக்கும் வேளையாகும். இதனாலேயே சூரியன் உதயமாகி இருள் பிரியும் வேளையாகிய காலை 7.30 மணிக்குப் படையினர் வீதித் தடைகளை அகற்றி வழி விடுகின்றனர்.

தூரப் பகுதியிலிருந்து நகருக்கும், நகரிலிருந்து தூரப் பகுதிகளுக்கும் காலையில் அலுவல்களுக்குச் செல்லும் மேற் சொன்ன தரப்பினருக்கு இது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. புதிய நேர மாற்றத்தைக் கருத்திற் கொள்ளாது தொடர்ந்து இந்த வீதித் தடை இருந்து வந்தால் அநேகமானோருக்கு அதிக சிரமத்தை ஏற்படுத்தி, அலுவலகங்கள், பாடசாலைகளில் இது நிருவாகப் பிரச்சனைகளை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

## புலிகளுக்கு உதவிய பொலிஸ் அதிகாரி

**25.05.96** அன்று ஆறுமுகத்தான் குடியிருப்பு சோதனைச் சாவடியில் இ.போ.ச. பஸ்ஸில் மதுபோதையுடன் கடமையில்லாது வந்து கொண்டிருந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இருபொலிஸார் பஸ்ஸிலிருந்த கிராமசேவகர்களையும் சில பத்திரிகை நிருபர்களையும் இறங்கிச் செல்லுமாறு கேட்டு பஸ்ஸைப் பின்னோக்கி இழுத்துப் போடச் சொல்லி கலாட்டா பண்ணினர். பின்னர் நிலமை அவ்விடத்தில் சிக்கலாகவே, மன்னிப்புக்கேட்டு இடை நடுவில் ஒடி மறைந்தனர். இத்தனைக்கு மத்தியில் அவ்விடத்திற்குப் பொறுப்பாக இருந்த பொலிஸார் வேடிக்கை பார்த்தனர்.

இதனிடையே, சமீப நாட்களுக்கு முன்னர் ஏறாவூருக்கு பொறுப்பாகவிருந்த பொலிஸ் உயரதிகாரியொருவர் பல ஊழல், இலஞ்சக் குற்றச்சாட்டுக்களில் மாட்டியிருக்கிறார். மரவியாபாரம், கஞ்சா வியாபாரம், என்பவற்றுடன் சம்பந்தப்பட்டிருந்தாரென்றும் புலிகளுக்கு பற்றரி மற்றும் வேறு பல பொருட்களையும் வழங்கி பெருந்தொகைப் பணம் பெற்றார் என்றும் விஷயமறிந்த தரப்பினர் தெரிவிக்கிறார்கள். கடைசியாக 2 1/2 இலட்ச ரூபா பெறுமதியான டோர்ச் பற்றரிகளைப் புலிகளுக்கு வழங்கியிருந்தார் என்றும் கூறப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## தமிழக அரசியல்

# மீள்வாரா ஜெயலலிதா?



தமிழகத் தேர்தல் முடிவுகள் தந்த அதிர்ச்சியில் இருந்து ஜெயலலிதா மீளவில்லை. அதற்குள் அவரது உடன் பிறவா சகோதரி சசிகலாவுக்கு அந்நியச் செலவாணி மோசடி தொடர்பான வழக்கில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தனக்கும், சசிகலா குடும்பத்திற்கும் எதிரான வழக்குகள் சரமாரியாகத் தொடுக்கப்படும் என்பதை ஜெயலலிதா அறியாதவரல்ல. அதனால் கட்சியை தனது கேடயமாக பயன்படுத்துவது தவிர அவருக்கு வேறு வழியில்லை.

கட்சியும், தொண்டர்களும் தன்னோடு இருக்கிறார்கள் என்று காட்டினால்தான் தன்மீது கைவைக்க தயங்குவார்கள் என்று நினைக்கிறார் ஜெயலலிதா.

அப்படியில்லை என்றால், இப்போது ஏற்பட்ட தொல்வியைக் கண்டு கட்சியைவிட்டே போயிருப்பார் ஜெயலலிதா.

கோடிகோடியாகச் சேர்த்த சொத்தை பாதுகாக்க வேண்டுமானால் கட்சித் தலைவி என்ற அரசியல் பலம் தேவை.

அதனால்தான் கட்சியை கட்டிப் பிடித்துக்கொண்டு இருக்கிறார் ஜெயா.

இதேவேளை தமிழ்நாட்டில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் குண்டு வெடித்திருக்கிறது. குண்டு வெடிப்பால் கோயிலுக்கு சேதமில்லை. யாருக்கும் காயமுமில்லை.

ஆனால், ஜெயலலிதா கண்டன அறிக்கை விட்டிருக்கிறார். "புதிய ஆட்சியினர் வெற்றிக் களிப்பில் இருக்காமல், வன்முறைகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்" என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்.

அதனையடுத்து ஒரு சந்தேகம் உருவாகியுள்ளது. மதுரை மீனாட்சி கோயில் குண்டு வெடிப்பு ஜெயலலிதா ஆதரவாளர்களின் செயலாக இருக்கலாமோ என்பதுதான் சந்தேகம்.

"தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சியில் வன்முறை பெருகிவிட்டது" என்று ரஜினி முன்னர் குற்றம் சாட்டியிருந்தார்.

"ஜெயலலிதா வெற்றி பெற்றால் அந்த ஆண்டவனால்கூட தமிழ் நாட்டை காப்பாற்ற முடியாது" என்று ரஜினி கூறியிருந்தார்.

அதற்குப் பதிலடியாக, "அந்த ஆண்டவனைக்கூட தி.மு.க. ஆட்சியால் காப்பாற்ற முடியவில்லையே" என்று காட்டத்தான் குண்டு வெடிப்பு நடந்ததா? அதுதான் சந்தேகத்தின் பின்னணி.

புதிய அரசுமீது நெருக்கடிகளை ஏற்படுத்தி மக்களது கவனத்தை திசை திருப்பவும் ஜெயலலிதாவின் உள்வீட்டு ஆலோசகர்கள் குண்டுவெடிப்புக்கு ஏற்பாடு செய்திருக்கலாம்.

பொலிசாரும் அந்தக் கோணத்தில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

அ.தி.மு.க. தொண்டர்கள் ஜெயலலிதாவை இப்போதும் எதிர்க்கவில்லை. கட்சியில் ஜெயலலிதாவுக்கு மாற்றாக யாரும் இல்லை என்பதும் அதற்கு ஒரு காரணம்.

"சசிகலாவை வெளியேற்றுங்கள்! துரோகிகளை விரட்டுங்கள்!" என்று தொண்டர்கள் கோஷம் போடுகிறார்கள்.

ஆனால், இனி ஜெயலலிதாவே விரும்பினாலும் சசிகலாவை விரட்ட முடியாது. அந்தளவுக்கு ஜெயலலிதாவின் பலவீனங்களை வைத்து கிடுக்குப்பிடி போட்டுவிட்டது சசிகலா குடும்பம்.

தனிமையில் வாடிய ஜெயலலிதாவுக்கு வீடியோ கசட் கொடுத்தே நெருக்கமாகி, இறுதியாக ஜெயலலிதாவையே ஆள்பவராக மாறிவிட்டார் சசிகலா.

"சசிகலா எங்கும் போகமாட்டார். என்னோடுதான் இருப்பார்" என்று ஜெயலலிதா சமீபத்தில் அறிக்கை விடுத்தார். சசிகலாவே அந்த அறிக்கையை சகல பத்திரிகைகளுக்கும் அனுப்பிவைத்தார்.

ஜெயலலிதாவுக்கு மீண்டும் ஆட்சி கிடைத்தாலும் கிடைக்கலாம், ஆனால் சசிகலாவிடம் இருந்து மீட்சிமட்டும் இல்லை.

எம்.ஜி.ஆர். உருவாக்கிய கட்சி ஜெயலலிதாவின் பலவீனத்தால் பாழ்பட்டுக் கொண்டிருக்கிறது.

# யாழில் புனர்வாழ்வுக்கான கணக்கெடுப்பு!

யாழ் குடாநாட்டில் மீளக்குடியேறியுள்ள பொதுமக்களிடம்- வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணி தொடங்குகிறது. அங்கு வாழ்ந்த 500,000 குடி மக்களின் விபரங்களைத் திரட்டும் நோக்குடன் கொழும்பிலுள்ள அமைச்சின் அதிகாரிகளே இக்கணக்கெடுப்பை நடத்த விருக்கின்றனர்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் வட மாகாணத்துக்கான தலைவர் சோமபால குணதீர இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார். குடி மக்கள் இழந்த பொருட்களின் விபரங்கள் மற்றும் அன்றாட வாழ்க்கைக்கான தேவைகளை அவர்களிடமிருந்து அறியும் பொருட்டு அச்சிடப்பட்ட வினாக் கொத்து வீடுகள் தோறும் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணத்துக்கான புனர்நிர்மாணத் திட்டங்கள் தொடர்பாக சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் இவை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவிருப்பதாகவும் திரு. குணதீர குறிப்பிட்டார். இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 13.5 பில்லியன் ரூபாவுக்குமேல் தேவைப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# நோயாளரிடம் மருந்து கொள்ளை

(குருணாகல் நிருபர்)

குருணாகல் நகரில் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெறும் நோயாளர்களிடம் இருந்து, அவர்களுக்கு தேவையான மருந்தை அதிக அளவில் பெற்று மிகுதியை கையாடல் செய்யும் வேலை நீண்ட காலமாக நடைபெற்று வருவது அறியக் கிடைத்துள்ளது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது.

நோயாளரை விசேட மருத்துவர் பரிசீலனை செய்து சென்ற பின்னர் மருந்துப் பட்டியல் ஒன்று வழங்கப் பட்டு அவற்றை வெளியார் மருந்துக்கடைகளில் வாங்கி வரும்படி கேட்கப்படுகின்றதாம். அவை அதிகளவு எண்ணிக்கையாக உள்ளன. அவற்றை வாங்கி கொடுத்தபின் குறிப்பிட்டளவு நோயாளருக்கு வழங்கப்பட்ட பின்னர் ஏனையவை கையாடப்படுகின்றன. இவை மீண்டும் தனியார் மருந்துக் கடைகளைச் சென்றடைகின்றன.

இக் குறிப்பிட்ட மருத்துவ மனையிலே சகல மருந்துவகைகளையும் உள்ளடக்கிய மருந்தகம் ஒன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத் தவறான செய்கைக்கு அங்கு கடமையாற்றும் சில தாதிமார்களின் துணை யும் இருப்பதை பலரும் குறை கூறுகின்றனர். அண்மையில் மருத்துவர்களின் வேலை நிறுத்தம் இடம்பெற்ற போது இக்குழு தாராள மாக தம் பைகளை நிரப்பிக் கொண்டதாம். விலை கூடிய மருந்து வகைகளுக்கே இந்தக் கதி. எனவே தனியார் மருத்துவமனைகளுக்கு சிகிச்சை பெறச் செல்பவர்கள் சற்று அவதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டும். அண்மையில் ஓய்வு பெற்ற அரச உயரதிகாரி ஒருவர் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறி, தன்னை ஏமாற்றப் பார்த்தார்களெனவும், தான் நிர்வாகத்திடம் முறையிட்டதாகவும் கூறி தனக்கே இக்கதி எனில், பாமரர்கள் என்ன பாடுபடுவார்களோ எனக் கவலைப்பட்டார்.

# தி.மு.க.வின் கவலை

பாரதிய ஜனதாக் கட்சிக்கு ஆதரவு தரமாட்டோம் என்று தி.மு.க. முதலில் கூறவில்லை. ஆராய்வோம் என்று அறிவித்தது. பாரதிய ஜனதா தீண்டத்தகாத கட்சியல்ல என்று முரசொலிமாறன் கூறியிருந்தார்.

காரணம் என்ன? பாரதிய ஜனதா கட்சியால் ஆட்சி அமைக்க கூடிய நிலை தோன்றினால் நட்பை ஏற்படுத்தவே கருணாநிதி திட்டம் போட்டார்.

ஏனெனில் மத்திய ஆட்சியோடு பகைத்துக் கொண்டு தமிழ் நாட்டில் ஆட்சி செய்வது சிரமம். ஆட்சிக் கலைப்பு அபாயம் உண்டு. ஜெயலலிதாவுக்கும் பாரதிய ஜனதாவுக்கும் ஏற்கெனவே உளவு இருக்கிறது. இந்நிலையில் பாரதிய ஜனதா ஆட்சி அமைக்கக் கூடிய பலம் பெற்றால், அதனை ஆதரிப்பதே புத்தி சாலித்தனம் என்பது தி.மு.க.வின் திட்டம்.

பாரதிய ஜனதா ஆட்சி நிலைக்காது என்று உறுதியாகத் தெரிந்த நிலையில்தான் தி.மு.க. பல்டி அடித்தது. எக்கட்டத்திலும் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவில்லை என்று அறிவித்தது.

மத்தியில் நிலையான ஆட்சி அமைவது பற்றிய கவலையைவிட, தமிழ் நாட்டில் தமது ஆட்சி நிலைக்க வேண்டும் என்ற கவலைதான் தி.மு.க.வுக்கு முதன்மையான கவலை.

# பூட்டிய கதவு திறக்குமா? புதுப் பொலிவு காணுமா?

(நிந்தவூர் நிருபர்)


சம்மாந்துறை பிரதம தபாலகத்திற்கான நிரந்தர தபாலகக்கட்டிடம் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இழுத்து மூடப்பட்ட நிலையில் தூங்கிக் கொண்டிருக்கின்றது.

இக்கட்டிடத்துடன் இணைந்ததாக அமைந்துள்ள தபால் அதிபருக்கான சிறிய விடுதியில், பல்வேறு அசெளகரியங்கள்- வசதியீனங்களுக்கு மத்தியில் பிரதம தபாலகம் இயங்கி வருகின்றது.

முன்னைய ஐ.தே.க. அரசாங்க காலத்தில், முன்னாள் பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.ஏ.அப்துல் மஜீதின் பெரு முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட இந்த நிரந்தர தபாலகக் கட்டிடத்தை முன்னாள் ஜனாதிபதி திரு. டி.பி.விஜேதுங்க, தபால் அமைச்சராக இருந்த சமயம் 1979ம் ஆண்டு ஜூன் மாதம் வைபவரீதியாகத் திறந்துவைத்தார்.

எனினும் இந்த தபாலக கட்டிடத்தின் கூரை மற்றும் ஜன்னல்களில் ஏற்பட்ட சேதங்கள் காரணமாக மழைக்காலங்களில் ஒழுக்கு ஏற்பட்டு தபாலக ஆவணங்கள், தளபாடங்கள் சேதமுறும் அவலம் ஏற்பட்டது.

இதனால் கடந்த 1994 ம் ஆண்டு டிசம்பர் மாதம் அளவில் இத்தபாலகக் கட்டிடம் இழுத்து மூடப்பட்டதுடன் அருகிலுள்ள தபாலதிபருக்கான விடுதியில் தபாலகம் இயங்கவும் ஆவனசெய்யப்பட்டது.



தரம் ஒன்றைச் சேர்ந்த இத் தபாலகத்தின் கீழ் எட்டு உபதபாலகங்கள் இயங்கி வருவதுடன், மூன்று உதவி தபாலகங்களும், தபாலதிபருடன் ஏழு தபால் சேவையாளர்களும் கடமையாற்றிவருகின்றனர்.

தற்பொழுது தபாலகம் இயங்கும் தபால் அதிபருக்கான விடுதிக்கட்டிடம் சிறிய அளவினதாக இருப்பதால் பெரும் சிரமங்களுக்கும், அசெளகரியங்களுக்கும் மத்தியிலேயே தபாலதிபர்களும், தபால்சேவையாளர்களும் தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேபோல் தபாலகத்திற்கு வரும் பொதுமக்கள் எறிக்கும் வெய்யிலிலும், கொட்டும் மழையிலும் நின்றவாறே தபாலகக் கருமங்களை முடிக்கவேண்டிய நிலை உள்ளது.

தபாலகக் கட்டிடத்தின் அவலம் குறித்து தபால் திணைக்கள உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு ஏற்கனவே அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு, ஒரு வருடத்திற்கு மேலாகியும் பயன் எதுவும் கிடைத்ததாக இல்லை! பூட்டிய கதவு பூட்டிய படியே காட்சியளிக்கின்றது.

# நஷ்டஈடு எப்போது?

(மன்னார் நிருபர்)

கடந்த கால வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு தங்களது வீடுகளைத் திருத்தவும் உடமைகளைக் கொள்வனவு செய்யவுமென வழங்கப்பட வேண்டிய நஷ்டஈட்டுக்கொடுப்பனவுக்காக விண்ணப்பித்த மன்னார்ப்பகுதி ஊழியர்கள் ஏமாற்றமடைந்த நிலையிலுள்ளனர்.

"காலங்காலமாக மன்னார்ப் பகுதி பல்வேறு வகையினாலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற இவ்வேளையில் இக்கொடுப்பனவு வழங்குவதிலும் தாமதம் காட்டுவது குறித்து நாம் மிகுந்த வேதனையடைகிறோம்" என இங்குள்ள அரச ஊழியர் ஒருவர் மனம் நொந்துகொண்டார்.

இக்கொடுப்பனவை உடன் வழங்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

துறைமுகங்கள், கப்பற்றுறை, புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் இது விடயமாக கூடிய கவனம் செலுத்துமாறு இப் பகுதியிலுள்ள அரச ஊழியர்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.


பயிற்சி பெற்ற ஆசிரியரால் Dress Making, Fabric Painting, Costume Jewellery வகுப்புகள் நடத்தப்படுகின்றன. விபரங்களுக்கு

Ms. J. LORETTA
82,1/19, SRI RAMANATHAN FLATS, COL-13
☎ 338351



## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
போன்: 421398



வீட்டில் இருந்தவாறே World Class பட்டப் படிப்பு அல்லது 10 மாத கால பயிற்சி நெறி கற்க அரிய வாய்ப்பு. (ஆண்/பெண் இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)

## CITY & GUIDS LONDON EXAM 1997

Electrical & Electronics Engineering PART I, II, & III.
Communication, Radio, Television வகுப்புக்கள் வெள்ளவத்தையில்

சாதாரண வகுப்பு
செய்முறைப் பயிற்சியுடன் சனி ஞாயிறு மாலை வகுப்புக்கள் ஆரம்பம் 03.06.96 முன்பு விண்ணப்பிக்கவும்.

தபால் மூலம் (1 வருடம்) மாதாந்தம் விரிவுரை வகுப்பு ஒன்றும் செய்முறை வகுப்பு ஒன்றும் நடாத்தப்படும். ரூபா 50 கொண்ட M.O அனுப்பி விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 15.06.96

APSS 116 A 2/1, காலி வீதி, வெள்ளவத்தை. Tel : "JET PRINTS" - 594569



வெளிவந்துவிட்டது...

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7,8,9,10
கல்வி மஞ்சரி
O/L வினாவிடை
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2

BRIGHT BOOK CENTRE
S-27, First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770



## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S. மணி

மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030



## ஆயுள் கண்ணாடி ஜாதகம்

உங்கள் ஜாதக அமைப்பின்படி எந்த வீட்டில் எந்த கிரகம் நிலை பெற்றுள்ளது. அதன் முன் விளைவு பின் விளைவு எப்படி அமையும்? கணவர் மனைவி எப்படி அமைய வாய்புள்ளது? அத்துடன் மாத வாரி பலனுடன் நீங்கள் எழுதி எடுக்க இந்த பாரத்தை பூர்த்தி செய்து ரூ.1500 மணி ஆடர் செய்தால், பிற ஜோதிடர் உதவியின்றி நீங்கள் உங்கள் வீட்டில் இருந்தபடியே ஜாதகத்தை கண்ணாடி போல் தெரிந்து கொள்ளலாம்.

வெளிநாட்டவர்கள் ரூ.2750 அனுப்பவும்

முழுப்பெயர்-
பிறந்ததிகதி-
நேரம்.................... காலை-மாலை............
பிறந்த மாவட்டம்....................
ஆணா பெண்ணா........................
தமிழ், ஆங்கிலம், மலையாளம், சமஸ்கிருதம், தெலுங்கு, இந்தி, அரபு எந்த மொழியில் தேவை....................

முகவரி: ஜோதிட மாந்திரிக சக்கரவர்த்தி
டாக்டர் பி.கே. சாமி [J.D.G.A.N.]J.P.
பி.கே. சாமி அஸோஸியட் பிரைவேட் லிமிடட்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு–13
கொழும்பு தொலை பேசி இல. 01-342463-342464-344831-344832
நுவரெலியா தொலை பேசி இல-052-2508-3093-3336-3570



## விளம்பரப் பகுதி

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

முதற்தர பாதணி விநியோக ஸ்தாபனமொன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. பிணை (SECURITY) அவசியம். மிகவும் வசீகரமான தரகுகளும் சலுகைகளும் வழங்கப்படும்.

உடன் விண்ணப்பிக்கவும்:-

சிட்டி ஷூ கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்,
125, காலி வீதி, பள்ளி-முல்லை,
பாணந்துறை.





## மின்சார வேக மலையாள மாந்திரீக சக்தி

ஆத்மாக்களின் எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேறினால் மாத்திரமே ஆத்ம திருப்தி அடைகிறார்கள். கேட்டவருக்கு கேட்டவரம் தரும் ஸ்ரீ துர்கா தேவியின் அற்புத அருள் கொண்ட உலக மாந்திரீக சக்கரவர்த்தி திரு.பீ.கே.சாமி அவர்களை அணுகினால் கோரிக்கை கொடுக்கும் அன்பர்களுக்கு இத்தனையாம் திகதி இத்தனை மணிக்கு தங்கள் வேலை பூர்த்தியென சான்றிதழ் வழங்கப்படும். அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்ட தனியார் லிமிட்டட் கம்பனி இது ஒன்றேயாகும். எத்தனை எத்தனையோ வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் அம்மால் வெற்றிபெற்ற சான்றிதழ்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. சான்றிதழ்களை நேரில் பார்வையிடலாம். ...

Dr.பி.கே.சாமி (J.D.G.A.N)JP
பி.கே.சாமி அஸோஸியட் பிரைவட் லிமிட்டட்
இல.162, மே பீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13

FAX-00941342464
052-2508-3093-3570-3336




படிப்பகம்

www.padippakam.com

**1977ல்** நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியால், 'அடுத்த பொதுத்தேர்தலுக்குள் 'தமிழ் ஈழம்' என்று காலக்கெடு விதிக்கப்பட்டது.

மிகப் பரவலாக தமிழ் பேசும் மக்கள் அறியக்கூடியதாகச் சொல்லப்பட்ட 'காலக்கெடு' அதுதான்.

அந்த 'காலக்கெடு' உருவாக்கிய நம்பிக்கைகள் மிகப் பாரியவை. பச்சைத் தண்ணீரில் பலகாரம் சுட்டுத்தருவோம் என்பதுபோல, தமிழர் விடுதலைக் கூட்டணி வழங்கிய வாக்குறுதி அது.

அதன்பின்னர் பல்வேறு காலக்கெடுக்கள். 'அடுத்த மேதினத்துக்குள் தமிழீழம்', 'அடுத்த பொங்கலுக்குள் தமிழீழம்' அவ்வாறு தொடர்ந்து இறுதியில் புலிகள் விதித்த காலக்கெடு 'மூன்றாம் கட்ட ஈழப்போரின் பின்னர் ஈழம் உருவாகும். இதுதான் இறுதி யுத்தம்.'

போர் நிறுத்தத்தைக் கைவிட புலிகள் காலக்கெடு விதித்தபோது, "இனி போர் தொடங்கினால் இதுதான் இறுதி யுத்தமாக இருக்கும்" என்று மக்களிடம் சொல்லியிருந்தனர்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்பின்னர் இறுதி யுத்தம் என்பது தவறான கணிப்பாகி, நீண்டகால யுத்தக் கட்டத்துக்குள் புலிகள் பிரவேசிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

ஆக, இதுவரை விதிக்கப்பட்ட காலக்கெடுக்கள் எதுவுமே, காலக்கெடு விதித்தவர்களால் தமது பலம், எதிர்தரப்பு பலம், உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் சூழல் என்பவற்றை கணிப்பிட்டு விதிக்கப்பட்ட காலக்கெடுக்கள் அல்ல.

இப்போது அரசின் முறை. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் அரச தரப்பில் இருந்து காலக்கெடுக்கள் விதிக்கப்படுகின்றன.

"சித்திரை புது வருடத்திற்கு முன்னர் புலிகளை முறியடித்து யுத்தத்திற்கு முடிவு கட்டுவோம்" என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஒரு காலக்கெடு விதித்திருந்தார்.

ஆனால், சித்திரை வருடம் பிறந்த பின்னர்தான் சூரியக்கதிர் 3 இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க முடிந்தது. சூரியக்கதிர் மூன்றின் பின்னரும் யாழ் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்திருக்கிறதே தவிர யுத்தம் முடிவடைந்து விடவில்லை.

இப்போது மற்றொரு 'காலக்கெடு' அரச தரப்பில் இருந்து சொல்லப்படுகிறது. "இந்த வருட இறுதிக்குள் புலிகளை வென்று, போருக்கு முடிவு காண்போம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியே அதனைச் சொல்லியிருக்கிறார்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதை விட போருக்கு முடிவு காண்பது சுலபம் என்று அரசாங்கம் நினைக்கத் தொடங்கியிருந்தால் அதில் ஆச்சரியமில்லை.

யாழ்-குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கு முன்னரும், வந்த பின்னரும் என்று இரு கட்டங்கள் இருக்கின்றன.

இரு கட்டங்களின்போதும் அரசாங்கம் உண்மை நிலவரத்திற்கு மாறான கணிப்புக்களையே செய்தது, செய்துவருகிறது.

யாழ்-குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கு முன்னர் புலிகளின் பலம் தொடர்பாக, புலிகளது பலத்தையும் மீறிய பலமடங்கு அதிகமான மதிப்பீட்டை அரச தரப்பு கொண்டிருந்தது.

புலிகளது பலத்தை மீறி, யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் என்று அரச தரப்போ, படைத் தரப்போ நிச்சயமான நம்பிக்கையை கொண்டிருக்கவில்லை.

பாரிய ஒரு படை நடத்தல் மூலமாக புலிகளது அணிகளை பின்னடையச் செய்ய ஆரம்பித்தபோதுதான் தொடர்ந்து முன்னேறலாம் என்ற நம்பிக்கை படைத்தரப்புக்கு ஏற்பட்டது.

புலிகளது இராணுவ பலம், பலவீனம் தொடர்பாக சரியான மதிப்பீடு இல்லாமல் இருந்தமையால், புலிகளது அணிகள் பின்வாங்கியமை படைத்தரப்புக்கு ஆச்சரியத்தையும், அளவு கடந்த நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

அந்த நம்பிக்கைதான் சூரியக்கதிரை கட்டம் கட்டமாக முன்னெடுக்கும் திட்டமாக மாறி, யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர படைத்தரப்புக்கு உதவியது.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

இப்போது, காலக்கெடு விதித்து பேசுமளவுக்கு அரசாங்கத்தின் தன்னம்பிக்கையும் வடபுல போர்க்கள நிலவரத்தால் உயர்ந்திருக்கிறது.

இனப்பிரச்சனை தீராவிட்டால் யுத்தமும் தீராது என்ற நிலைப்பாட்டுக்கு பதிலாக, புலிகளை ஒழித்துவிட்டால் யுத்தம் தீர்ந்துவிடும் என்ற நிலைப்பாட்டுக்கு அரசு மாறிக்கொண்டிருக்கிறது.

வடபுலத்தில் அரிசிக்கும், மாவுக்கும் நீண்ட கியூ வரிசையில் மக்கள் காத்திருக்கிறார்கள். புலிகள் தடுத்தும் கேளாமல் தமது வீடுகளுக்கு மக்கள் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். அதனையெல்லாம் பார்க்கிறபோது 'மக்களது பிரச்சனை அன்றாடப் பிரச்சனை மட்டும்தான். இனப்பிரச்சனை என்பதெல்லாம் கிடையாது. அரசியல் தீர்வை கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் அரிசியை கொடுத்தால் போதுமானது, மக்களை திருப்தி செய்துவிடலாம்' என்றெல்லாம் அரசாங்கம் நினைக்கத் தொடங்கிவிட்டதோ என்று தோன்றுகிறது.

அவர்களைத் தள்ளியது வெறும் இன உணர்ச்சி மட்டுமல்ல; ஒன்றுபட்ட இலங்கைக்குள் கௌரவமாக வாழ முடியாது என்ற உணர்வை தென்னிலங்கை அரசாங்கங்கள் ஏற்படுத்தியிருந்தன. அதன் விளைவுதான் பிரிவதைத் தவிர வேறு வழியில்லை என்ற கருத்து சக்தியாக மாறியது.

எனவே-புலிகள் அல்லது தமிழ் கட்சிகள் தமிழ் மக்களிடம் வேரூன்றி இருந்தால்தான் பிரச்சனை; இல்லாவிட்டால் மக்கள் நல்ல பிள்ளைகளாக, கொடுப்பதை வாங்கிக்கொண்டு இருப்பார்கள் என்று அரசாங்கம் நினைக்குமானால் அது தப்பான கணிப்புத்தான்.

கடந்த காலத்தில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் செய்துபார்த்து தோல்விகண்ட அணுகுமுறை ஒன்றுள்ளது.

வடக்கு-கிழக்கில் தமது கட்சிக் கிளைகளை நிறுவுவது; தமது கட்சி அமைப்பாளர்கள் மூலமாக மக்களுக்கு சலுகைகளை வழங்கி, தமிழ் கட்சிகளை பலவீனமாக்குவது. என்பதுதான் அந்த அணுகுமுறை.

இப்போது ஜனாதிபதி சந்திரிக்காவும் கிட்டத்தட்ட அதே அணுகுமுறையைத்தான் கையாள நினைக்கிறார். யாழ் குடாநாட்டில் அவசர அவசரமாக வெண்தாமரை இயக்க அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

# தனிமைப்படுத்தும் தந்திரோபாயம்

அதனால் புலிகளை முறியடித்துவிட்டால் யுத்தம் மட்டுமல்ல, இனப்பிரச்சனையும் தீர்ந்துவிடும் என்ற கணிப்போடு யுத்த நடவடிக்கைக்கு நிகழ்ச்சி நிரலில் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயால் அவதிப்படும் நோயாளிக்கு காலில் இரும்பாணி ஏறிவிட்டால், புற்றுநோயைவிட காலில் குத்திய இரும்பாணியை எடுப்பதுதான் முதல் பிரச்சனையாக இருக்கும்.

யாழ்-குடாநாட்டு பொதுமக்களின் நிலையும் அதுதான்.

இடம் பெயர்ந்து வீதியிலும், உறவினர் வீடுகளிலும் பல்வேறு சிரமங்கள் மத்தியில் வாழ்ந்த மக்களுக்கு உடனடித் தேவையாக இருப்பது தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதுதான்.

திடீரென்று ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வு யாழ் குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் தலைகீழான மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது.

திடீரென்று வீசிய புயலில் வேரோடு பிடுங்கி எறியப்பட்ட அதிர்ச்சியிலும், அவலத்திலும் இருந்து முதலில் மீண்டாக வேண்டும். அதுதான் யாழ் குடாநாட்டு மக்களுக்கு உடனடியாக உள்ள பிரச்சனை.

அதனை வைத்து யாழ்-குடாநாட்டு மக்கள் அரசியல் அபிலாசைகள் அனைத்தையும் துறந்துவிட்டார்கள். 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள் என்று கணிப்புச் செய்யப்படுமானால் அது தவறானதாகிவிடும்.

இன்றைய அரசுக்கும், ஜனாதிபதிக்கும் யாழ்ப்பாண நிலவரம் புதியதாக இருக்கலாம்.

தொலைபேசி வசதி, மின்சார வசதி, போக்குவரத்து வசதி போன்றவற்றை தாம் செய்து கொடுப்பதன் மூலமாக, புலிகளது நிர்வாகம் எத்தனை பின்னடைவை ஏற்பத்தியிருந்தது என்று காட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது.

ஆனால், அதே வசதிகள் யாவும் இருந்த போதுதான் இன சமத்துவம் தேவை என்ற உணர்வும், எழுச்சியும் வடக்கு-கிழக்கில் ஏற்பட்டன என்பதை மறந்துவிடக்கூடாது.

யாழ் நகரை நவீனமயப்படுத்திய அரச சார்பான பிரமுகரான அல்பிரட் துரையப்பாவை யாழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வசதிகள்தான் முக்கியம் என்று கருதியிருந்தால் யாழ் குடாநாட்டில் அரச சார்பான பிரமுகர்கள்தான் தலைவர்களாக இருந்திருப்பார்கள்.

அத்தனைக்கும் மேலாக 1977 பொதுத்தேர்தலில் வடக்கு-கிழக்கு மக்கள் 'தமிழீழக் கோரிக்கையை' ஆதரித்து ஜனநாயகத் தீர்ப்பு வழங்கியிருந்தார்கள்.

தமிழீழக் கோரிக்கையை ஆதரிக்குமளவுக்கு

வெண்தாமரை இயக்கம் என்பது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவு போன்றதுதான். அரச கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள பகுதியில் அதன் கிளை அவசரமாக திறக்கப்பட்டதிலிருந்தே வெண்தாமரை இயக்கம் அரசாங்க நிறுவனத்திற்குரிய அங்கீகாரம் உள்ள அமைப்பு என்றாகிவிட்டது.

ஆக, அணுகுமுறை பழையது. அதனை செயற்படுத்தும் பாதைதான் புதியது.

கட்சிக் கிளை என்று நேரடியாகச் செல்லாமல், வெண்தாமரை இயக்கம் மூலமாக மக்களை அரசியல் ரீதியாக தமது தரப்புக்கு கொண்டுவர ஜனாதிபதி தூண்டில் போட்டிருக்கிறார்.

இராணுவ ரீதியாக புலிகளுக்கு வலை! அரசாங்க கட்சிக்கு சார்பான அமைப்புக்கள் மூலமாக தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக வலை!

ஜனாதிபதியின் திட்டம் அதுதான்! எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் அரசுக்கும், தமிழ் கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்ட உறவும் ஜனாதிபதியின் புதிய திட்டத்தால் ஆட்டம் காண ஆரம்பித்திருக்கிறது.

ஏனைய தமிழ் கட்சிகளை புலிகள் துரோகிகள் என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கமோ தமிழ் கட்சிகள் தொடர்பாக புலிகள் சொல்வதை முற்று முழுதாக நம்பத் தயாராக இல்லை.

புலிகள் தம்மை எதிர்ப்பதால்தான் இந்த தமிழ் கட்சிகள் அரசாங்கத்தோடு நிற்கின்றன. ஆனால், அரசாங்கத்தின் தீர்வுகளையெல்லாம் தலையாட்டியபடி ஏற்றுக்கொள்ளும் நிலையில் தமிழ் கட்சிகள் இல்லையென்பது அரசாங்கத்திற்கு தெரிந்துவிட்டது.

ஐந்து தமிழ் கட்சிகள் இணைந்து பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பித்த யோசனைகளை படித்துப் பார்த்துவிட்டு, பெரும்பான்மை இன அரசியல்வாதி ஒருவர் இப்படிக் கேட்டாராம்: "என்ன இது, புலிகள் கேட்பதைத்தானே நீங்களும் கேட்கிறீர்கள்?"

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு எதிராக தமிழ் கட்சிகள் ஒரே குரலில் பேசுவது அரசாங்கத்திற்கும் பிடித்தமானதாக இருக்காது.

புலிகளுக்கும், தமிழ் கட்சிகளுக்கும் இடையில் உள்ள பிரச்சனைகளை சகோதர மோதலாகவே பெரும்பான்மை இனத்தின் மத்தியிலுள்ள இனவாதிகள் நோக்குகிறார்கள்.

அந்த சகோதர மோதலை தமது நோக்கங்களுக்கு பயன்படுத்த அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் தமிழ் கட்சிகளை நம்ப அவர்கள் தயாராக இல்லை.

அதே போன்றதொரு கண்ணோட்டத்தைத் தான் அரசாங்கமும் கொண்டிருக்கிறதோ என்று தற்போது தமிழ் கட்சிகள் வட்டாரத்தில் சந்தேகம் உருவாகியிருக்கிறது.

அதற்கு காரணம், யாழ் குடாநாட்டில் உள்ள மக்களை அரசியல் ரீதியாகவும் தமது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவரக்கூடிய சூழலை தோற்றுவிக்க அரசாங்கம் விரும்புவது தான்.

யாழ் குடாநாட்டில் அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு ஆயுத ரீதியாக தடையாக உள்ள புலிகளை அகற்றுவதோடு, தனது அரசியல்



நோக்கங்களுக்கு தடையாக உள்ள சக்திகளையும் ஒரு வரையறைக்கு அப்பால் வளரவிடாமல் தடுக்கவே அரசு விரும்புகிறது.

புனர் நிர்மாண, நிவாரண வேலைகள் ஊடாக மக்களுடன் ஏற்படும் தொடர்பை வைத்து, யாழ் குடாநாட்டில் தனக்கு சாதகமான அரசியல் தலைமை ஒன்றையும் உருவாக்கிக் கொள்ள முடியுமானால் அதனையே அரசாங்கம் முதன்மைப்படுத்தும்.

ஆக, இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் தனது கைகளைப் பலப்படுத்திக் கொண்டு, தான் விரும்புகின்ற, தென்னிலங்கையில் தனது அரசியல் செல்வாக்குக்கு பாதகம் இல்லாத வகையிலான ஒரு அரசியல் தீர்வை வழங்கக்கூடிய சூழலை வடக்கு-கிழக்கில் ஏற்படுத்த அரசாங்கம் விரும்புகிறது.

அவ்வாறான சூழலை ஏற்படுத்தக் கூடிய பரீட்சார்த்தக் களமாக யாழ் குடாநாட்டை மாற்றுவதற்கு அரசாங்கம் விரும்பலாம்.

ஆனால், விருப்பங்கள், அதனை நிறைவேற்ற விதிக்கப்படும் காலக்கெடு என்பவை சூழலைப் பொறுத்தே நிறைவேற முடியும்.

யாழ்-குடாநாட்டில் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்கள் தொடர்வதைத்தான் படைத்தரப்பின் பத்திரிகை அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

புலிகளும் தமது அறிக்கைகளில், தளப்பிரதேசம் மாறியிருக்கிறதே தவிர, தமது பலம் மாறவில்லை என்று தெரிவித்து வருகின்றனர்.

உண்மையும் அதுதான். யாழ் குடாநாட்டு தளப்பிரதேசம் என்பது புலிகள் தமது உண்மையான இராணுவபலத்தைக் கொண்டு வைத்திருந்தது அல்ல.

புலிகள் கெரில்லாத் தாக்குதல்கள் மூலமாக ஏற்படுத்திய உளவியல் தாக்கம் காரணமாக படையினர் தரப்பில் காணப்பட்ட தயக்கம்தான் யாழ் குடாநாட்டை புலிகள் நீண்டகாலம் தளப்பிரதேசமாக வைத்திருக்க உதவியது.

தரைவழியாகவும், கடல் வழியாகவும் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதல்கள் அனைத்துமே கெரில்லா பாணியிலான நடவடிக்கைகள்தான்.

அதனை வைத்து நேரடி மோதல்களில் ஈடுபடக்கூடிய பலமும் புலிகளிடம் போதியளவு இருப்பதாக கருதப்பட்டது.

அவ்வாறான புலிகளது பலத்தை மிறிய கணிப்புக்கள்தான், தற்போது புலிகளது பின்வாங்குதலை புலிகளது எழமுடியாத வீழ்ச்சி என்று நினைக்கவைத்துள்ளன.

யாழ் குடாநாடு தமது கட்டுப்பாட்டில் வருவதற்கு முன்பாக புலிகள் தொடர்பான அதிகளவான மதிப்பீட்டையும், யாழ் குடாநாடு தமது கட்டுப்பாட்டில் வந்தபின்னர் புலிகள் தொடர்பான மிகக் குறைவான மதிப்பீட்டையும் அரசாங்கம் போட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டுமே தவறான மதிப்பீடுகள்.

கெரில்லா தாக்குதலுக்கான தமது சக்திகளையோ, ஆயுதங்களையோ புலிகள் இழந்து விடவில்லை.

ஒரேயடியாக ஆளைக்கொல்லும் நோயை விட, அடிக்கடி வந்து தொல்லைப்படுத்தும் தலைவலிதான் மோசமானது.

கெரில்லாக்களும் தலையிடிதான். தலையிடிக்கு உள்ளாவோருக்கு உடல், உளரீதியில் பல்வேறு தொல்லைகள் ஏற்படும்.

பரந்த நிலப்பரப்பான யாழ் குடாநாட்டில் கெரில்லாக்களுக்கு நடமாடவும், நகர்ந்து இடம்மாறவும் வசதிகள் இருக்கின்றன.

அவற்றையும்மீறி தமக்கு விருப்பமான அரசியல் பிரமுகர்களை உருவாக்குவதென்பது அரசுக்கு சுலபமான காரியமாக இருக்குமா என்பது சந்தேகம்தான்.

யாழ்-குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான திட்டம் இருப்பதாகவும் ஒரு தகவல் கசிந்திருக்கிறது.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் திட்டம் அது.

1. உள்ளூரில் தமக்கு சாதகமான அரசியல் தலைமைத்துவத்தை ஏற்படுத்துவது.

2. பொதுமக்களிடம் இருந்து புலிகளை தனிமைப்படுத்தியாகிவிட்டது. இயல்பு வாழ்க்கையும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகமும் ஏற்பட்டுவிட்டது என்று காட்டுவது.

**நாரதர்**

ஆனால், இது, கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாகிவிடலாம்.

யாழ்-குடாநாட்டில் புலிகள் நடமாடக்கூடிய நிலை இருக்குமானால் தேர்தலில் போட்டியிட எத்தனைபேர் முன்வருவார்கள் என்பது கேள்விக்குறிதான்.

புலிகளால் அச்சுறுத்தல் ஏற்படாது என்ற உத்தரவாதம் கொடுக்கக்கூடிய நிலை இருந்தால்தான் தனக்கு சார்பானவர்களை அரசாங்கத்தால் பகிரங்கத்தில் கொண்டுவர முடியும்.

கிழக்கில் புலிகளது தடையையும் மீறி உள்ளூராட்சித் தேர்தல்கள் நடந்தன. வடக்கிலும் பாராளுமன்ற தேர்தல்கள் நடந்தன. அவ்வாறு ஏன் யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாது என்று அரசாங்கம் யோசிக்கலாம்.

ஆனால், கிழக்கில் புலிகளது தடையை மீறியதில் ஏனைய தமிழ் கட்சிகள்தான் முன்னணியில் நின்றன.

ஆயுதம் தாங்கிய அமைப்புக்கள் என்றரீதியில் அவர்கள் 'ரிஸ்க்' எடுத்துக் கொண்டனர். அதேயளவான முயற்சியை அரசுக்கு சார்பான தமிழ் பிரமுகர்கள் செய்யவில்லை. அதுதவிர, இப்போதுகூட கிழக்கில் உள்ள அரசு சார்பான தமிழ் பிரமுகர்கள் புலிகளை எதிர்த்து பேசுவதில்லை.

புலிகளது கடும் எதிர்ப்பும், கோபமும் தமக்கெதிராகத் திரும்பும் என்றால் யாழ் குடாநாட்டில் எத்தனை பேர் அரசாங்கத்தை பகிரங்கமாக ஆதரித்து களத்தில் குதிப்பர்?

அதுமட்டுமல்லாமல், அரசாங்கம் முன்நிறுத்தும் தனிநபர்களுக்கு புலிகள் குறிவைத்தால், அதனால் நஷ்டமும் அரசாங்கத்திற்குத்தான்.

எனவே, இராணுவ நடவடிக்கைகளது வெற்றியின் மூலமாக, வடக்கு-கிழக்கில் புலிகள் உட்பட, எதிர்காலத்தில் பிரச்சனையாகலாம் என்று கருதப்படும் சக்திகளையும் ஓரம் கட்ட வகுக்கப்படும் வியூகம் பலவீனமானதாகவே இருக்கிறது.

அது தவிர, வடபுல அரசியல், இராணுவ சூழல்கள், மக்களின் மனோபாவம் என்பவை ஜனாதிபதியின் விருப்பத்தை மட்டும் சார்ந்தவையல்ல.

இராணுவ அணுகுமுறைகள், புலிகளின் நடவடிக்கைகள், அரசியல் சூழல்கள் என்பவையைப் பொறுத்தும் அவற்றில் மாற்றங்கள் நிகழும்.

அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் அன்றாடப் பிரச்சனைகளை மட்டும் வைத்துக்கொண்டு தமிழ் மக்கள் எம் பக்கம் என்று அரசாங்கம் பாரியளவில் பிரசாரம் செய்கிறது.

"அரிசி கொடுக்கிறோம். மா கொடுக்கிறோம். மக்கள் நாடி வருகிறார்கள். நம்மோடு நிற்கிறார்கள்" என்று அரசாங்கம் பிரசாரம் செய்கிறது.

புலிகளை தனிமைப்படுத்திவிட்டோம் என்று காட்டுவதற்கு அப் பிரசாரம் தற்போது பயன்படலாம்.

ஆனால், எதிர்காலத்தில் நிலமை மாறினால், 'அரிசி கொடுத்தும், மா கொடுத்தும், தமிழர்கள் வாங்கிக்கொண்டு வஞ்சகம் பண்ணிவிட்டார்களே' என்ற அபிப்பிராயம் தெற்கில் உருவாகும் அபாயமும் உண்டு.

உண்மை நிலவரத்திற்கு மாறான மிகைப்படுத்தல்கள் அவ்வாறான தவறான புரிதல்களுக்கும் இட்டுச் செல்லலாம். ○

# அதிரடி அய்யாத்துரை



**ரெ**ண்டு எழுத்தாரின் முன்னாள் பிரதித் தலைவரின் விசுவாசிகள் அணியொன்று துடிப்பாக நின்று ஒத்துழைக்கிறதாம். எதிரிக்கு எதிரி கூட்டாளி என்ற கொள்கைதானாம். ரெண்டு எழுத்தாரின் பிரபல நடவடிக்கை ஒன்று தொடர்பாக முன்னர் தகவல் கொடுத்ததும் அவைதானாம்! 'குணமான' பெயர் கொண்ட முன்னாள் ரெண்டு எழுத்து பிரமுகரின் தலைமையில்தான் பிரதித் தலைவர் விசுவாசிகள் செயற்படுகிறார்களாம். ரெண்டு எழுத்தாருக்கு பயந்து காட்டில் பதுங்கியிருந்து பின்னர் எதிரிக்கு எதிரியுடன் கூட்டாளியானவையாம். அவையைக் கண்டு போட்டுத்தான் ஏதோ ஒரு தமிழ் கட்சி வந்திட்டுது எண்டு சனம் கதைச்சதாம். பாவம் ஓரிடம், பழி வேறிடம் எண்டு விஷயமறிஞ்ச தமிழ் கட்சி பிரமுகர்கள் சிலர் பெருமூச்சுவிடுகினம்.

**யா**ழுக்கு போகப்போறம் எண்டு தமிழ்கட்சிகள் கேட்டவையல்லோ? போறதெண்டா போகலாம். போக்குவரத்தும் செய்யலாம் எண்டு அரசாங்கம் சொன்னதாம். ஆனாலும் தமிழ் கட்சி பிரமுகர்கள் சிலருக்கு கடும் யோசனை வந்திட்டுது. ஏன் தெரியுமோ? தங்குமிடவசதி, சாப்பாட்டு வசதி, முக்கியமாக பாதுகாப்பு வசதி எல்லாம் உங்கள்பாடுதான் எண்டு சொல்லப்பட்டதாம். கூடவே ஒரு நிபந்தனை. "ஆயுதம் கொண்டுபோகக்கூடாது." இப்ப சொல்லுங்கோ யோசனைவரத்தானே செய்யும்! திரும்பி வரும் மட்டும் திக்திக்தான்.

**த**மிழ் கட்சிகளின் கூட்டமைப்புக்குள் புகைச்சல்கள் இல்லாமல் போகுமோ? கூட்டமைப்பை வைத்து பத்திரிகைகள் மூலமாக பிரபலமாக சிலர் ஆசைப்படுகினமாம். கூட்டமைப்பு கூட்டம் முடிந்து ஒரு பிரமுகர் வீடு திரும்பினாராம். அவரோடு தொடர்பு கொண்ட பத்திரிகையாளர், கூட்டமைப்பில் நடந்த விஷயத்தை எல்லாம் விலாவாரியாகச் சொல்லி, இது உண்மைதானோ? எண்டுகேட்டாராம். அவ்வளவு வேகமாக செய்தி கொடுத்திருக்கிறார் வேறு ஒரு பிரமுகர். இனிமேல் கூட்டமைப்பு கூட்டத்தை பத்திரிகையாளர்கள் முன்னிலையில் நடத்தலாம் எண்டு வெறுப்போடு சொன்னாராம் ஒரு பிரமுகர். சுழியோடும் ஆசைதானே தொடர்ந்து ஒற்றுமைக்கு குழி. திருந்தவே மாட்டினமோ?

**த**மிழக அரசியல்வாதிகள் பக்கமாக இங்குள்ள தமிழ் கட்சிகள் நாட்டம் காட்டுவது அதிகாரத் தரப்பினருக்கும் பிடிக்கேல்லையாம். தெற்கில் இனவாதிகள் வேறு விதமாக வியாக்கியானம் செய்யலாம் எண்டு பயப்படுகினமாம். அதென்னவோ தெரியாது, கலைஞர் எண்டாலே தெற்கில் ஒரு சந்தேகம்தான். அதனால்தானே மனுசனை ஒரு தடவைகூட இந்த குட்டித்தீவை எட்டிப்பார்க்கவிடேல்லை.

**ரெ**ண்டு எழுத்தார் சார்பாக தமிழக முதல்வரோடு சிலர் தொடர்பு கொண்டவையாம். முதலில் எல்லாரும் ஒன்றுபடுங்கோ. அதுதான் எங்கள் முதல் விருப்பம். பிறகு என்ன செய்யலாம் எண்டு யோசிக்கலாம் எண்டு அவர் சார்பாக சொல்லப்பட்டதாம்.

**க**னடாவில் பிரஜா உரிமை கேட்கும் நம்நாட்டவர் பற்றிய தகவல்கள் அறிய நம்மவர்களைத்தான் அங்குள்ள உளவுத்துறை பயன்படுத்தினதாம். ரெண்டு எழுத்து இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் சிலர்தான் எக்கச்சக்கமான தகவல் கொடுத்தவையாம். இத்தனை தகவல்கள் இவைக்கு தெரியுதெண்டு சொன்னால் இவை பெரிய கில்லாடியள்தானே எண்டு அவை நினைச்சுப் போட்டினமோ தெரியேல்லை. கறக்கு மட்டும் நல்லாத் தகவல் கறந்துபோட்டு இப்ப பிடிச்சு சிறைக்குள் போட்டிருக்கினம். எத்தனைபேரின் பிரஜா உரிமைக்கு வேட்டு வைச்சவை. இப்ப தங்கள் தலையில் தாங்களே மண்போட்ட மாதிரியாச்சு! கெடுவான் கேடு நினைப்பான். அந்தக்கால பழமொழியில் அர்த்தமில்லாமல் போகுமோ?!

**தெ**ரிவுக்குழு விஷயத்திலை பச்சைக்கட்சி கடைசி நேரத்திலை பெரிய கயிறாக ஒன்றை விடப்போகுதாம். ஒற்றையாட்சியை ஒரு நாளும் மாற்றக்கூடாது எண்டு ஒரே போடாகப் போட்டாலும் ஆச்சரியமில்லை எண்டு உள் தகவல் ஒன்று தெரிவிக்கிறது. எதிர்பார்க்கக்கூடியதுதானே!

**மு**ன்னேற்றம் இல்லையெண்டு இனி யாரும் சொல்ல ஏலாது. ஒரு மணி நேரம் முந்தி ஓடத்தொடங்கியிருக்கிறம். பாவம் பள்ளிக்கூடப் பிள்ளைகள்தான் அர்த்த சாமக் கொள்ளைக்காரர் மாதிரி இருட்டோடு இருட்டாக பள்ளிக்கூடம் போக வேண்டிக்கிடக்கு.

'விளக்குகள்' என்ற தலைப்பில் கவிஞர் அப்துல்ரகுமான் அற்புதமாக எழுதியிருக்கிறார். அதில் துளியைப் பகிர்ந்துகொள்ள ஆசை.

***"ராத்திரி ரகசியங்களுக்கு நீங்கள்***
***சாட்சிகளாக இருப்பதால்தான்***
***விடிந்ததும் உங்கள் நாவுகள்***
***துண்டிக்கப்பட்டு விடுகின்றன.***

***எரியவும் எரிக்கவும் எங்களுக்கும் தெரிகிறது.***
***ஆனால் உங்களைப்போல***
***ஒளி கொடுக்க மட்டும் தெரியவில்லையே!"***



படிப்பகம்

www.padippakam.com

# முகாமை குறிவைத்து தயாரான வெடிகுண்டு பவுசர்

## 80

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது



### ஊர் பிரச்சனை

யாழ்ப்பாணத்திற்கு பிரபாகரன் வருவதற்கிடையில் நடைபெற்ற ஒரு சம்பவம் இது:

யாழ்ப்பாணம் பாஷையூரில் ஒரு குடும்ப உறவினர்கள் மத்தியில் தகராறு. அவர்களில் ஒருவர் சென்று புலிகளிடம் முறையீடு செய்தார்.

அப்போது புலிகள் அமைப்பின் பாஷையூர் பொறுப்பாளராக இருந்தவர் மலரவன். அவர் நேரடியாகச் சென்று முறைப்பாட்டை விசாரித்தார்.

மலரவன் விசாரணை செய்த முறை சிலருக்குப் பிடிக்கவில்லை. ஒரு தலைப் பட்சமாக நடந்துகொள்கிறார் என்று நினைத்தனர்.

எட்வேட் என்பவர் மலரவனோடு வாக்குவாதப் பட்டார். மலரவனுக்கு கோபம் வந்துவிட்டது. எட்வேட்டுக்கு ஒரு அடி அடித்துவிட்டார். எட்வேட் கடற்தொழிலாளி. வாட்டசாட்டமானவர். அவரும் திரும்பி மலரவனுக்கு ஒரு அடி கொடுத்துவிட்டார். பின்னர் ஊர் மக்கள் சிலர் இருவரையும் விலக்கி வைத்தனர்.

மலரவன் முகாமுக்குச் சென்றார். தனது ஆட்களை வேனில் அனுப்பி, "எட்வேட்டை பிடித்துவாருங்கள்" என்று உத்தரவு போட்டிருந்தார்.

எட்வேட் ஒளிந்துவிட்டார். "உடனடியாக எட்வேட் சரணடையவேண்டும். இல்லாவிட்டால் கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லுவோம்" என்று புலிகள் அமைப்பினர் எச்சரிக்கை விடுத்தனர்.

பாஷையூர் அந்தோனியார் கோவில் குருவானவரிடம் சென்று அடைக்கலம் தேடினார் எட்வேட். குருவானவர் புலிகளுடன் தொடர்பு கொண்டார்.

"எட்வேட்டை மக்கள் முன்பாக வைத்து விசாரியுங்கள்," என்றார் குருவானவர். மரலவன் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

"எட்வேட்டை எங்களிடம் ஒப்படையுங்கள். விசாரித்துவிட்டு உங்களிடமே திருப்பி ஒப்படைக்கிறோம்" என்றார் மலரவன்.

குருவானவர் பாஷையூர் மக்களோடு பேசினார். "எட்வேட்டுக்கு நான் பொறுப்பு. புலிகளிடம் ஒப்படைத்து விட்டு, விடுதலை செய்து தருகிறேன்" என்றார்.

அரியாலையில் உள்ள புலிகளின் முகாமில் எட்வேட்டை ஒப்படைத்தார் குருவானவர்.

குருவானவர் திரும்பிச்சென்றதும் எட்வேட்டை கட்டிவைத்து அடித்தார் மலரவன். 'அயன்பொக்ஸ்'ஸை உடம்பில் வைத்து தேய்த்தார். துடி துடித்துப் போனார் எட்வேட். அடி உதை தொடர்ந்தது. இறுதியில் எட்வேட் இறந்துபோனார்.

எட்வேட்டின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்த மலரவன், ஒரு நிபந்தனையும் விதித்தார்.

"இரண்டு மணித்தியாலங்களுக்குள் புதைக்கவேண்டும்" என்பதுதான் நிபந்தனை.

எட்வேட் இறந்த செய்தியறிந்து குருவானவர் வாய்விட்டுக் கதறினார். பாஷையூர் மக்கள் கொதித்தனர். குருவானவர் தலைமையில் பாஷையூர் அந்தோனியார் கோவில் விறாந்தையில் உண்ணா விரதப் போராட்டம் நடைபெற்றது.

வீதிக்கு குறுக்கே தடைகளைப்போட்டு மறியல் போராட்டமும் செய்தனர்.

எட்வேட்டுக்கு இரண்டு பிள்ளைகள். மனைவியும் பிள்ளைகளும் கதறியழுது கொண்டிருந்தனர். எட்வேட்டின் உடலில் நெருப்பு சூட்டுக் காயங்களும், அடி காயங்களும் காணப்பட்டன.

மலரவன்மீது கிட்டு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மலரவன் கிட்டுவின் தீவிர விசுவாசி.

இச்சம்பவத்தின் பின்னர் நாவற்குழியில் நடைபெற்ற இராணுவத் தாக்குதல் ஒன்றில் கை ஒன்றை இழந்தார் மலரவன். தற்போது இயக்கத்தில் இருந்து வெளியேறி வெளிநாடொன்றில் இருக்கிறார்.

### பிரபா வந்தார்

ஈரோஸ் தவிர ஏனைய இயக்கங்கள் யாவும் தடைசெய்யப்பட்ட நிலையில்தான் பிரபாகரன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

பிரபாகரனுடன் பொன்னம்மானும் வந்துசேர்ந்தார். தமிழ் நாட்டில் புலிகளின் பயிற்சி முகாம்களுக்கும் பொறுப்பாக இருந்தவர் பொன்னம்மான். அவரை குகன் என்றும் அழைப்பார்கள். புலிகள் இயக்கத்தில் பின்னர் ஒரு கட்டத்தில் பிரபலமாக இருந்த யோகரத்தினம் யோகியின் சகோதரர்தான் பொன்னம்மான்.

யாழ்ப்பாண தளபதியாக பொன்னம்மானை நியமித்துவிட்டு, கிட்டுவை மன்னார் தளபதியாக்கும் திட்டம் பிரபாகரனிடம் இருந்ததாகவும் அப்போது புலிகள் இயக்க உறுப்பினர்கள் பேசிக் கொண்டனர்.

அதனை உறுதிசெய்வதுபோல யாழ்ப்பாணம் நாவற்குழி இராணுவ முகாம் தாக்குதலுக்கு திட்டமிட்டார் பிரபாகரன்.

யாழ் தளபதியாக கிட்டு இருந்தும் நாவற்குழி இராணுவ முகாம் தாக்குதலுக்கான பொறுப்பை பொன்னம்மானிடம் கொடுத்தார் பிரபாகரன்.

அதனால் கிட்டுவுக்கும், அவரது விசுவாசிகளுக்கும் மனக் கசப்புத்தான். அதனை வெளியில் காட்டாமல் நடந்துகொண்டனர்.

பிரபாகரன் வருவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கிட்டு தலைமையில்தான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதன்மூலம் கிட்டுவின் பெயரும் பட்டி தொட்டியெங்கும் பிரபலமாகியிருந்தது.

கிட்டு யாழ் தளபதியான பின்னர் அவரது தலைமை இல்லாமல் நடைபெறத் திட்டமிடப்பட்ட முதலாவது தாக்குதல் நாவற்குழி இராணுவமுகாம் தாக்குதல்தான்.

நீண்டகாலத்தின்பின்னர் யாழ்ப்பாணம் திரும்பியிருந்தமையால் நாவற்குழி இராணுவ முகாம் தாக்குதலை தனது நேரடி கண்காணிப்பில் நடத்த பிரபாவும் விரும்பினார்.

தான் யாழ் வந்ததும் மிகப் பாரிய தாக்குதல் நடத்தப்படுவதுதான் உறுப்பினர்களுக்கு உற்சாகமும், நம்பிக்கையும் கொடுக்கும் என்று பிரபா நினைத்திருந்தார்.

### திட்டம் வகுக்கப்பட்டது

நாவற்குழி இராணுவ முகாமுக்கு தேவையான குடி தண்ணீர் கைதடியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து பவுசரில் எடுத்துச் செல்லப்படும்.

கிணறு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில்தான் இருந்தது. பவுசரும் வெளியாருக்குச் சொந்தமானதுதான்.

அந்த பவுசர் வண்டிக்குள் வெடிமருந்தை நிரப்பி அனுப்புவதுதான் திட்டம். பவுசர் சாரதியும் துணிந்து முன்வந்து புலிகளின் திட்டத்துக்கு ஒத்துழைக்க இணங்கினார்.

வெடிமருந்து நிரப்பப்பட்ட பவுசரை வழக்கம்போல முகாமுக்குள் கொண்டுசெல்ல வேண்டும். முகாமுக்குள் சென்றதும் பவுசரை விட்டுவிட்டு சாரதி இறங்கி ஓடிவிட வேண்டும்.

பவுசர் இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. கீழ்பகுதியில் வெடிமருந்து நிரப்பப்படும். மேல் பகுதியில் தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கும்.

முகாம் வாசலில் உள்ளவர்கள் பவுசரின் மேலே ஏறி மூடியைத் திறந்து பார்த்துவிட்டுத்தான் உள்ளே அனுமதிப்பார்கள்.

பொன்னம்மான் வெடிமருந்துகளை கையாள்வதில் தேர்ச்சியானவர். பவுசருக்கு வெடிமருந்தை நிரப்பும் வேலையை அவர்தான் செய்தார்.

சாவகச்சேரி பொறுப்பாளராக இருந்த கேடில்ஸ் பொன்னம்மானுக்கு உதவினார். நாவற்குழி இராணுவ முகாம் சாவகச்சேரி பகுதியில் இருந்தமையால் முகாமை வேவு பார்க்கும் வேலைகளை கேடில்ஸின் பொறுப்பில் இருந்தவர்களே கவனித்தனர்.

ரஞ்சன் என்னும் பொறியியலாளரும் புலிகளுக்கு உதவினார்.

புலிகள் முதன் முதலாக விமானமொன்றை தாயரிக்க முற்பட்டபோது, அந்த முயற்சியில் ஈடுபட்டவர்களில் ரஞ்சனும் ஒருவர்.

14.2.87 அன்றுதான் நாவற்குழி இராணுவ முகாமை தாக்குவது என்று திட்டமிடப்பட்டது.

பகலில் தாக்குதல் நடத்துவதைவிட இரவில் நடத்துவதே கெரில்லாக்களுக்கு வாய்ப்பு. பகலில் என்றால் விமானத்தாக்குதலுக்கு சுலபமாக இரையாகவேண்டி இருக்கும்.

ஆனாலும் ஒரு சிக்கல். மாலை 6.30 மணிக்குப் பின்னர் இராணுவ முகாமுக்குள் பவுசர் செல்ல அனுமதி கிடைக்காது.

எனவே 6.30 மணிக்கு பவுசர் உள்ளே சென்றாக வேண்டும். அதன்பின்னர் ஒரு மணி நேரத்தில் இருட்டி விடும் என்பதால் பின்னர் பிரச்சனை இருக்காது.

### பவுசர் தயார்

13.2.87 இரவு பவுசருக்கு வெடிமருந்து நிரப்பும் வேலை நடைபெற்றது. பொன்னம்மான், ரஞ்சன், புலிகளது உளவுப்பிரிவு பொறுப்பாளர் வாசு ஆகியோர் இரவிரவாக வெடிமருந்தை நிரப்பினார்கள்.

14.2.87 அதிகாலை வெடிமருந்து நிரப்பட்ட நிலையில் பவுசர் தயாரானது.

அசதி காரணமாக பொன்னம்மான் பவுசருக்கு அருகில் தூங்கிவிட்டார்.

மற்றொரு பகுதியில் மூன்று பெரிய லொறிகள் தயார் செய்யப்பட்டன.

முகாமுக்குள் சென்ற பவுசர் வெடித்ததும், மூன்று லொறிகளும் முகாமுக்குள் பிரவேசிக்க வேண்டும்.

முதல் லொறியில் ரொக்கட் லோஞ்சருடன் நிற்பவர், வாயில் காவல் அரணை உடைத்தெறிவார்.

சூசை, ஜொனி, கேடில்ஸ் மூவரும் உள்ளே செல்லும் மூன்று தாக்குதல் குழுக்களுக்கும் தலைமை கொடுக்கவேண்டும். திட்டம் அதுதான்.

யாழ் தளபதி என்றரீதியில் தாக்குதலுக்குரிய ஆட்களை தெரிவுசெய்து கொடுத்தார் கிட்டு.

சகல ஏற்பாடுகளும் ரெடியாகிக் கொண்டிருந்தன. வெடிமருந்து நிரப்பப்பட்ட பவுசர் பொன்னம்மானின் உத்தரவு கிடைத்ததும் புறப்படவேண்டும்.

நேரம் மாலை ஐந்துமணி. அப்போது பவுசரில் இருந்து தண்ணீர் ஒழுகியதை ஒருவர் கண்டுவிட்டார். அதனை பொன்னம்மானும் கவனித்துவிட்டார். பொறியியலாளர் ரஞ்சனை அழைத்து வந்து, ஒழுகுவதை நிறுத்துமாறு கூறினார் பொன்னம்மான்.

ஒழுகுவதை நிறுத்த வேண்டுமானால் 'வெல்டிங்' செய்ய வேண்டும். நேரமோ நெருங்கிக் கொண்டிருந்தது.

அவசர அவசரமாக 'வெல்டிங்' செய்து பவுசரில் ஏற்பட்ட துவாரத்தை அடைக்கத் தொடங்கினார் ரஞ்சன்.

### பூமி அதிர்ந்தது

நேரம் 5.15. 'வெல்டிங்' நடந்து கொண்டிருந்தது. நேரம் 5.30ஐ நெருங்கியது. இன்னும் கொஞ்ச நேரம்தான். ரஞ்சனின் அவசரம் அதிகரித்தது.

நேரம் 5.30 மணி.

யாழ்ப்பாணமே குலுங்கியது.

பாரிய வெடிச்சத்தம்.

அப்படி வெடிச்சத்தத்தையும், பூமியதிர்ச்சி போன்ற தாக்கத்தையும் யாழ் மக்கள் அதற்கு முன்னர் சந்தித்ததில்லை.

தாக்குதலுக்கு புறப்பட இருந்த உறுப்பினர்களுக்கு ஒரே குழப்பம்.

தமக்கு அறிவிக்காமலேயே முகாமுக்குள் பவுசரை அனுப்பி வெடிக்கவைத்து விட்டார்களோ? என்று நினைத்தனர்.

கிட்டு தனது 'வோக்கி டோக்கியில்' வாசுவை அழைத்தார்-பதில் இல்லை.

கேடில்ஸை கூப்பிட்டார். பதில் வரவேயில்லை. பின்னர் ஜொனியைத் தொடர்பு கொண்டார். பதில் கிடைத்தது. சத்தம் கேட்ட இடத்திற்கு ஜோனியை செல்லுமாறு கூறினார் கிட்டு.

ஜொனி அங்கு விரைந்தார்.

அவர் கண்ட காட்சி பயங்கர... ...து.

பவுசர் நின்ற இடத்தில் பெரிய குழி ஒன்று இருந்தது. பவுசரைக் காணவில்லை.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அந்த குழிக்கு அருகில் ஒரு கார் நொறுங்கிக் கிடந்தது. அது கேடில்ஸ் பயன்படுத்திய கார்.

அதற்கு 50 யார் தூரத்தில் லொறி ஒன்று நின்றது. அதற்குள் எட்டிப் பார்த்தார் ஜொனி. உள்ளே புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஐந்துபேர் இறந்து கிடந்தனர்.

பின்னர் கிட்டுவும் அங்கு சென்றார். பொன்னம்மான், வாசு, கேடில்ஸ் ஆகியோர் எங்கே? அவர்களது உடல்களைக் கூட காண முடியவில்லை.

வாசுவின் பிஸ்டலும், அடையாள அட்டையும் கிடைத்தன. கேடில்ஸ் அணிந்திருந்த காற்சட்டையின் ஒரு பகுதி கிடைத்தது.

பொன்னம்மானின் உடலோ, அல்லது அவர் தொடர்பான எந்தத் தடயமோ கிடைக்கவில்லை.

### பொதுமக்கள் பலி

பவுசர் வெடித்த இடத்தை சுற்றியிருந்த வீடுகளும் தரைமட்டமாகியிருந்தன.

குறைந்தது 50 பொதுமக்களாவது பலியானார்கள்.

எங்கும் ஒரே மரண ஓலம். சம்பவம் நடைபெற்ற இடத்தின் பக்கம் யாரையும் செல்ல அனுமதிக்கவில்லை.

புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் 10 பேர் பலியானார்கள்.

லெப்டினன்ட் கேணல் பொன்னம்மான் (அற்புதன்-குகன்), மேஜர் கேடில்ஸ் (திலீபன்), கப்டன் வாசு (சுதாகர்), லெப்டினன்ட் சித்தார்த் (வசீகரன்), இரண்டாவது லெப்டினன்ட் பரன் (அர்ச்சுனன்), யோகேஷ் (பாலன்), கவர் (நகுலேஸ்வரன்), அக்பர் (லோகநாதன்), குமணன் (மோகனலிங்கம்), தேவன் (வசந்தகுமார்) ஆகியோரே பலியான புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆவர்.

பொதுமக்கள் பலியானது தொடர்பான விபரங்கள் பெரியளவில் வெளியே தெரியாமல் தடுத்துவிட்டனர் புலிகள்.

கைதடியில் பவுசர் வெடித்த செய்தியை அறிந்து நாவற்குழி இராணுவ முகாமுக்குள் நிம்மதிப் பெருமூச்சுக்கள்.

கைதடியில் வெடித்திருக்காவிட்டால் தமது கதி என்னாகியிருக்கம் என்பதை அவர்கள் நினைத்துப் பார்த்திருப்பார்கள் தானே!

முதன் முதலாக புலிகள் இயக்கத்தின் தயாரிப்பில் ஏற்பட்ட பெரும் வெடி விபத்து அதுதான். துவாரத்தை அடைக்க வெல்டிங் செய்தபோது ஏற்பட்ட தவறுதல்தான் விபத்துக்குக் காரணம் என்று நம்பப்பட்டது.

எனினும் சம்பவத்தை நேரில் கண்ட எவருமே உயிருடன் இல்லை. அதனால் விபத்து ஏற்பட்டவிதத்தை உறுதியாகக் கூறக் கூடிய சாட்சியம் கிடைக்கவில்லை.

பொன்னம்மானின் இழப்பு புலிகள் இயக்கத்திற்கு மட்டுமல்லாமல், தனிப்பட்ட ரீதியில் பிரபாகரனுக்கும் பெரும் கவலை கொடுத்த இழப்பாகும்.

பொன்னம்மான் யாழ்-இந்துக் கல்லூரியின் கெட்டிக்கார மாணவன். 1975ம் ஆண்டளவில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தவர்.

உமையாள்புரம் தாக்குதலுக்கு தலைமை தாங்கியவர். திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் பலியான தாக்குதலிலும் பொன்னம்மான் பங்கு கொண்டவர்.

இந்தியா ஆயுதப் பயிற்சி வழங்கிய போது, புலிகளின் அணிக்கு தலைமை தாங்கிச் சென்றவர் பொன்னம்மான். அவரது தலைமையில் பயிற்சி பெற்றவர்களில் கிட்டு, விக்ரர், புலேந்திரன், சூசை, பொட்டம்மான், கணேஸ், அருணா, ராதா, பரமதேவா, பதுமன், கேடில்ஸ் உட்பட முக்கியமானவர்கள் அடங்குவர்.

(தொடர்ந்துவரும்)

### ஒரு தவறு

புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற கைதிகள் பரிமாற்றத்தின்போது அருணா, காமினி ஆகியோர் விடுவிக்கப்பட்டனர் அல்லவா?

அருணா, காமினி இருவரும் கடலில் வைத்து கைதுசெய்யப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தேன். அதில் ஒரு தவறு.

அருணா மட்டுமே கடலில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

காமினி குருநகரில்வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர். காமினியும், வாசன் என்பவரும் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டபோது வாசன் சயனைட் சாப்பிட்டார். காமினி மட்டுமே உயிருடன் பிடிபட்டார்.

இதேவேளை அருணா புலிகளது தளபதிகளில் ஒருவர் என்பது அவர் விடுவிக்கப்பட்ட பின்னர்தான் இராணுவத்தினருக்கே தெரியும். முதலில் அவரை ஒரு சாதாரண உறுப்பினர் என்றே நினைத்திருந்தனர்.

அருணா இராணுவத்தினரிடம் இருந்தது புலிகளுக்கும் உறுதியாகத் தெரியாது. ஒரு சந்தேகத்தில் பெயரைக் கொடுத்துப் பார்த்தார் கிட்டு. அதனால் அருணா விடுதலையானார்.

காமினி பின்னர் மட்டக்களப்பில் ஒரு மோதலில் பலியானார்.

அருணா இந்திய இராணுவத்தினரின் தாக்குதலில் யாழ்ப்பாணத்தில் பலியானார்.




### ஜூன் 5 இல் விழுந்த விதை

1974 ஜூன் மாதம் 5ம் திகதி சயனைட் விழுங்கி தன்னை மாய்த்துக்கொண்டவர் பொன்-சிவகுமாரன். பொலிசாரின் கையில் சிக்க விரும்பாமல் முதலில் சயனைட் விழுங்கியவர் சிவகுமார்தான்.

சிவகுமாரின் இறுதிச் சடங்கில் மக்கள் வெள்ளம் திரண்டது. உணர்ச்சிக் கடல் பொங்கியது. சிவகுமாரின் மரணம் ஆயுதப் போராட்டத்திற்கு திருப்பு முனையானது.

அமரர் அமிர்தலிங்கம் உட்பட கூட்டணித்தலைவர்கள் சிவகுமாரை போற்றினார்கள். உணர்ச்சித் தீ மூட்டினார்கள். அகிம்சை வழியில் தம்பிமார் நம்பிக்கை இழப்பது நியாயம் என்ற ரீதியில் உற்சாகம் கொடுத்தார்கள்.

படத்தில் இருப்பது சிவகுமாரின் இறுதிச் சடங்கில் திரண்ட மக்கள் வெள்ளத்தில் ஒரு பகுதி.



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது - இராஜதந்திரி

# நீறு பூத்த பூமியில் புனர்நிர்மாணம்

# தகிக்கும் தணலைத் தணிக்கவேண்டியதே முதற்பணி!

**யா**ழ்ப்பாண மண்ணின் வாசனையை-அங்குள்ள மக்களின் பண்பாடு, அந்நிலத்தின் செழிப்பு என்பவற்றை நுகரவேண்டுமானால் ஒரு துவிச்சக்கர வண்டியே போதும்.

கடும் வெய்யிலான போதிலும் மா, பலா, வேம்பு, நாவல், புளி, ஆலம், பூவரசு போன்ற அம்மண்ணின் பரந்து விரிந்த விருட்சங்கள் ஊடாகச் துவிச்சக்கர வண்டியில் செல்லும் போது கிடைக்கும் குளிர்மையும், சுகமும் இதமானவை.

ஆழமான கிணறுகளில் இருந்து கிடைக்கும் நீரின் சுவையே ஒரு தனிரகம்.

இவை தவிர அதிகாலை வேளையில் ஆலய மணிகள் திக்குத்திக்காக ஒலிக்கும் ஓசை அப்பூமியை ஒரு புனித பூமியாகவே வைத்திருந்தது.

காலத்துக்குக்காலம் இனவாத வன்முறைகள் தென்னிலங்கையில் வெடித்திருந்தபோதிலும் வடபகுதி அதன் பொலிவை, அமைதியை எவ்விதத்திலும் இழந்து விடாதிருந்தது.

ஆயினும், கடந்த 17 வருடகால யுத்தம் அந்த அற்புத பூமியை குத்திக் குதறியும், வெட்டிக் கிழித்தும் நாசமாக்கி விட்டுள்ளது.

1970ம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய பொலிஸ் நிலையங்களின் பதிவேடுகளைப் புரட்டிப் பார்த்தால், களவு, கொள்ளை, கொலை போன்ற குற்றச் செயல்கள் இலங்கையில் ஏனைய பகுதிகளை விட யாழ் மாவட்டத்தில் மிகக் குறைவாகவே இடம்பெற்றிருந்ததை அவதானிக்க முடியும்.

காணி, நிலம் சம்பந்தமான சிவில் வழக்குகளே யாழ் மாவட்ட நீதி மன்றங்களில் பெருமளவில் இடம்பெற்றிருந்தன.

1971ம் ஆண்டு தென்னிலங்கையில் சேகுவேரா கிளர்ச்சி பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசுக்கெதிராக இடம் பெற்றது.

அப்போது நாடு பூராவும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்த வேளைகளிலெல்லாம், வடக்கே பலாலி இராணுவமுகாமிலிருந்த சில நூற்றுக்கணக்கான சிப்பாய்கள், வடக்கே எவ்வித அச்சுறுத்தலையும் எதிர்நோக்கவில்லை.

அமைதியாகவும், அழகாகவுமிருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டை குட்டிச் சுவராக்கும் நடவடிக்கைகள் தென்னிலங்கையர்களாலேயே படிப்படியாக முடுக்கி விடப்பட்டன.



தெளிந்த நீரோடையாகவிருந்த வடபகுதி மாணவர்களின் கல்வியில், தரப்படுத்தல் என்ற நஞ்சைக்கலந்ததுடன் அம்மாணவர்களின் மேம்பாட்டுக்கும் 70களின் ஆரம்பத்திலேயே வேட்டு வைக்கப்பட்டது.

இவ்வாறு தென்னிலங்கையிலிருந்து தமது கொள்கைகள், நடைமுறைகள் மூலம் வடபகுதி மக்கள் நையப்புடைக்கப்பட்ட அதேசமயம், திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் கிழக்குப் பகுதியில் அத்துமீறிய செயல்களிலும் ஆட்சியாளர்கள் குதித்திருந்தனர்.

இத்தகைய செயற்பாடுகள் காரணமாக கூர்மையடைந்த அரசியல் போராட்டங்களே, நாளடைவில் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தது.

இந்த ஆயுதப் போராட்டமே வடக்கு-கிழக்குப் பிரதேசத்தை நாசமாக்கி விட்டுள்ளதுடன் தென்னிலங்கையையும் பல்வேறு வகையிலும் ஆட்டங்காணச் செய்துள்ளது.

இன்றைய ஆட்சியாளர்கள் வடக்கே ஆரம்பித்துள்ள புனர்நிர்மாணப் பணிகள் குறித்தே தினமும் செய்தித்தாள்கள் தகவல்களைத் தாங்கி வருகின்றன.

யாழ்ப்பாணத்தைப் புனர்நிர்மாணம் செய்து அங்கே மக்களை அமைதியாக வாழச் செய்ய வேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களையே சார்ந்தது.

ஏனெனில், கடந்த 17 வருடகால யுத்தத்தில் வடக்கே விமானங்கள் பொழிந்து தள்ளிய குண்டுகளும் பீரங்கிகள் 'கொப்பளித்த' இராட்சத வேட்டுக்களும் காரணமாகவே வடபகுதி தகர்ந்து போயுள்ளது.

தென்னிலங்கைக் காடையர் கூட்டம் நடத்திய வெறியாட்டமே யாழ் பொது சன நூலகத்தைக் கூட சாம்பல் மேடாக்கியிருந்தது.

எனவே வடக்கு-கிழக்கின் அழிவுகள், அவலத்துக்கு கடந்த கால ஆட்சியாளர்களின் கடும் போக்கும், கபடத்தனங்களுமே முக்கிய காரணங்களாக விருந்தன.

வடக்கே புனரமைப்பு, புனர்நிர்மாணம் என்று ஆட்சியாளர்கள் அதிகம் அலட்டிக் கொள்ளலாம். ஆனால் தாம் அழித்தவற்றையும், நாசமாக்கியவற்றையுமே மீளவும் புனரமைக்க ஆட்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள் என்பதையே உணரவேண்டியுள்ளது.

எது எப்படியிருந்தபோதிலும் வடக்கு-கிழக்கு மக்களின் ஒரு சந்ததியே கடந்தகால யுத்தத்தினால் நாசமாகிப்போயுள்ளது.

வடக்கின் புனரமைப்பை ஆட்சியாளர்கள் ஆரம்பித்துள்ளனர். ஆனால் கிழக்கிலங்கையில் அரசுக்குச் சவால்விடும் எல்.ரி.ரி.ஈ. யினரது தாக்குதல்கள் சூடுபிடித்துள்ளன.

வடக்கேகூட யாழ் குடாநாடு படையினர் வசமாகியுள்ளதே தவிர வன்னிப் பிரதேசத்தின் பெரும்பகுதி எல்.ரி.ரி.ஈயினரது பிடியில் இருக்கின்றது.

வன்னி மற்றும் கிழக்கிலங்கையின் காட்டுப் பகுதிகளுக்குள் எல்.ரி.ரி.ஈயினர் தம்மைப் பலப்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, வடக்கே யாழ் குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ள நிலையில், அரசு மேற்கொள்ளும் புனர்நிர்மாணம் என்பது நீறுபூத்த நெருப்பின் மீது மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகவே இருக்கின்றது.

அரசு தீர்த்து வைக்கவேண்டிய வடக்கு-கிழக்கின் அரசியல் பிரச்னை தொடர்ந்து தணலாகி ய இருக்கின்றது. அத்தணலை மூடிய நீறு போன்றே இன்றைய சூழ்நிலைகள் இருக்கின்றன.

இந்நிலையில் இத்தணலைத் தணித்து எதிர்காலத்தில் அதனூடாக மீண்டும் கொடிய தீ பரவாது இருப்பதையே ஆட்சியாளர்கள் முதலில் செய்ய வேண்டியவர்களாகின்றனர்.

வடக்கே புனர்நிர்மாணம் என்று அரசு கூறிவருகின்ற அதேசமயம் புதிய யுத்தக்கப்பல்களும், விமானங்களும் வெள்ளோட்டம் விடப்படுகின்றன.

இதனை நோக்கும்போது, ஒரு பலம்மிக்க ஆயுதபாணி தனது கையில் தானே தயாரித்த உப்புச் சப்பற்ற உணவை வைத்துக் கொண்டு "விருப்பமானால் தின்னலாம்; இல்லையேல் அதனை நான் தீத்துவேன்." என்று ஒருவரைப் பார்த்து கூறுவதுபோலவே இருக்கின்றது.

நேர்த்தியாகவும், கௌரவமாகவும், ஒன்று சேர்ந்து, ஒரே அணியில் நல்ல தீர்வைப் பெறக்கூடிய அரிய சந்தர்ப்பங்கள் பலவற்றை தமிழ் கட்சிகளும் கோட்டை விட்டுள்ளன என்பது உண்மை.

இது தவிர உண்மையாகவும் உறுதியாகவும் நல்ல தீ[illegible]வ போராடிப் பெறக்கூடிய சந்தர்ப்பங்களைக் கூட தமிழ் கட்சிகள் பாழாக்கிவிட்டுள்ளன.

எனவே எதிர்காலத்திலாவது கடந்த கால அனுபவங்களை மையமாகவைத்து அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதே பெரும் பொறுப்பாக இருக்கின்றது.

எக்காலமும் மக்கள் மரண பயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது.

யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்தவரை இருவேறு துருவங்களாக அவர்களது இன்றைய நிலை காணப்படுகின்றது.

ஒரு சாரார் யாழ்ப்பாணத்துக்கு வெளியேயும், மேற்கத்தேய நாடுகளிலும் சொகுசு வாழ்க்கை சொர்க்க சூழ்நிலைகளில் வாழ்கின்றனர்.



மறுசாரார் உணவுக்காகவும், உறைவிடத்துக்காகவும், நிரந்தர அமைதிக்காகவும் ஏங்கி நிற்கின்றனர் .

எனவே அனைத்துக் கோணங்களிலிருந்தும் அலசி ஆராய்ந்து, ஆரோக்கியமான ஒரு தீர்வை நோக்கி நகருவதே இன்றியமையாததாகின்றது.

கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், அவுஸ்திரேலியாவிலிருந்து கூச்சல்கள் எழுப்பப்படலாம். ஆனால் அக்கூச்சல்கள் அந்த நாடுகளின் அரசுகளை எவ்வளவு தூரம் கவர்ந்துள்ளது?

அது குறித்து அந்நாடுகள் எவ்வளவு தூரம் அக்கறைப்படுகின்றன? என்பதே முக்கியமான கேள்வியாகும்.

எனவே எங்கிருந்தாலும், எப்படியிருந்தாலும்- கூச்சல்கள், கோஷங்கள், என்பன அர்த்தமுள்ளவையாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் அமையவேண்டும்.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியின் இன்றைய நிலமை அடங்கிப்போயுள்ள ஒரு காட்டுத்தீயாகவே இருக்கின்றது.

ஆனால் அத்தீயின் வெப்பம் தணலாகத் தொடர்ந்து இருக்கின்றது. எனவே அதன் மீதுள்ள நீறின் மீது புதியவைகளைக் கட்டி எழுப்பவேண்டுமானால், தகிக்கும் தணலை மேலும் கொடுந்தீயாக பரவ விடாது தணித்துவிட வேண்டியதே மிக அவசியமானதாகின்றது.

## ஆட்சியைப் பிடிக்க சரியான போட்டி




இந்திய மத்திய ஆட்சி தள்ளாடுகிறது. எத்தனை காலத்திற்கு அரசாங்கம் நீடிக்கும் என்பது கேள்விக்குறிதான். இந்திய பத்திரிகையான 'தினமணி' மத்திய ஆட்சியை பிடிக்க அரசியல்வாதிகள் நடத்தும் மோதலை கேலிசெய்து வெளியிட்ட கார்டூன் இது.

வடக்கு-கிழக்கில் இராணுவம் நிலைகொள்ளலாம்: அப்பிரதேசங்களில் மிகவும் பலம்மிக்க நிலையிலேயே படையினர் தொடர்ந்திருக்கவும் முடியும்.

இத்தகைய பெரும் பலத்தைத் தொடர்ச்சியாகக் கொண்டிருப்பதற்கு இலங்கை பெருமளவு பொருளாதார நெருக்கடிகளையே எதிர்நோக்கவேண்டிவரும். இது தவிர எல்.ரி.ரி.ஈ.யினர்கூட ஓர் அரசியல் நிலைப்பாட்டை எட்டாதவரை, தொடர்ந்து தமது கெரில்லாத் தந்திரங்கள் மூலம் அரச படையினருக்கு நெருக்குதல்களைக் கொடுத்த வண்ணமே இருப்பர்.

ஐந்து தமிழ் அரசியல் கட்சிகள் ஒரே கூட்டமைப்பாக உள்ளன. இந்த ஐந்து கட்சிகள் கூட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வுக்கு ஏற்புடையதல்ல என்று கூறியுள்ளன.

எனவே வடக்கு-கிழக்கின் மக்கள் எதிர்பார்க்கின்ற அடிப்படைத் தீர்வையும், அத்தீர்வு தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் கொண்டுள்ள நிலைப்பாட்டையும் நோக்குமிடத்து, முழு அளவிலான அதிகாரப் பரவலாக்கமும், வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் ஒன்றிணைந்த ஒரு தனி அலகான நிர்வாக அமைப்புமே நிரந்தர தீர்வுக்கு வழி வகுக்குமென்பதை அறியமுடிகின்றது.

ஃபிரான்ஸ் அதிபர் மிட்டராண்ட் பாதுகாப்பு மாநாட்டை கூட்டினார். முக்கிய அமைச்சர்களும், பாதுகாப்பு அதிகாரிகளும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அதிபர் மிகப் பதட்டத்தில் இருந்தார். அதிபர் மிகக் கவலையாகவும் இருந்தார். தனது உணர்ச்சிகளை முகத்தில் காட்டாமலிருக்க அதிபர் நிறைய முயற்சி எடுத்தார்.

உள்துறை அமைச்சர் முகத்திலும் சோகம் அடர்த்தியாக இருந்தது. அவர் தனது கருத்தைச் சொன்னார்:

"கார்லோஸின் யுத்தப் பிரகடன கடிதத்தை நாங்கள் வெளியிட்டது முதல் தவறு. நிலமையை விபரீதமாக்குவதைவிட விவேகமாக செயற்பட்டிருக்கலாம்." உள்துறை அமைச்சர் தனது அமைச்சுமீது தான் குற்றம் சாட்டுகிறார் என்பது பாதுகாப்பு அமைச்சருக்கும் புரிந்தது. இராணுவ அதிகாரி அவசரப்பட்டுவிட்டார் என்று எப்படிச் சொல்வது? அதனால் மௌனமாக இருந்தார்.

"நடந்தது தவறு என்றே வைத்துக் கொள்வோம். இப்போது அதனைப்பற்றி விவாதிப்பதா முக்கியம்? இனி நடக்க வேண்டியது என்ன, அதனை யோசியுங்கள்." என்றார் அதிபர் சலிப்பாக.

"எப்படியும் கார்லோஸின் சகாக்கள் மீது வழக்கை நடத்தியேயாக வேண்டும். விஷயம் வெளியே தெரிந்தபின்னர் வழக்கை கைவிட்டால் மாபெரும் வெட்கம்," மற்றொரு அமைச்சர் சொன்னார். நீண்ட விவாதத்தின்பின்னர் மாநாடு கலைந்தது.

"அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோரின் பாதுகாப்பை அதிகப்படுத்துங்கள். 24 மணிநேரமும் சிறப்புபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்." என்று உத்தரவிட்டார் அதிபர் மிட்டராண்ட்.

***

**சென்றவாரம்**

**ஃபிரான்சுக்கு எதிரான கார்லோஸின் யுத்தப் பிரகடனம் தன் பயங்கர சொரூபத்தை காட்டிக்கொண்டிருந்தது. இறுதியாக-வியன்னாவில் ஃபிரான்ஸ் தூதரகம் தகர்க்கப்பட்டது. எயர் ஃபிரான்ஸ் விமான அலுவலகமும் தகர்ந்தது. பெய்ரூட்டில் இருந்த ஃபிரான்ஸ் செய்தி நிறுவன அலுவலகத்திலும் குண்டு வெடித்தது.**

**இனி...**


கார்லோஸ்

# 12 தருவது- ரசிகன்

# உலகைக் கலக்கிய மனித வெடிகுண்டு

# தண்டனைக்கு தண்டனை

வியன்னாவில் தனது பாதுகாப்பு இல்லத்தில் கார்லோஸ் மிக மகிழ்ச்சியாக இருந்தான். கிறிஸ்டாவை மனதாரப் பாராட்டினான்.

"ஐஸ் வைக்காதே; ஏற்கெனவே நல்ல குளிர்." என்றாள் கிறிஸ்டா. "இல்லை கிறிஸ்டா, வேறு யாராக இருந்தாலும் ஃபிரான்ஸ் தூதரகத்திற்குள் நுழைந்து காரியம் சாதித்திருக்க முடியாது. எனக்கே முதலில் சந்தேகம்தான். குட். வெரிகுட். நன்றாகச் செய்திருக்கிறாய்."

"நன்றி. என்ன செய்யப்போகிறாய்? குளிக்கப்போகிறாயா?"

"யெஸ்! தனியாக அல்ல; நீயும் வருகிறாய்."

"ஏன் சோப் போடவா? மாட்டேன் போ. நீ என்ன செய்வாயோ தெரியாது!"

மறுத்தவளை தன் இருகைகளிலும் ஏந்தினான். அப்படியே குளியலறைக்குள் புகுந்து, தண்ணீர் தொட்டிக்குள் அவளைப் பொத்தென்று போட்டான்.

ஈரமாகி உடலோடு ஒட்டிய சட்டை கண்ணாடிபோல உள் இருப்பைக் காட்டியது. தொட்டியில் இருந்து எழுந்து அவனை முறைத்துப் பார்த்தாள். மறு நொடியே தனது சட்டைப் பொத்தான்களை ஒவ்வொன்றாய் நிதானமாகக் கழற்றத் தொடங்கினாள்.

ஷவரைத் திறந்து அதன் கீழ் நின்று கொண்டிருந்தான் கார்லோஸ். தண்ணீர் தாறலாய் கொட்டிக்கொண்டிருந்தது. கிறிஸ்டா இப்போது சட்டையை முழுவதுமாக அகற்றியிருந்தாள். கார்லோஸுக்கு தண்ணீரும் சுடுவதுபோல் இருந்தது.

"வாவ்" என்றான் தன்னை மறந்து.

கிறிஸ்டா இப்போது தன் இடுப்பில் கைவைத்து முழு விடுதலைக்கு தயாரானாள். வாளிப்பான கால்கள் வழியாக ஸ்கேட் நழுவி தரையைத் தொட்டது. கார்லோஸ் விழியசைக்க மறந்து போனான்.

மெல்ல நடந்து கார்லோஸை நெருங்கி சட்டென்று இறுகத் தழுவிக் கொண்டாள். ஷவர் இருவரையும் ஈரமாக்கிக் கொண்டிருந்தது. பின்னர் விலகி சோப் எடுத்தாள். கார்லோஸின் மார்பில் சோப் போட ஆரம்பித்து, கீழே நகர்ந்து அவன் இடுப்பில் கட்டியிருந்த துவாலையில் கைவைத்தாள்.

★★★

ஃபிரான்ஸ் நீதிமன்றத்தில் பரபரப்பு தொற்றியிருந்தது. மகதலேனாவும், பிரேகுவார்ட்டும் நீதிபதி முன்பாக ஆஜர் செய்யப்பட்டனர்

பிரபலமான வழக்கு. வழக்குத் தொடுக்கப்பட்டவர்கள் கார்லோஸின் ஆட்கள். அதனால் பத்திரிகையாளர்கள் அங்கு மொய்த்திருந்தனர்.

இருவர் சார்பாகவும் ஆஜரான சட்டத்தரணி வெர்ஜெஸ் தன் இருக்கையை விட்டு எழுந்தார். தன் தொண்டையைக் செருமி சரிப்படுத்திக்கொண்டு நீதிபதியை நேராகப் பார்த்தார்.

"கனம் கோட்டார் அவர்களே! இங்கே குற்றம்சாட்டப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள இருவரும் சாதாரணமானவர்களுமல்ல, சமூக விரோதிகளுமல்ல. ஒரு புனிதமான பணியினை மேற்கொண்டபோது கைது செய்யப் பட்டவர்கள். இவர்களின் பின்னால் ஒரு பெரிய இயக்கமே இருக்கிறது. இந்த இருவரையும் இந்த நாடு சிறையிலடைத்தால் இவர்களுடைய இயக்கம் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது.

இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்காக சில மணி நேரம், சில மாதங்கள் அல்லது மிஞ்சிப்போனால் சில வருடங்கள் இவர்களை சிறையில் அடைக்கலாம். ஆனால், அக்காலகட்டத்தில் இந்த நாட்டில் எவ்வளவு இரத்தம் பெருக்கெடுத்து ஓடும் என்பதை நாம் பொறுப்போடு சிந்தித்துப் பார்க்க வேண்டும்."

சொல்லி முடித்துவிட்டு நீதிமன்றத்தை சுற்றி ஒரு தடவை பார்வையை ஓடவிட்டுக் கொண்டார்.

"கனம் நீதிபதியவர்களே! இன்னொரு முக்கிய விடயத்தையும் தங்களுக்கு தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் இவர்கள் பின்னாலுள்ள இயக்கம் எத்தனை கோபப்படும் என்று உணரமுடியும்." அவர் சொல்ல, நீதிபதி கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்.

அடுத்தடுத்துப் பதவிக்குவந்த "ஃபிரான்ஸ் அரசாங்கங்கள் இவர்களது இயக்கத் தலைவருடன் எழுத்தில் இல்லாத இரகசிய ஒப்பந்தம் ஒன்றை நடைமுறைப் படுத்தி வந்தன." நிறுத்தி நீதிபதியைப் பார்த்தார்.

"என்ன ஒப்பந்தம்?" என்றார் நீதிபதி.


"இவர்களது தலைவரான கார்லோஸ் அனுப்பும் ஆட்கள் ஃபிரான்சில் தங்கிச் செல்வதையும், ஃபிரான்ஸ் ஊடாக வேறு நாடுகளுக்குச் செல்வதையும் கண்டாலும் காணாததுபோல் இருக்க வேண்டும். அது தான் ஒப்பந்தம்," என்றார் சட்டத்தரணி. நீதிபதியின் புருவம் உயர்ந்து தாழ்ந்தது.

மறுநாள் பத்திரிகைகளில் இரகசிய ஒப்பந்தம் தான் தலைப்புச் செய்தி. ஃபிரான்ஸ் அரசாங்கத்திற்கு பெரும் சங்கடமாயிற்று.

வழக்கு தொடர்ந்தது. இறுதியில் நீதிபதி தன் தீர்ப்பைச் சொன்னார்.

மகதலோனாவுக்கு 4 வருட சிறைத் தண்டனை. புருணோ பிராகவார்ட்டுக்கு 5 வருட சிறைத் தண்டனை.

●●●



வியன்னாவில் கிறிஸ்டாவின் மடியில் மல்லாந்தபடி, அவள் ஊட்டிவிட்ட திராட்சை பழங்களை ஒவ்வொன்றாகச் சுவைத்துக் கொண்டிருந்தான் கார்லோஸ்.

"இதைவிட நல்ல திராட்சை இருக்கிறதே" என்றான். "ஏன் இது நன்றாக இல்லையா?" "இதைவிட அதுதான் எனக்குப் பிடிக்கும்." "நீ என்ன சொல்கிறாய்?" என்றாள், கார்லோஸ் கண்களை சிமிட்டியபடி.. விளக்கம் சொல்ல முயன்றபோது, தொலைபேசி அழைத்தது.

முக்கியமானவர்களுக்கு மட்டுமே தொலைபேசி இலக்கம் தெரியும். எனவே வரும் தகவல் அவசரமாக இருக்கலாம். பாய்ந்து சென்று தொலைபேசியை எடுத்து செவிக்கு கொடுத்தான்.

மறுமுனையில் இருந்து தீர்ப்பு விபரம் சொல்லப்பட்டது. கார்லோஸின் முகம் போன போக்கைப் பார்த்தே விஷயம் விபரீதம் என்று புரிந்துகொண்டாள் கிறிஸ்டா.

ரிசீவரை அறைந்து சாத்தினான். 'சில நிமிடங்களுக்கு முன் மடியில் கிடந்து குறும்பு செய்து, குறும்பாகப் பேசிய கார்லோஸ் வேறு: கிட்ட நெருங்கவே அஞ்சுமளவுக்கு முகத்தில் தணலோடு நிற்கும் இந்த கார்லோஸ் வேறு' என்று நினைத்தாள் கிறிஸ்டா. நொடியில் எப்படி தன்னை மாற்றிக் கொள்கிறான் என்று வியந்தாள்.

அவளாக எதுவும் கேட்கவில்லை. கேட்கவும் பயம். அவனாகச் சொல்லட்டும் என்று மௌனமாக இருந்தாள். பின்னர் சில நிமிடங்கள் கரைய, அவனே பேசினான்:

"தண்டனை கொடுத்துவிட்டார்களாம்! யாருக்கு? கார்லோஸின் ஆட்களுக்கு!" உரத்துச் சிரித்தான். வைத்தியம் பிடித்தவன் போல அங்குமிங்கும் நடந்தான். தொலைபேசி ரிசீவரை தூக்கிப் பார்த்துவிட்டு அடித்து வைத்தான். காலால் தரையில் உதைத்தான். கிறிஸ்டா லேசாகப் பயந்தாள்.

மீண்டும் தொலைபேசியருகே சென்று தொலைபேசி அகராதியைப் புரட்டிப்பார்த்தான். யாருக்கோ போன் செய்து, ஃபிரான்ஸ் புகையிரத நிலைய இலக்கம் கேட்டான்.

அந்த இலக்கத்தை சுழற்றி, மறுமுனை 'ஹலோ' என்றதும், "குறித்துக்கொள்ளுங்கள். இது வெறும் மிரட்டலல்ல; ரிவேரா கடுகதி ரயில் தூளாகப்போகிறது. முடியுமானால் தடுத்துப்பாருங்கள்.. நானா? நான்தான் கார்லோஸ்!" ரிசீவரை வைத்துவிட்டு, "கிறிஸ்டா" என்றான். பயத்தோடு அருகே போனவளை ஆவேசம் கொண்டவனாய் அணைத்துக்கொண்டு, அவள் இதழில் மூர்க்கமாக முத்தமிட்டான். கிட்டத்தட்ட ஐந்து நிமிட நேரம் கிறிஸ்டா இதழ் வலிக்கச் செய்யப்பட்டாள். பின்னர் அவனது ஆவேசம் முழுக்க அடங்கியது போல இருந்தது. தன் செயலுக்காக வெட்கப்படுகிறான் போலத் தெரிந்தது.

"உன்னை நோகடித்துவிட்டேனா கிறிஸ்டா. என்னை மன்னித்துக்கொள்!" என்றான்.

"அப்படியெல்லாம் இல்லை." என்றாள். இதழ்கள் வலிக்கத்தான் செய்தன.

"புறப்படுகிறோம். இன்றே புறப்படுகிறோம். தயாராகு!" என்றான். எங்கே? என்று அவள் கேட்கவில்லை.

●●●

கார்லோஸின் எச்சரிக்கையை அடுத்து ரிவேரா கடுகதி ரயிலுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

வெடிகுண்டுகளை கண்டுபிடிக்கும் சாதனங்கள் மூலம் ரயில் பெட்டிகள் அடிக்கடி பரிசோதிக்கப்பட்டன.

தனது ஆட்களுக்கு தண்டனை வழங்கியதற்காக கார்லோஸ் பதிலடி தருவது நிச்சயம். ஆனால் எங்கே, எப்போது? என்பதுதான் ஃபிரான்ஸ் அரசுக்கு தெரியாமல் இருந்தது.

ஃபிரான்சின் முக்கிய இடங்களில் எல்லாம் கார்லோஸின் புகைப்படத்தை சட்டைப்பையில் வைத்துக்கொண்டு புலனாய்வுப் பிரிவினர் மோப்பம் பிடித்துத் திரிந்தனர்.

சந்தேகத்துக்கிடமான பலர் கடும் விசாரணைக்கு உள்ளாகப்பட்டனர்.

அதேநேரம் கார்லோஸ் லெபனான் நாட்டில் பெய்ரூட் நகருக்குள் பிரவேசித்தான். கிறிஸ்டாவும் இருந்தாள்.

பெய்ரூட்டில் இருந்த ஃபிரான்ஸ் தூதரகம்தான் கார்லோஸின் குறி.

பத்துநாட்களாக கார்லோஸ் எங்கே போனான் என்றே தெரியவில்லை. அவனால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்ட ஒரு விடுதியில் கிறிஸ்டா மட்டும் தனியாக தங்கியிருந்தாள்.

பதினொராவது நாள் கார்லோஸ் திரும்பிவந்தான். தன்னை தனியாக விட்டுச் சென்றதற்காக கிறிஸ்டா கோபித்துக் கொண்டாள்.

"எங்கே போனாய் இத்தனை நாளும்?" என்று கேட்டாள்.

"மாலைச் செய்தியைப் பார் தெரியும்" என்றான்.

மாலையில் தொலைக்காட்சியில் தலைப்புச் செய்தியாக சொல்லப்பட்டது:

"பெய்ரூட்டில் உள்ள ஃபிரான்ஸ் தூதரகம் முன்பாக இன்று கார் குண்டொன்று வெடித்தது. 11 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். 27 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலர் ஆபத்தனா கட்டத்தில் உள்ளனர்."

கிறிஸ்டா கார்லோஸை பார்த்தாள். அவன் எவ்வித சலனமுமில்லாமல் கிளாஸில் பியர் நிரப்பிக்கொண்டிருந்தான்.

(பதட்டம் தொடர்கிறது)

# போட்டாரே ஒரு போடு!

பிரபல பொப் இசைப் பாடகி மடோனா தாயாகப்போகிறார் என்பது பழைய செய்தி. 37 வயதான மடோனா தனது 29 வயதுக் காதலன் கார்லஸ் லியோனுக்கு சமீபத்தில் ஒரு விருந்து கொடுத்தார்.

விருந்து எதற்கு? தன்னைத் தாயாக்கியதற்கு நன்றி சொல்ல வேண்டாமா? அதற்குத்தான்.

"எனக்கு ஒரு குழந்தை வேண்டும். என் கோடிக்கணக்கான டொலர் சொத்துகளுக்கு வாரிசு வேண்டும். என்னைத் தாயாக்கக் கூடிய ஆண்மகனைத் தேடுகிறேன்!" என்று அதிரடி அறிவிப்புச் செய்தவர் மடோனா.

அவர் தேடிய ஆண் மகன்தான் கார்லஸ் லியோன். "கார்லஸ் லியோனை திருமணம் செய்யும் எண்ணமெல்லாம் கிடையாது. அவர் என் இனிய நண்பர். நட்பாக இருக்க முடிகிறவரை நட்பாக இருப்போம்" என்று சொல்லியிருக்கிறார் மடோனா.



சென்றவாரம் மடோனா ஒரு பத்திரிகைக்கு பேட்டியளித்தார்: "நான் வித்தியாசமானவள். என் ரசனைக்கு ஏற்ப எந்த ஆணாலும் நடந்து கொள்ளமுடியாது. ஆண்கள் சுயநலக்காரர்கள். தங்கள் தேவையை மட்டுமே நினைப்பார்கள். என்னைப் போல சுதந்திர உணர்வுள்ள, ரசனைகள் தெரிந்த பெண்களைக் கண்டால் பயப்படுகிறார்கள்." என்று ஆண்களைச் சாடியிருக்கிறார் மடோனா.

விடுவாரா நிருபர். உடனே கொக்கியை போட்டுவிட்டார். "உங்கள் தற்போதைய காதலரும் ஏனைய ஆண்களைப் போலத் தானா?" என்று கேட்டுவிட்டார்.

அதற்கு மடோனா சொல்லியுள்ள பதில்: "நான் சந்தித்த ஆண்களில் இவர் சற்று வித்தியாசரகம். என் தேவை என்ன? என் விருப்பம் என்ன? என்பதை அறிந்து நடந்துகொண்டார். தவிர, தன்னம்பிக்கை உள்ளவர் லியோன். என் தீவிர ரசிகராகவும் இருப்பதால், என்னோடு மிக அன்பாக நட்பை வைத்திருக்கிறார்." என்று சொல்லியிருக்கிறார் மடோனா.

"உங்கள் நட்பு செக்ஸ் சுதந்திரத்தை கட்டுப்படுத்துமா?" என்று நிருபர் மீண்டும் ஒரு கொக்கிபோட, மடோனா, "என்னை, என்னைத் தவிர வேறு எவராலும் கட்டுப்படுத்த முடியாது. சாப்பிடுவது? தண்ணீர் குடிப்பது மாதிரி செக்சும் ஒரு தேவை. அதனை ரசனையோடு அணுகத் தெரிந்தால் அற்புதமாக உணர்வீர்கள்" என்று ஒரு போடு போட்டுள்ளார் மடோனா.

# மற்றொரு நடிகையின் முதல்வர் ஆசை

நடிகை விஜயசாந்தி அரசியலில் ஈடுபடுவதற்கான வெள்ளோட்டத்தில் இறங்கிவிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் நடிகை விஜயசாந்தி பிரசாரம் செய்தார். காங்கிரஸ் பெண் வேட்பாளரை ஆதரித்தும், சந்திரபாபு நாயுடு கட்சியின் வேட்பாளர் சாரதாவை ஆதரித்தும் பிரசாரம் செய்தார்.

விஜயசாந்தி 'யுவ சேனா? என்னும் அமைப்பையும் தொடங்கியுருக்கிறார். இதன் நோக்கம் சமூக சேவை மட்டும்தான் என்று அறிவித்திருக்கிறார்.


கூட்டத்தில் விஜயசாந்தி

ஆனால், விஜயசாந்தியின் வேகத்தைப் பார்த்தால் சமூக சேவையுடன் மட்டும் நின்று கொள்ளுவாரா என்பது சந்தேகம் தான்.

சமீபத்தில் திருப்பதியில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தினார் விஜயசாந்தி. ஆயிரம் பெண்களுக்கு சேலை வழங்கும் விழா என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

விழாவுக்கு பல்லாயிரம் மக்கள் திரண்டு வந்திருந்தனர். விஜயசாந்தி பேசிக்கொண்டிருந்தபோது பெண்கள் முண்டியடித்துக் கொண்டு மேடையை நோக்கிச் சென்றனர். அதனால் மேடை சரிந்து விழுந்தது. விஜயசாந்தியும் மேடையோடு சரிந்து விழுந்தார். உடனே அவரைக் காப்பாற்றி விட்டார்கள்.

மேடை சரிந்து விழுந்ததில் சிக்கிக் கொண்ட பெண்களில் ஒருவர் பலியானார். அவரது குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கினார் விஜயசாந்தி. காயமடைந்தவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் வழங்கினார்.

அரசியல்வாதிகளின் ஸ்டைலில் விஜயசாந்தி நிதி கொடுத்து கலக்கியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, கூட்டத்தில் உரையாற்றும் போது, "நலிந்த மக்களுக்கு என்ன குறை இருந்தாலும் என்னிடம் வாருங்கள். அதனைத் தீர்க்க 'யுவசேனா' பாடுபடும்" என்று முழங்கியுமிருக்கிறார்.

ஆந்திர மாநிலத்தில் சமீபத்திய தேர்தலில் சிவபார்வதியின் கட்சி தோல்வி கண்டுவிட்டது. சந்திரபாபு நாயுடுவுக்கு போட்டியாக சிவபார்வதி உருவாகாவிட்டால் ஒரு வெற்றிடம் ஏற்படும். அதனை விஜயசாந்தி நிரப்ப முயலலாம் என்று கருதப்படுகிறது.

எப்படியோ, மற்றுமொரு நடிகை முதல்வர் பதவிக்கு குறிவைத்திருக்கிறார்.

விஜயசாந்தி திருமணமாகி விவாகரத்து செய்துவிட்டு தனிமையில் இருக்கிறார். நிறையப் பணம் இருக்கிறது. அதனால் தனது கவனத்தை அரசியலில் திருப்புவது மூலம் திருப்திப்பட விரும்புகிறார்.

விஜயசாந்திக்கு உடன்பிறவாத சகோதரிகள் கிடைக்காவிட்டால் பிழைத்துக்கொள்வார்.

# அப்பா இம்ரான்கான்

பாகிஸ்தான் அரசியலில் இன்றைய சூப்பர் ஸ்டார் யார் என்று கேட்டால், இம்ரான்கான்தான்.

இம்ரான்கான் கலந்துகொள்ளும் பொதுக் கூட்டங்களுக்கு மக்கள் திரண்டு வருகிறார்கள். பாகிஸ்தான் பிரதமர் பெநாசிர் பூட்டோ திகைத்துப் போயிருக்கிறார்.

இதற்கிடையே இம்ரான்கானுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியும் கிடைத்திருக்கிறது. அவர் விரைவில் அப்பாவாகப் போகிறார். அதனை அறிந்ததும் இம்ரானின் தந்தையார் பெரிய விருந்தே நடத்திவிட்டாராம்.

இன்னும் சில மாதங்களில் ஜெமீமா பிரசவத்திற்காக தன் தாய் வீடு இருக்கும் இலண்டனுக்கு செல்லப் போகிறார்.

ஜெமீமா வீட்டிலும் குதூகலம். ஜெமீமாவின் தந்தைக்கு 4 மனைவிகள் மூலம் 8 பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் ஜெமீமா அம்மாவாகப் போவதை அறிந்து மகிழ்ச்சியடைந்துள்ளனர்.



கட்சி தொடங்கிய நேரம் இம்ரான்கான் அப்பாவாகப்போகிறார். குழந்தை பிறந்ததும் பிரதமராவாரோ?!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# இந்த மலை அசையவேண்டுமானால்....

ஒல்லியாக இருப்பவர்கள் சிலருக்கு உடம்பு பெரிதாக வேண்டும் என்று ஆசை வருவது இயல்பு. படத்தில் உள்ள மனித மலையைப் பாருங்கள். அவர் பட்டபாட்டைக் கேளுங்கள். உடம்பு வளர்க்க ஆசை வரவே வராது. இந்த பெரிய்ய ஆளின் பெயர் மைக்கேல் ஹெப்ரன்கோ. அமெரிக்காவைச் சேர்ந்தவர். வயது; இனிய 43. கண்டதையும் உண்டார். கண்டவர் அஞ்சும் குண்டானார். இறுதியான நிலவரப்படி இவரது எடை 950 இறாத்தல். ஒரு அறையில் நடமாட முடியாமல் முடங்கிக் கிடந்தார். சமீபத்தில் மூச்சுவிடக் கஷ்டப்பட்டார். இவரை பார்வையிட்ட வைத்தியர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடிவெடுத்தனர். சாதாரணமாக கொண்டுசெல்லக்கூடிய மலையா இது?

திமிங்கலங்களை தூக்கப் பயன்படுத்தும் ராட்சத படுக்கை ஒன்று தருவிக்கப்பட்டது. வீட்டின் அறைச்சுவரை இடித்து மதிப்புக்குரிய அண்ணரை வெளியே அசைத்தனர். அப்படியே ராட்சத படுக்கையில் சாய்த்துக் கொண்டுசென்றனர். கடந்த மே மாத மத்தியில்தான் இந்த மலை அசைக்கப்பட்டது. இப்போது சொல்லுங்கள் குண்டு குண்டு உடம்பு தேவைதானா?

# தகவல் பெட்டி

## எங்கே முறையிடுவோம்?



தமிழ்நாட்டில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் குண்டு வெடித்தது. அதனையடுத்து மதுரை மீனாட்சிக்கும் வி.ஐ.பிகளுக்கு கொடுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. கோயிலின் வாயிலில் 'மெட்டல் டிடெக்டர்' கருவி பொருத்தப்பட்டிருக்கிறது. அதனூடாகத்தான் பக்தர்கள் உள்ளே செல்ல வேண்டும். வீட்டுத் திறப்பை இடுப்பில் செருகி வைத்திருந்தாலும் 'மெட்டர் டிடெக்டர்' கீ.கீ என்று சத்தம் போடும். பாதுகாவலர்கள் அந்தப் பக்தர்களை கூப்பிட்டு தடவிப்பார்த்துவிட்டு உள்ளே விடுவார்கள்.

"பக்தர்கள் மீதே சந்தேகமா?" என்று கேட்டால் 'பராசக்தி' பாணியில் பதில் ரெடி. "பக்தர்களை சோதனையிடுகிறோம், பக்தர்கள் பயங்கரவாதிகள் என்பதற்காகவல்ல, பக்தர்கள் வேடத்தில் பயங்கரவாதிகள் உள்ளே புகுந்துவிடக்கூடாது என்பதற்காக!"

மனிதர்களுக்கு சோதனை வந்தால் ஆண்டவனிடம் முறையிடலாம். அந்த ஆண்டவனுக்கே சோதனையும், பாதுகாப்பும் தேவைப்படும் காலத்தில், பாவம் மக்கள் யாரிடம் முறையிடுவார்கள்?

↓ ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்நாட்டு யுத்தம். வழக்கம்போல அங்கும் யுத்தம் தனது திறமையை நிரூபித்திருக்கிறது. அகதி முகாம்கள் ஒருபுறம் அநாதை விடுதிகள் மறுபுறம். அதுதானே யுத்தத்திற்கு மகிழ்ச்சிக்குரிய சாதனை. தாய், தந்தை, சுற்றம் இழந்து வருத்தம் தோய்ந்த முகங்களுடன் இப்படி ஆயிரமாயிரம் குழந்தைகள் அநாதை இல்லங்களில் இருக்கின்றனர். உள்நாட்டு யுத்தம்ருசித்து சாப்பிட்ட மக்களின் தொகை 22 ஆயிரம். மாண்டவர் போக மீதி இருக்கும் இந்த கொஞ்சும் ரோஜாக்களுக்கு சமாதான நீர் வார்க்கப்போவது யார்? நல்ல வாழ்க்கை தரப்போவது யார்? எங்கும் ஒரே கேள்வி தானே!

## யார் வருவார்? யார் தருவார்?

# புதிது சிகிச்சை புதிது

→ பிரிட்டனின் தலைநகர் இலண்டனில் உள்ள மருத்துவ நிபுணர்கள் பெரும் சாதனை படைத்துள்ளனர். இரத்தப்புற்று நோய், இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட இரு குழந்தைகளுக்கு வெற்றிகரமாக சிகிச்சை செய்து உயிர் பிழைக்க வைத்து விட்டனர். எப்படி சிகிச்சை செய்தனர் தெரியுமா? பிறந்த குழந்தையின் தொப்புள் கொடி அறுக்கும்போது கிடைக்கும் இரத்த செல்களை வைத்து மாற்று அறுவைச் சிகிச்சை நடத்தினார்கள். இப்படியான சிகிச்சை நடத்தப்பட்டது இதுவே முதல் முறையாகும். படத்தில் இருக்கும் இரு குழந்தைகளும்தான் புதிய சிகிச்சை முறையால் உயிர் தப்பியவர்கள். டாக்டர்களுக்கு பாராட்டுக்கள் குவிந்து கொண்டிருக்கின்றன.





எதிரும் புதிருமாக வந்து கொண்டிருந்த இரண்டு பஸ்களுக்குள் திடீர் என்று லவ்வு. லவ்வுன்னா லவ்வு. பார்த்துக்கொண்டேயிருந்தால் எப்படி, நெருங்கி அன்போடு முத்தமிட்டுக் கொண்டன. இந்த எதிர்பாராத முத்தத்தால் பஸ்சுக்குள் இருந்த 13 பேர் பலியானார்கள். தமிழ்நாட்டில் நடந்த விபத்து இது. அரச பஸ்சுக்குள் புகுந்து தூள் பண்ணியிருப்பது தனியார் சொகுசு பஸ். தனியார் பஸ்சுக்கு எங்குமே வேகம் கொஞ்சம் அதிகம்தானாக்கும்.

## கொஞ்ச நேரம் கொஞ்சலாமா?

புதுப்புது ரகமாக கார்கள் அறிமுகமாகி வருகின்றன. புதுமை நாட்டம்தானே வாழ்வில் ஒரு பிடிப்பை உண்டாக்குகிறது. கார் வடிவமைப்பிலும் பல புதுமைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் புதுரக கார்களின் கண்காட்சி நடந்தது. அதில் பலரது வியப்பை தன்வசப்படுத்திய கார் இதுதான்.

## ரகம் புதிது








படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்

## சுந்தரின் சாமர்த்தியம்

'உள்ளத்தை அள்ளித்தா' பட வெற்றிக்குப் பின்னர் புரிபில் இருப்பவர்களில் இயக்குநர் சுந்தரும் ஒருவர். அந்த படவெற்றி தந்த தைரியத்தில்தானோ குஷ்புவுடன் காதல் என்பதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டார் சுந்தர்.

தனது படங்களின் கதைக்காக அதிகம் கஷ்டப்படமாட்டார் சுந்தர். பழைய தமிழ் படங்களின் வீடியோ கசட்டுகள் நிறைய வைத்திருக்கிறார்.

தற்போது சுந்தர் இயக்கத்தில் வளரும் படம் மேட்டுக்குடி. சிவாஜி நடித்த ஊட்டி வரை உறவு படத்தின் பாதிப்பு உள்ள கதை. எப்படியோ ரசிகர்களுக்கு பிடித்தால் சரிதான். கையிலே காசு, வாயிலே தோசை.

## ரஜினியோடு அமிதாப்?

ரஜினிகாந்தின் அடுத்த படம் யாருக்கு? என்பதுதான் விலை மதிப்பில்லாத கேள்வி.

பல ஊகங்கள் சொல்லப்படுகின்றன. அமிதாப்பச்சனின் பட நிறுவனத்திற்கு ரஜினி வாய்ப்புக் கொடுக்கலாம் என்றும் பேசப்படுகிறது.

அமிதாப்பச்சனின் தயாரிப்பில் ரஜினி நடித்தால், அந்தப் படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கத் தயாராக இருக்கிறாராம் அமிதாப்பச்சன்.

வழக்கம்போல ரஜினி என்றாலே புதிர்தான். அடுத்த படம் யாருக்கு என்று சொல்லாமலேயே நேபாளம் சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார் ரஜினி.

## கவலைப்படுகிறார் கார்த்திக்ராஜா

'மாணிக்கம்' படத்திற்கு இசை அமைத்திருப்பவர், இளையராஜாவின் மகன் கார்த்திக் ராஜா. பாடல் கசட் வெளியிடும் நடந்து முடிந்துவிட்டது. கார்த்திக் ராஜாவுக்கு மட்டும் திருப்தி இல்லை. தனது திறமை முழுவதையும் திரட்டி மெட்டமைத்து காட்டினாராம் கார்த்திக்ராஜா. அவற்றில் சிலவற்றை மட்டுமே தெரிந்தெடுத்தாராம் படத்தின் தயாரிப்பாளர்.

"எனது திறமையில் 20 சதவிதம்தான் மாணிக்கம் படத்தில் பயன்பட்டிருக்கிறது. நான் அடுத்து இசையமைக்கும் 'உல்லாசம்' படத்தில்தான் என்னுடைய திறமை முழுவதும் வெளிப்படும்" என்கிறார் கார்த்திக் ராஜா. அமிதாப்பச்சன் தயாரிப்பில் அஜித்குமார் நடித்துவரும் படம், உல்லாசம்.

## "மருந்து கொடு மாமா"

உதவிப் போலீஸ் கமிஷனர் பகவத்சிங் கண்டுபி… போர்வழி. கொலை வழக்கு ஒன்றில் சந்தேகநபரை ம… பிடித்து காவலில் வைத்திருக்கிறார். சந்தேக நபருக்கு அ… செல்வாக்கு இருக்கிறது. அதனால் விடுதலையாகி… விடுகிறான்.

வெறுப்போடு வீட்டுக்கு வருகிறார் பகவத்சிங். ம… 'மூட்' சரியில்லை என்று அம்மாவுக்கு தெரிகிறது. மரும… அழைக்கிறார். "அவன் கோபத்தில் இருக்கிறான் … சாந்தப்படுத்து." என்கிறார். மாமியாரின் உத்தரவு மருமக… இனிப்பாக இருக்கிறது. துள்ளியோடுகிறாள்.

படுக்கையறையில் கட்டிலில் கிடந்த கணவனை இறுக்… கட்டியணைத்துக் கொண்டு, "ஆத்துக்காரி உடம்பு மு… அனல் அடிக்குது மாமா, அதுக்கு ஒரு மருந்து கொடு ம…" என்று பாடுகிறாள்.

இந்தக் கிளு கிளுப்பான காட்சி 'பகவத்சிங்' படத்தி… படமாக்கப்பட்டது.

பகவத்சிங்காக நெப்போலியன் நடித்தார். மருந்து … மனைவி யார் தெரியுமோ? சங்கவி. காட்சி எப்படியிரு… என்று கற்பனை செய்ய முடிகிறதல்லவா.

## இந்த…



முரளி-சங்கீதா
படம்: ரத்னா

## 'காதல் ரோஜாவே'

விஜய்-சங்கவி நடித்த விஷ்ணு படத்தை தயாரித்த பட நிறுவனம் புதிதாகத் தயாரிக்கும் படம் 'காதல் ரோஜாவே.' இதில் கதாநாயகனாக நடிக்கிறார் பிரசாந்த். கதாநாயகிகள் இருவர். ஒருவர் ரம்பா. இன்னொருவர் பூவரசன் படத்தில் நடித்துவரும் ரக்ஷனா.

திரைக்கதை, வசனம், இயக்கம், கேயார். இசை, தேவா. பாடல்கள், வாலி, சண்டைப் பயிற்சி, விக்ரம் தர்மா.

ஆடல் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கதை அமைக்கப்பட்டுள்ளது. ரம்பா, ரக்ஷனா இருவரும் கவர்ச்சிப் போட்டியில் குதித்து ரசிகர்களை கலங்கடிக்க ஒரு நல்ல சந்தர்ப்பம்.

## பிரசாந்தின் நம்பிக்கை

பிரசாந்த்துக்கு இந்த வருடத்தில் வெற்றி தரக்கூடிய ப… எதிர்பார்க்கப்படுவது 'மன்னவா'. பிரசாந்த்-சங்கவி இணைப்பில்… மசாலாவும் கலந்து ரசிகர்களை சொக்கவைக்குமாம் என்று நம்புகிற…

'கல்லூரி வாசல்' படத்தில் அஜித்குமார் … டைரை தட்டிச் சென்றுவி… அதனால் 'மன்னவா' படத்தை பெரிதும் நம்பியிருக்கிறார் பிரசா…

## "கதைப்படி கேட்டால் கொடுப்பேன்"

மீனாவை எந்த நிருபர் சந்தித்தாலும் கேட்கும் ஒரு பொதுக் கேள்வி என்ன தெரியுமா? "கமல் முத்தம் நந்தால் மறுப்பீர்களா?" அதற்கு மீனாவும் சளைக்காமல் சொல்லும் பதில், "கமல் என்ன வேண்டுமென்றா முத்தம் தரப்போகிறார். கதைப்படி முத்தம் தரவேண்டுமானால்தான் தருவார். கதைப்படி முத்தக்காட்சி இருந்தால் நான் மறுக்கவா போகிறேன்!" ஆக, மீனா எதிர்பார்க்கிறார். கமல் கவனிக்க வேண்டும். மீனாவிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்கள் இவை.

**கேள்வி-** தமிழில் பம்பாய் நடிகைகளது ஆதிக்கத்தால் உங்களுக்கு பாதிப்பா?

**மீனா:-** கிடையவே கிடையாது. எனக்கு கிடைக்கும் வரவேற்பு தொடர்ந்து கிடைத்தபடிதான் இருக்கிறது.

**கேள்வி-** தெலுங்கில் கவர்ச்சி காட்டும் அளவுக்கு தமிழில் நீங்கள் காட்டுவதில்லையே?

**மீனா:-** யார் சொன்னது. மாமன் மகள் படத்தில் சத்யராஜ் சார் சொன்னதின்படி நடித்தேன். இயக்குநர் குருதனபால் காட்சியைப் பற்றி விளக்கியபோது முந்தானையை ஒதுக்கிவிட்டுக்கொண்டு கவர்ச்சி தெரியுமாறு நடிக்கச் சொன்னார். நான் முதலில் மறுத்தேன். தமிழ் பட ரசிகர்கள் என்மீது வைத்துள்ள மதிப்பை கெடுத்துக் கொள்ளக்கூடாது என்றுதான் மறுத்தேன். பின்னர் சத்யராஜ் சார் தலையிட்டு அந்தப் பாடல் காட்சிக்கு கவர்ச்சி முக்கியம், பயப்பிடாம நடி என்று தைரியம் சொன்னார். நடித்தேன். கதைப்படி கவர்ச்சி தேவையானால் தமிழ் தெலுங்கு என்றெல்லாம் பாகுபாடு காட்டமாட்டேன்.

**கேள்வி-** அவ்வை சண்முகியில் கமல் உங்களை முத்தமிடுகிறாரா?

**மீனா:-** நடித்துக் கொண்டிருக்கும் படங்கள் பற்றி நான் வெளியே பேசுவதில்லை. கதைப்படி முத்தம் தேவையானால் நான் ரெடி.

**கேள்வி-** இப்போதெல்லாம் தொப்புள் காட்டி நடிக்காத நடிகைகளே கிடையாது. அது தேவையற்ற கவர்ச்சிதானே?

**மீனா:-** தேவையற்றது என்றால் இயக்குநர் ஏன் காட்டச் சொல்கிறார். ரசிகர்களின் விருப்பம் அறிந்துதான் காட்சிகளை அமைக்கிறார்கள். ரசிகர்களுக்கு மகிழ்ச்சி கொடுக்க வேண்டியது நமது கடமைதானே. தவிர, நமது அங்கங்களை கமராக்கள் மூலமாக குளோசப்பில் எப்படியெல்லாம் காட்டுகிறார்கள் என்பது நடிக்கும்போது தெரியாது. பின்னர் படத்தைப் பார்க்கும் போதுதான் தெரிகிறது என்று சொல்லியுள்ளார் மீனா.



ஊர்வசி
படம் நான் ஒரு இந்தியன்

## பரிசாக நாற்காலி

இயக்குநரும் நடிகருமான பார்த்திபன் ஏதாவது வித்தியாசமாக செய்து அடிக்கடி அசத்திவிடுவார். கருணாநிதி முதல்வரானதும் பல நடிகர்கள் மாலையுடனும், பொன்னாடையுடனும் சென்றனர். ஆனால் பார்த்திபன் மட்டும் வித்தியாசமாக ஒரு பரிசு கொடுத்தார். கை அளவு உயரத்தில் உதயசூரியன் சின்னம் பொறிக்கப்பட்ட வெள்ளி நாற்காலியை தனது பரிசாகக் கொடுத்தார் பார்த்திபன். கலைஞரே வியந்து பாராட்டினாராம்.

## சொந்தப்…

## அரசியலில் விஜயகாந்த்

கே.ஆர் இயக்கத்தில் விஜயகாந்த் நடித்துவரும் படத்திற்கு 'அலெக்சாண்டர் தி கிரேட்' என்றுதான் முதலில் பெயரிடப்பட்டிருந்தது. பின்னர் 'அலெக்சாண்டர்' என்று பெயரைச் சுருக்கிவிட்டார்கள்.

விஜயகாந்த் இப்போதெல்லாம் அரசியலில் ஈடுபாடு காட்டத் தொடங்கியிருக்கிறார். கருணாநிதி முதல்வரானதும் உடனே சென்று வாழ்த்தினார். ஜெயலலிதா தோல்வியடைந்ததுக்கு காரணம் வளர்ப்பு மகன் திருமணம்தான் என்று ரி.விக்கு பேட்டியளித்தார்.


எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி அம்மாளின் இறுதிச்சடங்கிலும் விஜயகாந்த் முன்வரிசையில் காணப்பட்டார்.

ஏற்கெனவே ஒரு பேட்டியில் அரசியலில் ஈடுபடுவேன். எப்போது என்று தான் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று கூறியிருந்தார்.

## மொழி மாறும் படம்

கன்னடத்தில் வெற்றி பெற்ற படம்தான் தமிழில் 'சர்க்கிள் இன்ஸ்பெக்டர்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டுள்ளது. பிரபுதேவாவின் சகோதரர்களில் ஒருவரான ராஜூ சுந்தரம்-சுபாஸ்ரீ ஜோடியாக நடித்துள்ளனர்.

வைஜெந்தி ஐ.பி.எஸ் படத்தை இயக்கிய மோகன் காந்தி இயக்கியுள்ளார்.



பார்த்திபன்-மீனா
படம் பாரதி கண்ணம்மா



ரோஜா



ராஜூ சுந்தரம்-சுபாஸ்ரீ
படம் சேர்க்கிள் இன்ஸ்பெக்டர்

## சுதந்திர ரோஜா

இந்தியாவில் மத்திய ஆட்சியில் காங்கிரஸ் மீண்டும் வரக்கூடாது என்று பிரார்த்திப்பவர்களில் முதல் ஆள் யார் தெரியுமா? இயக்குநர் ஆர்.கே. செல்வமணிதான்.

மத்தியில் காங்கிரஸ் இல்லாவிட்டால் முடங்கிக் கிடக்கும் 'குற்றப்பத்திரிகை' படத்தை தூசுதட்டி வெளியிட்டுவிடலாமல்லவா.

தற்போது செல்வமணி இயக்கும் 'அரசியல்' படத்தில் மம்முட்டிக்கு ஜோடி…



படிப்பகம்

www.padippakam.com

## ... இந்தா... எடுத்துக்க

வருகிறாள் அழகு நங்கை. குளித்துவிட்டு தலையில் தண்ணீர் ...ச் செல்கிறாள். துவைத்த துணிகள் தோளில் இருக்கின்றன. ...கிறான் தருமராசா. அவனைக் கண்டதும் அழகிக்கு ஆனந்தம். ...வன் தோளில் இருந்த துணி நழுவி தரையில் விழுகிறது. ...ய எடுத்து என் தோளில் போடுப்பா" என்கிறாள் அழகி. அவன் ...நின்ற விதமே தருமராசாவுக்கு ஒரு விதமான மயக்கம் தருகிறது. தோளில் துணியைப் போட்டுக்கொண்டே தொட்டுப் பார்க்கிறான். அவன் கைபட்டதும் அழகியின் உடலில் மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. உடனே கனவு உலகில் சஞ்சரிக்கிறாள் அழகி.

"இந்தா... இந்தா.. எடுத்துக்க, நான்தான் கருப்பட்டி எடுத்துக்க.." என்று பாடத்தொடங்குகிறாள்.

தருமராசாவாக ராம்கியும், அழகி சிந்தாமணியாக பாலாம்பிகாவும் நடித்தனர். இக்காட்சி இடம் பெறும் திரைப்படம் 'என் ஆசை தங்கச்சி.'

இயக்கம், கே.ஷண்முகமணி. பாடல்கள், இசை, டி.ராஜேந்தர்.

## திகைக்க வைக்கும் வாக்குமூலங்கள்

தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு மூன்று நடிகைகள் தந்துள்ள வாக்குமூலம் இது. படித்துப் பார்த்து பயந்துவிடாதீர்கள்.

### ரம்யா கிருஷ்ணன்

குறைவான உடையில் என்னைக் காண ரசிகர்கள் விரும்பினால் அதற்கு நான் ரெடி. பார்ப்பவர்கள் 'ஓ! வாவ்!' என்று சொல்ல வேண்டும். அவ்வளவுதான். கொண்டை உள்ள சீமாட்டிதானே முடிந்து கொள்ள முடியும். செக்ஸ் மிக அற்புதமான விஷயம். திருமணத்திற்கு முன்பு என்றால் ஜாக்கிரதையாகச் செயற்பட வேண்டும்.

### நக்மா

மிக மிக அழகான ஆண்களை பெறும் வாய்ப்புக்கள் எனக்கு வந்தன. ஒரு பெண்ணிடம் ஆண் என்னென்ன எதிர்பார்ப்பானோ அவையனைத்தும் என்னிடம் உள்ளன. நான் ஒருவரைக் காதலித்தேன். பின்னர் சரிப்பட்டு வராமல் இருவரும் பிரிந்து விட்டோம். எனக்கு வரப்போகும் கணவன் புத்திசாலியாய், அழகாய், முக்கியமாக ரொம்பப் பணக்காரனாய் இருக்கவேண்டும்.

### மனிஷா கொய்ராலா

திருமணத்திற்கு முன் 'செக்ஸ்' அவசியம் என்பது என் கருத்து. அவன் ஆண்மகன் தானா என்று தெரிய வேண்டாமா? கல்யாணமானபின் அவன் ஆண்மகன் இல்லையானால் பெண் என்ன செய்வாள். கணவன் மனைவிக்கிடையே உறவு பலப்படுவதும் படுக்கையில் தான். பாழ்படுவதும் படுக்கையில்தான்.

## சுடுமா பனித்துளி?

சி.சுந்தர் இயக்கத்தில் தயாராகும் மற்றொரு படம் 'நாட்டரசன் கோட்டை' ஜெயராமும், கவர்ச்சிக் குண்டு ரம்பாவும் ஜோடியாக நடிக்கின்றனர்.

ஜூன் மாதத்தில் படப்பிடிப்பை ஆரம்பித்து ஒரே சூட்டில் முடிக்கப்போகிறார்களாம்.

கவுண்டமணி, செந்தில், மணி வண்ணன் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை, தேவா. பாடல்கள், பழனிபாரதி. பாடல் ஒன்றில் சிறு துளி இது: "தென்றல் நிலவிங்கு நான் காண வருமா? பனித்துளி என்ன ரோஜாவைச் சுடுமா?" என்று தொடர்கிறது பாடல்.



ரேஷ்மா
படம்: வெண்ணிலா

## முகப்பில் பார்த்திபன்–மீனா

படம்: – பாரதி கண்ணம்மா

## ஹீராவின் படு வேகம்

...காதல் கோட்டை' படத்தில் தாராளத்தின் உச்சத்திற்கு சென்றுவிட்டார் .... முதல் முறையாக சொந்தக் குரலில் பேசியும் நடித்திருக்கிறார். ...தல் கோட்டை' படம் வெளியானால் ரசிகர்களின் கனவுக் ...டைகளை கைப்பற்றிவிடலாம் என்று நம்புகிறார் ஹீரா.

...தல் கோட்டை' படத்தில் சகல வகையிலும் ஒத்துழைத்ததற்காக ...ரிப்பாளர் ஹீராவுக்கு ஒரு கார் வாங்கி கொடுத்திருக்கிறார். ...கு நன்றாக கார் ஓட்டத் தெரியும். படு வேகமாக கார் ...ல்தான் அவருக்கு அலாதி ஆசை. ஹீரா எதிலுமே ...ன்.


## ...யகனாகிறார் பிரகாஷ்ராஜ்

... படத்தின் மூலம் வில்லன் நடிகர்களில் வித்தியாச ...ரவேற்புப் பெற்றவர் பிரகாஷ்ராஜ். அதனைத் தொடர்ந்து ...ல் வில்லனாக நடித்துவருகிறார். 'டூயட்' படத்தில் ...ான் பிரகாஷ்ராஜுக்கு வில்லன் வாய்ப்புக் கொடுத்து ...கப்படுத்தியிருந்தார். அதனையடுத்து 'ஆசை' படம் ...னது.

...பிரகாஷ்ராஜுக்கு கதாநாயகன் பிரமோஷன் கிடைத் ... கதாநாயகனாக நடிக்கப் போகும் படம் 'சொர்ணமுகி' ...ரு வரை ஜோடியாக நடிக்கவைக்க திட்டமிட்டுள்ளனர். ...ன், செந்தில், சார்லி, ஸ்ரீவித்யா ஆகியோரும் ...தொட்டாச் சிணுங்கி' படத்தை இயக்கிய கே.எஸ். ...கதை, வசனம் எழுதி இயக்கவுள்ளார். இசை, ஸ்வரராஜ். ...பிள்ளை படத்திற்கு இசை அமைத்தவர்.

தனது சொந்தப்படமான 'விஸ்வநாத்' மூலம் தமிழ் பட உலகில் கொடிகட்டிப் பறப்பேன். என்று சொல்கிறார் சரவணன்.

"தன்னம்பிக்கையும், துணிச்சலும்தான் உன் உயிர் மூச்சு. படம் வெளியானால் ஒருவர் கூட பேசமாட்டார் கேலிப் பேச்சு." என்கிறார் சரவணன். சொந்தப்படம் எடுத்து கருண்டவர்கள் பட்டியலில் சேராவிட்டால் சரிதான்.



சத்யராஜ்
படம்: சிவசக்தி

## நூறடி உயரத்தில் சத்யராஜ்

'முதல் வசந்தம்' படத்தில் நடித்தது போன்ற கெட்-அப்பில் மீசையில்லாமல் சத்யராஜ் நடித்துள்ள படம் சிவசக்தி. வில்லத்தனமான நடிப்புத்தான். படத்தில் அவருக்கு ஜோடி கிடையாது. பம்பாய் இறக்குமதியான தேவயாணியோடு ஒரு நடனக் காட்சி வைத்திருக்கிறார்கள். சத்யராஜை மயக்க தேவயாணி போடும் ஆட்டம் ரசிகர்களுக்கு விசேஷ போனஸ்

'சிவசக்தி' படத்தின் படப்பிடிப்பு மொரிசியஸ் தீவில் மட்டும் 25 நாட்கள் நடந்தது. மொரிசியஸில் நான்கு பக்கமும் கடல் சூழ்ந்த உயரமான 'மகரத் தீவில்' ஹெலிகொப்டரில் சென்று படப்பிடிப்பு நடத்தினார்கள். அங்கு பிரபுவும், சத்யராஜும் வில்லனின் ஆட்களை படகில் துரத்திச் செல்லும் காட்சி படமாக்கப்பட்டது. அதற்காக 6 படகுகளும், 2 ஹெலிகொப்டர்களும் பயன்படுத்தப்பட்டன.

சத்யராஜ் 'பாரா செல்' எனப்படும் பாராசூட்டில் 100 அடி உயரத்தில் பறந்த காட்சியும் படமாக்கப்பட்டது.

பாடல் கசட் வெளிவந்துவிட்டது. படமும் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது.

## தேவியின் இரகசியத் திருமணம்

நடிகை ஸ்ரீதேவிக்கும் இந்தி நடிகர் அனில்கபூரின் சகோதரர் போனி கபூருக்கும் இடையில் காதல் விவகாரம் இருந்தது நீண்டகால சங்கதி. போனிகபூருடன் ஒரே பங்களாவில் சில காலம் ஒன்றாக இருந்தார் ஸ்ரீதேவி. பின்னர் இருவரும் பிரிந்துவிட்டனர். ஸ்ரீதேவி வீட்டில் பயங்கரமான எதிர்ப்பு ஏற்பட்டதுதான் பிரிவுக்குக் காரணம்.

தற்போது மீண்டும் கிசு, கிசு பரவியிருக்கிறது. போனி கபூரை இரகசியத் திருமணம் செய்து கொண்டார் ஸ்ரீதேவி என்று பம்பாயில் பரவிய தகவல் சென்னைக்கும் வந்துவிட்டது.

உறுதியாக மறுத்திருக்கிறார் ஸ்ரீதேவி. 'யாருடனும் இரகசியத் திருமணம் நடக்கவில்லை' என்கிறார்.

இதற்கிடையே அமிதாப்பச்சனின் தயாரிப்பில் உருவாகும் நான்கு படங்களில் ஒரு படத்தில் கதாநாயகி ஸ்ரீதேவிதானாம். அமிதாப்பின் ஜோடியாக நடிப்பதையிட்டு மகிழ்ச்சியாக இருக்கிறார் ஸ்ரீதேவி.

## மினி சினி

* 'பாட்ஷா', 'முத்து' ஆகிய படங்கள் தெலுங்கில் மொழிமாற்றப் பட்டு வெற்றிகரமாக ஓடியுள்ளதைத் தொடர்ந்து ரஜினி நடித்த பழைய படங்கள் சில மொழி மாற்றப்படுகின்றன. இவற்றில் 'மிஸ்டர் பாரத்' முதலில் தெலுங்கு பேசவுள்ளது.
* பழைய படங்களின் பெயரைப் புதுப்படங்களுக்கு வைப்பது கமலின் ஸ்டைல் 'அபூர்வ சகோதரர்கள்', 'சதிலீலாவதி', 'பாசவலை' ஆகியவற்றைத் தொடர்ந்து 'அமரகாவியம் என்ற படத்தைத் தயாரித்து நடிக்கவுள்ளார். 'அமரகாவியம்' சிவாஜி நடித்த படமொன்றின் பெயர்.
* சித்ரா லட்சமணன் இயக்கித் தயாரிக்க பிரபு-நக்மா நடிக்கும் 'பெரியதம்பி' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக 'கருத்தம்மா' ராஜஸ்ரீ நடிக்கிறார்.
* ஆர்.கே.செல்வமணி இயக்கத்தில் மம்முட்டி-ஷில்பா சிரோத்கர் நடிக்கும் 'அரசியல்' படத்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார் பிரசாந்த். இதில் பிரசாந்திற்கு ஜோடியாக செல்வமணியின் ஆஸ்தான நாயகி ரோஜா நடிப்பார் எனத் தெரிகிறது.
* 'தாய்க்குலமே தாய்க்குலமே' தெலுங்கில் தயாரிக்கப்பட்டு வருகிறது. பாண்டியராஜன் வேடத்தில் வெங்கடேஷும், ஊர்வசி வேடத்தில் சௌந்தர்யாவும் நடிக்கின்றனர் நேபாளப் பெண் வேடத்தில் வினிதா நடிக்கிறார்.
* 'பூவே உனக்காக' படத்தைத் தொடர்ந்து விஜய்-விக்ரமன் கூட்டணி புதிய படமொன்றில் மீண்டும் இணைகிறார்கள். இப்படத்தை லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.
* 'அம்மன்' தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் வெற்றி பெற்றதால், அதே பாணியில் கன்னடத்திலும் ஒரு படம் தயாராகின்றது. இதில் சரண்ராஜ் கதாநாயகனாக நடிக்கிறார்.
* 'முஸ்தபா' படத்தைத் தயாரித்த பி.ஜி.ஸ்ரீகாந்த், அடுத்ததாக நெப்போலியன் கதாநாயகனாக நடிக்க 'அப்துல்லா' என்ற படத்தைத் தயாரிப்பதாக இருந்தார். தற்போது இந்தப் படம் நிறுத்தப்பட்டுவிட்டது.
* அஜித்குமார்-ஹீரா நடிக்கும் 'காதல் கோட்டை' படத்தை இயக்கி வரும் அகத்தியன் அடுத்து இயக்கவிருக்கும் படத்திற்கு 'நினைவோ ஒரு பறவை' என்று பெயரிட்டுள்ளார்.
* தெலுங்கில் சிரஞ்சீவி-விஜயசாந்தி நடித்து தமிழுக்கு மொழிமாற்றப் பட்டுக்கொண்டிருக்கும் 'வீரவிளையாட்டு' தமிழில் ரஜினி-அமலா நடித்த 'மாப்பிள்ளை' படத்தின் தெலுங்குப் பதிப்பு ஆகும்.



## நக்மா ஒத்துழைப்பு

கிட்டத்தட்ட குஷ்புக்கு சமமாக பிரபுவுக்கு ஈடுகொடுத்துவருகிறார் நக்மா. இருவரும் இணைந்து நெருங்கி நடிக்கும் படம் 'பெரியதம்பி'

முதல் கட்ட படப்பிடிப்பு முடிவடைந்து விட்டது. "வெள்ளிக்கிழமை விரலைத் தொட்டான்." என்று ஆரம்பமாகும் பாடல் காட்சியில் பிரபுவே எதிர்பாராதளவுக்கு நெருங்கி நடித்தாராம் நக்மா.

கவுண்டமணி, செந்தில், விஜயகுமார், வடிவுக்கரசி, ராஜஸ்ரீ, ரேகா, தேவன் ஆகியோரும் நடித்துவருகின்றனர். இசை, தேவா. பாடல்கள், வைரமுத்து. திரைக்கதை வசனம், இயக்கம், சித்ராலட்சுமணன்.



ராஜ்கிரண்-வனிதா
படம்: மாணிக்கம்

...ர். கவர்ச்சிப் புயல். ... பற்றி மற்றொரு ... ஆருயிர் காதலி ...ரண சுதந்திரம் ...ர். அதனால்தான் ... படங்களில் பல ... படு நெருக்கமாக ...றார் ரோஜா. ...நறைந்தது மூன்று ...ரசிகர்களை மகிழ் ... திருமணம் செய் ...ராஜா. செல்வமணி

## 'வருங்கால முதல்வர்'

விஜயசாந்தி அரசியலில் குதிக்கப்போவது உறுதியாகிவிட்டது. அதற்கான ஒத்திகையிலும் இறங்கிவிட்டார். தான் புதிதாக நடிக்கப் போகும் படங்களில் சமூக சேவையில் நாட்டமுள்ள பாத்திரங்களில் நடிக்கப் போகிறாராம்.

ரசிகர்கள் விஜயசாந்தியை நேரில் கண்டுவிட்டால் கண்டபடி உணர்ச்சிவசப்பட்டு 'வருங்கால முதல்வர் வாழ்க' என்கிறார்கள். தடுக்காமல் அனுமதித்து ரசிக்கிறார் விஜயசாந்தி.


படிப்பகம்

www.padippakam.com

# படிக்கவைக்க அடிக்க வேண்டாம்

பரீட்சைக் காலங்களில் பிள்ளைகளுக்கு ஒருவித பயம் வரும். வராவிட்டாலும் பெற்றோர்கள் அவர்களைப் பயமுறுத்தி வரவழைத்து விடுவார்கள். "பரீட்சை நேரத்தில் என்ன ரீ.வி. பார்க்கிறாய்?" என்று அதட்டுவார்கள்.

'படி படி' என்று குழந்தைகளை இம்சை செய்யக்கூடாது. பரீட்சை நேரத்தில் பய உணர்வுகள் வராமலிருக்க பெற்றோர்கள் சில விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

* பரீட்சை நெருங்குவதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பே, பிள்ளைகள் பரீட்சைக்குத் தயாராக இருக்க அவர்களுக்கு உதவ வேண்டும். பரீட்சை எப்படி எழுத வேண்டும் என்பதில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.
* எந்த வகுப்பில் படிக்கிறார்களோ, அவர்களை ஒத்த மற்ற மாணவர்கள் எப்படிப் படிக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு அந்த வழிகளைப் பயன்படுத்தலாம்.
* பிள்ளைகளுக்குப் பாடங்களில் சந்தேகங்கள் இருந்தாலோ, விளக்கங்கள் தேவைப் பட்டாலோ, உரிய பாடப்புத்தகங்களை வாங்கிக் கொடுத்து உதவலாம்.
* படித்த பாடங்களை, சரியாக மனப்பாடம் செய்திருக்கிறார்களா என்பதைப் பெற்றோர்களிடம் ஒரு முறை சொல்லிப் பார்க்கச் செய்யலாம்.



* இரவில் வெகுநேரம் கண் விழித்துப் படிக்கும் பழக்கத்தை விடும்படியும், விடியற் காலையில் எழுந்து படிப்பது நல்லது என்பதையும் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.
* பாடசாலையில் இருந்து வந்ததும் அரை மணிநேரமோ, ஒரு மணி நேரமோ விளையாட அனுமதிக்க வேண்டும். விளையாடும்போது அவர்களுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியும், சுறுசுறுப்பும் விளையாடிய பிறகு படிக்கும் போது களைப்பைத் தோற்றுவிக்காது.
* அதிக நேரம் புத்தகங்கள் படிப்பதால் கண்கள் சோர்ந்து போகும். சோர்வு ஏற்படாமல் இருக்க குளிர்ந்த நீரில் தோய்த்த பஞ்சை கண்களை மூடி அதன் மேல் சிறிது நேரம் வைத்திருங்கள். சோர்வு போய் விடும்.
* பிள்ளைகள் படிக்கும் நேரத்தில் வீட்டில் உள்ளவர்கள் அரட்டை அடித்தோ, ரீ.வி. பார்த்தோ அவர்களின் கவனித்தைச் சிதறடிக்கக்கூடாது.
* தினமும் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை படிக்கிறார்களா என்று கவனிக்க வேண்டும்.

படிப்பது என்பதை ஒரு பெரிய வேலை என்று நினைக்காமல், பரீட்சை என்பதை ஒரு பயங்கரமான விஷயம் என்று எண்ணாதபடி அவர்களின் மனங்களைத் தயார் செய்தால் பரீட்சை இனிக்கும். படிப்பும் பிடிக்கும்.

# தொப்பை தொலைய ஒரு வழி

* பல பெண்களுக்கு அதிக வயதாவதற்குள்ளேயே தலைமுடி நரைக்கத் தொடங்கி விடும். இதற்குக் காரணம் சூரியக் கதிர்களின் நேரடியான தாக்குதல் மற்றும் அதிகமாக ஷம்பு பயன்படுத்துதலே ஆகும். இந்த இளநரையை அழகு நிலையங்களிலே ஹென்னா சிகிச்சை (HENNA TREATMENT) மூலம் தடுக்கலாம்.
* சில பெண்களுக்கு உதடுகள் தடித்துக் காணப்படும். அவர்கள் மேக்கப் போடும் போது லிப்ஸ்டிக்கால் உதட்டை சிறிதாக வரைந்து கொள்வதன் மூலம் அழகாகக் காட்டிக் கொள்ளலாம்.
* பெண்களில் பலருக்கு பாதங்களில் பித்த வெடிப்பு ஏற்படுகிறது. இதனைப் போக்க ஒரு எளிய வழி:

இளஞ்சூடான நீரில் எலுமிச்சம்பழச்சாறு 1 தேக்கரண்டி, டெட்ரோல் 1/2 கரண்டி, கொஞ்சம் ஷம்பு ஆகியவற்றைக் கலந்து அதில் பாதங்களை 15 நிமிடம் நனைக்க வேண்டும். பின்னர் நன்றாக அழுக்குப் போக பிரஷ் கொண்டு தேய்த்துக் கழுவ வேண்டும். பாதம் மென்மையாக இருப்பதற்கு ஏதாவது கிரீம் உபயோகிக்கலாம்.

* பெண்களுக்குத் தொப்பை மற்றும் உடலில் தேவையில்லாத பல பகுதிகளில் சதை போட்டு விடுகிறது. இது அழகை முற்றிலுமாகக் கெடுத்து விடுகிறது. உடலை ஸ்லிம்மாக வைத்துக் கொள்ளத் தினமும் காலையில் 3 முதல் 4 கிலோ மீட்டர் வரை நடக்கலாம். அல்லது காலையும் மாலையும் 5 முறை மாடிப்படிகளில் ஏறி இறங்கலாம். அல்லது தினமும் 200 இல் இருந்து 300 முறை ஸ்கிப்பிங் செய்யலாம்.



அவரவர் வசதிக்கேற்ப இதில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து செய்து வர வேண்டும்.

* நாம் வெளியே எங்கு சென்று வந்தாலும் உடனே நன்றாக முகத்தை அலம்ப வேண்டும். இரவு தூங்கப் போகும் முன்னரும் முகம் அலம்ப வேண்டும். முகத்தில் தூசிகள் படியாமல் பார்த்துக் கொண்டாலே முகப்பருக்கள் வருவதைத் தடுத்து விடலாம்.



லேடீஸ்

# குங்குமக் காயம்

குங்குமம் இட்டுக் கொண்டு அதனால் சிலருக்கு தழும்பு ஏற்படுவதுண்டு. தழும்பும் புண்ணும் நீங்க மூங்கில் இலையை எடுத்து சந்தனம் அரைப்பது போல் அரைத்து போடவும். புண்ணும் நீங்கி தழும்பும் மறையும்.

ருக்கா–நாதன்

## தூங்க முன் கவனிக்கவும்

இரவில் படுக்கும் முன்பு நன்றாக முகத்தையும் கழுத்து பகுதியையும் கழுவித் துடைத்து விடுங்கள். வரண்ட சருமம் உள்ளவர்கள் கூடுதலாக சோப்பு பாவிக்க கூடாது. கிளிசரின் எலுமிச்சைப் பழச்சாறு, ஹைட்ரஜன் பெரக்சைட், தண்ணீர் ஆகிய நான்கிலும் ஒவ்வொரு அவுன்ஸ் சேர்த்து கலந்து வைக்கவும். இரவில் உறங்கப் போகுமுன்பு இதில் கொஞ்சம் எடுத்து முகத்திலும் கழுத்து பகுதியிலும் லேசாகத் தடவி கொண்டு படுங்கள். காலையில் எழுந்ததும் நன்றாக கழுவி விடுங்கள். சருமம் வரண்டு போகாமல் மினுமினுப்புடன் இருக்கும்.



## பழங்களால் பளபளப்பு



நன்றாய்ப் பழுத்த பப்பாளியை நன்றாய் மசித்து முகத்திற்கு மாஸ்க் போல் தடவி 15 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இதிலுள்ள "பெக்டின்" எனும் சத்து முகத்தில் காய்ந்த தோலையும் காய்ந்த திசுக்களையும் நீக்கி புதிய சருமத்தை தோன்றச் செய்யும். முகம் தனிப் பொலிவுடன் பளபளக்கும். வயதானவர்கள் 'பெட்சோர்' என்னும் சரும வியாதியால் அவதிப்படும்போது இதை அப்படியே பாதித்த இடங்களில் தடவி வந்தால் கிருமிகள் நீங்கி புதுத் தோல் தோன்றும்.

## வாழைப்பழம்

எண்ணெய்ப் பசை அதிகம் உள்ள சருமத்திற்கு அரை வாழைப்பழத்தை நன்றாக மசித்து அத்துடன் 1 தேக்கரண்டி தேன் மற்றும் 1 தேக்கரண்டி ஆரஞ்சுப் பழச்சாறு கலந்து முகத்திற்கு மாஸ்க் போட்டு 15 நிமிடம் கழித்து கழுவவும். முகம் நன்றாய் சுத்தம் அடைந்து திறந்த துவாரங்கள் மூடப்பட்டு முகம் வெண்மையுடன் விளக்கும்.

# கூந்தலோ கூந்தல்

கூந்தலுக்கு எண்ணெய் மிகவும் அவசியம். கூந்தலில் எண்ணெய் தடவாவிடில், அது வறட்சியடைந்து, உதிர ஆரம்பித்து விடும். எண்ணெய் தடவும் போது அது தலையின் துவாரங்களுக்குள் சென்று முடி வறட்சியடையாமல் இருக்க போதிய ஊட்டத்தை அளித்துப் பாதுகாக்கிறது.

கடைகளில் இப்போது எத்தனையோ வகை எண்ணெய்கள் கிடைக்கின்றன. மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட எண்ணெய்களும், புரதம் மற்றும் விட்டமின் பி. கொம்பிளெக்ஸ் சேர்க்கப்பட்ட எண்ணெய்களும் கிடைக்கின்றன.

ஒரு எண்ணெயை உபயோகிக்க ஆரம்பித்து விட்டால், அதையே தொடர்ந்து உபயோகிப்பது நல்லது. தேங்காய் எண்ணெய் மற்றும் மருதோன்றி எண்ணெய், கறிவேப்பிலை எண்ணெய் போன்றவை கூந்தலைச் சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும், உதிராமலும், இளநரையின்றியும் வைத்திருக்க உதவும், நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்றவையும் மிகச் சிறந்தவை.

எந்த எண்ணெய் ஆனாலும் அதை இலேசாகச் சூடாக்கி தலையில் தடவி, சிறிது நேரம் ஊறிய பிறகு குளிப்பது நல்லது. எண்ணெயைத் தடவி, ஒரு சூடான துவாயைத் தலையில் கட்டி, பத்து நிமிடங்கள் ஊறிய பிறகு குளித்தால் கூந்தல் பலமடையும்.



வாரம் ஒரு முறையாவது எண்ணெய் தேய்த்து ஊறிக் குளிப்பது நல்லது. எண்ணெய் தேய்த்து, பிறகு ஷம்புவோ, சீயக்காயோ போட்டுக் குளிக்கலாம். முடி வறட்சிக்கும், பொடுகுப் பிரச்சனைக்கும் எண்ணெய்க் குளியல் மிகவும் நல்லது.

# சமைப்போம் சுவைப்போம்

[தொகுத்துத் தருவது-சுகந்தினி]

## கரட் அல்வா

**தேவையான பொருட்கள்.**

சுத்தமான கரட்- 1 கிலோ
சீனி-1/2 கிலோ
முந்திரிப் பருப்பு- 50 கிராம்
தேங்காய்- 1/2 மூடி
முந்திரிகை வற்றல்-50 கிராம்
ஏலக்காய்-10 கிராம்.

**செய்முறை:-**

முதலில் கரட்டை பூப்போல துருவி வைத்துக் கொள்ள வேண்டும். தேங்காயையும் பூப்போல துருவி வைத்துக் கொள்ள வேண்டும். வாணலியில் தண்ணீருடன் சீனியைச் சேர்த்துப் பாகுபோல் காய்ச்ச வேண்டும். பின்பு சூடு ஆறுவதற்கு முன்பே கரட், மற்றும் தேங்காய்த் துருவலையும் கொட்டிக் கிளறி விட வேண்டும். அத்துடன் முந்திரி, ஏலக்காய், முந்திரிகை வற்றல் ஆகியவற்றையும் சேர்த்து நன்கு கிளறி இறக்கி விட சூடான சுவையான கரட் அல்வா ரெடி.

# மீண்டும் வாசிம் அக்ரம் கப்டன்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் 9 வாரகால சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. இந்த அணியில் இடம் பெறும் வீரர்களது பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வாசிம் அக்ரம் (கப்டன்), அமீர் சொகைல் (உதவி கப்டன்), சமீத், அன்வர் சலீம் மாலிக், இஜாஸ் அகமட், இன்சமாம்-உல்-ஹக், ரஷீத் லத்தீப், மொயின் கான், முஸ்டாக் அஹமட், சக்லேன் முஸ்தாக், வக்கார் யூனூஸ், முஹமட் அக்ரம், அதாவுர் ரகுமான், அஜிப் முஸ்தாபா, சாகித் அன்வர், சர்கப் கபீர், சாகித் நசீர்.

பாகிஸ்தான் அணியின் மனேஜர் இண்டிகாப் ஆலம் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஆரிப் அலி அப்பாசி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

உலகக்கோப்பை போட்டியில் பாகிஸ்தான் தோல்விகண்டது. அதனையடுத்து அவர் பதவி விலக வேண்டும் என்று கோரப்பட்டது. எனினும் அவர் பதவியில் நீடித்தார்.



ஆனால், மே 25ம் திகதி தனது பதவியை திடீரென்று ராஜினாமா செய்துள்ளார்.

புதிய தலைவராக முன்னாள் கப்டன் மஜித்கான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவராக அவர் பதவியில் இருப்பார்.

# "இலங்கைக்கு செல்ல மாட்டோம்" அடம்பிடிக்கிறது அவுஸ்திரேலிய அணி

இலங்கையில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடமாட்டோம் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அறிவித்து உள்ளது.



உலக கோப்பை கிரிக்கெட் போட்டியின் போது பாதுகாப்பு காரணங்களைக் காட்டி இலங்கைக்கு சென்று விளையாட அவுஸ்திரேலிய அணி மறுத்தது. இந்த அணிக்கு ஆதரவாக மேற்கு இந்திய அணியும் புறக்கணித்தது.

தற்போது அவுஸ்திரேலிய அணி வருகிற ஆகஸ்ட் மாதம் இலங்கை சென்று டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டியில் விளையாட திட்டமிட்டு இருந்தது.

இதற்கிடையில் அவுஸ்திரேலிய அணி இலங்கை செல்லுமா என்ற சந்தேகம் நிலவி வந்ததை தொடர்ந்து அவுஸ்திரேலியாவுக்கு இலங்கை அதிகாரிகள் சென்று சமரசம் ஏற்படுத்தினர்.

## விளையாட மறுப்பு

இந்நிலையில் அவுஸ்திரேலியா கிரிக்கெட் போர்டு மெல்போர்ன் நகரில் கூடியது. அவுஸ்திரேலிய கிரிக்கெட் போர்டு தலைவர் டென்னிஸ் ரோஜர் கூறியதாவது:-

இலங்கை அணி டெஸ்ட் மற்றும் சிங்கர் போட்டிகளில் விளையாட எங்கள் அணியை அழைத்து உள்ளது. அவுஸ்திரேலியா 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட இலங்கை செல்லாது. ஆனால் இலங்கை, இந்தியா, ஸிம்பாப்வே ஆகிய நாடுகள் போட்டியில் கலந்துகொள்ளும்.

இவ்வாறு அவர் கூறினார்.

முரளீதரன் விவகாரம் காரணமாக உலகப் போட்டிக்கு இலங்கை சென்று விளையாடவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்தார்.

மேலும் அவர் கூறுகையில், இலங்கையில் நடந்த குண்டு வெடிப்பினால் பாதுகாப்பு காரணம் காட்டியே நாங்கள் செல்லவில்லை என்றார்.

## பயிற்சியாளர் மாற்றம்.

இந்தியா, இலங்கை, ஸிம்பாப்வே, அவுஸ்திரேலியா ஆகிய 4 நாடுகள் கலந்து கொள்ளும் சிங்கர் போட்டி ஆகஸ்ட் மாதம் 25ந் திகதி முதல் செப்டம்பர் 8ந் திகதி வரை இலங்கையில் நடைபெறுகிறது.

அவுஸ்திரேலிய அணியில் பயிற்சியாளராக முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் ஜெப் மார்ஷ் நியமிக்கப்பட்டு உள்ளார். கடந்த 10 வருடங்களாக அவுஸ்திரேலிய அணிக்கு பயிற்சியாளராக இருந்த பாப் சிம்சனுக்கு பதில் ஜெப் மார்ஷ் நியமிக்கப்பட்டு உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பள பள பந்து

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் 24.6.96 அன்று ஆரம்பமாகின்றன.

இம்முறை நடைபெறும் விம்பிள்டன் போட்டிகளில் புதுவகையான பந்துகள் பயன்படுத்தப்பட உள்ளன. இந்தப் பந்துகள் ஒளி குறைவான இடங்களிலும் தெளிவாகத் தெரியக் கூடியவை. பளபளப்புடன் காணப்படும். சிலாஸ் கேர் என்னும் கம்பனி அதனை வடிவமைத்துள்ளது.

மைதானத்தில் ஒளி குறைவாக இருக்கும் போது பார்வையாளர்களுக்கும், வீரர்களுக்கும் பந்துகள் சரியாகத் தெரிவதில்லை. இது தொடர்பாக பல தடவை புகார்கள் எழுந்தன. அதனையடுத்தே புதிய பள பள பந்துகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த பள பள பந்து அவுஸ்திரேலியாவில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற போட்டியிலும் பாவிக்கப்பட்டது.

# சர்வதேச கிரிக்கெட்

அடுத்த வருடத்தோடு இந்தியா சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனைக் கொண்டாடும் வகையில் இந்திய கிரிக்கெட் சபையால் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

அடுத்த ஆண்டு மே மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பங்கு கொள்ளும் அணிகள், மற்றும் விபரங்கள் சர்வதேச கிரிக்கெட் சங்கத்துடன் பேசித் தீர்மானிக்கப்படவுள்ளன. இத்தகவலை இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**ஜி. பாலபவானி**
**நெளுக்குளம் வவுனியா.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை**

பெயர்:............................
முகவரி:............................
............................
கையொப்பம்:............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 08-06-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




படிப்பகம்

www.padippakam.com

## காகமும் புழுத்த பிணமும்!

இருப்பைப் பாரத்தால்
இப்போதெல்லாம்
இறக்கை தூக்கிப்
பறக்க முடியாது
எமக்கு!
**
கழுகு அக்கா
கணகளைக்
கொத்தியிழுக்க.
நரித் தம்பி
குடலைப்
பிய்த்துக் குதறி
இழுத்துச் செல்லும்!
**
தினமும் இங்கே
வம்மிப் பூப்போல
புழுக்கள் நெளியும்!
**
'சமாதானத்தை
வாயிலும்
ஜனநாயகத்தை
நெஞ்சிலும் சுமந்து திரிந்த
மனிதர் இவர்'
என்று சவக்குவியலில்
குந்தியிருந்த
ஆந்தை
சொல்லியது!
**
மாரிமுத்து யோகராஜன்-
அக்கரைப்பற்று-08

## இரக்கமில்லா இரவுகள்

படுக்கையில்
முள் தைத்தவன் போல
அங்கு மிங்கும்
புரள்வதால்
கசங்கியது-
போர்வையும்
தலையணையும்!
000
வெந்நீரில் இட்ட
சுண்ணாம்பு கல்லாக,
தள தளவென்று
கொதிக்குது
மனது!
000
சுவாசத்தில்
காற்றுக்கு பதிலாக
உன் நினைவுகள்
கலந்திருப்பதால்-
மறுக்கிறது
தூக்கம்!
000
எல்லோரையும்
தூங்க வைத்தபின்,
என்னையும்
துணைக்கழைக்குது-
இரக்கமில்லாத.
இரவு!

என்.சஹாப்தீன், ஒட்டமாவடி.

## மலையகப் பெண்ணாள்

கொங்காணி
தலையில்
போட்டு,
கங்காணி
விரட்டி வர,
கூடை சுமந்த
முதுகுடனே
இடை தாண்டி
ஓடும் பெண்ணே!
உன்
ஒய்யார
நடை கண்டு!
என்னுள்ளம்
ஹொய்யாரோ
போடுதடி.
-0-
பசசை
இளந்
தளிர்கள்கூட
உன்
கரத்தை!
பிச்சை
வேண்டி
தவிப்பதுபோல்
பாசத்துடன்
நீ
பார்க்கும்
ஓரப்பார்வை
நெஞ்சினுள்ளே
சுருதி
சேர்த்து
என்
நிலை
மறக்க
செய்குதடி
-0-
கைகள்
குலுங்கும்
வேகத்திலே
உன்
கை
வளையல்
போடும்
ராகத்திலே
கால்கள்
ஓடும்
திசையினிலே
நின்
காற்சதங்கை
மீட்டும்
தாளத்திலே
கணகள்
கிறங்கி
செருகுதடி:
உன்னில்
காதல்
கொள்ளவே
தோணுதடி
-0-
செல்வி.எஸ்.வாணீஸ்வரி,
அப்பர் கலஹா.

## ஜானகியின் பயணம்

எம்.ஜி.ஆரின் துணைவியார் ஜானகி அம்மாள் 19.5.96 அன்று மரணம் அடைந்தார்.

பதின்மூன்று வயதில் 'இன்பசாகரன்' படம்மூலம் திரையுலகில் கால் வைத்தவர் ஜானகி. அடுத்தபடம் 'மன்மத விஜயம்'.

'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி' என்னும் படம்தான் ஜானகிக்கு புகழ் தந்தது. அதில் சிந்தயு மணியாக நடித்தவர் ஜானகிதான்.

ராஜமுக்தி படத்தில் தியாகராஜபாகவதருக்கு



1948-ம் ஆண்டு வெளியான 'மோகினி' படத்தில் எம்.ஜி. ஆருடன் இணைந்து வி. என். ஜானகி நடித்த ஒரு காட்சியில்

ஜோடி ஜானகி. அந்தப் படத்தில் மற்றொரு ஜோடி எம்.ஜி.ஆர்., பானுமதி. ராஜமுக்தி படப்பிடிப்பில்தான் எம்.ஜி.ஆர். ஜானகி காதல் மலரத்தொடங்கியது. பின்னர் 'மோகினி' படத்தில் ஜோடியாக நடித்தனர்.

மருதநாட்டு இளவரசி (1950) படத்தில் எம்.ஜி.ஆர். ஜானகி ஜோடி. கதை வசனம் கலைஞர் கருணாநிதி. அதனையடுத்து எம்.ஜி.ஆர். கருணாநிதி இணைந்து தயாரித்த படம் 'நாம்'. அதிலும் எம்.ஜி.ஆர். ஜனாகிதான ஜோடி.

1950 இல் எம்.ஜி.ஆரின் இரண்டாவது மனைவி சதானந்தவதி உயிரோடிருந்தார். ஆனால் நோய் வாய்ப்பட்டிருந்தார். ஏற்கனவே எம்.ஜி.ஆரது முதல் மனைவி இறந்திருந்தார்.

1950 இல் எம்.ஜி.ஆரும்-ஜானகியும் மாலை மாற்றிக்கொண்டனர். நான்குபேர் மட்டுமே சாட்சியாக இருந்தனர்.

திருமணத்தின் பின்னர் ஜானகி மூன்று படங்களில் நடித்தார்.

1962 பெப்ரவரி 25 இல் எம்.ஜி.ஆரின் இரண்டாவது மனைவி சதானந்தவதி மறைந்தார். 14.6.1962 இல் எம்.ஜி.ஆர். ஜானகியை பதிவுத் திருமணம் செய்துகொண்டார். ஆனால் அவர்களது வாழ்க்கை ஒப்பந்தம் 1950 இல் ஆரம்பமாகிவிட்டது.

ஜானகியை 'ஜானு' என்றுதான் எம்.ஜி.ஆர். செல்லமாகக் கூப்பிடுவார்.

எம்.ஜி.ஆர். ஜானகி தம்பதிகளுக்கு பிள்ளைகள் இல்லை. அப்பு என்னும் வளர்ப்பு மகன் இருக்கிறார்.

1987ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் திகதி எம்.ஜி.ஆர். மறைந்தார்.

அவருக்குப்பின்னர் 1988ம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றார் ஜானகி. பின்னர் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் ஆட்சி கலைக்கப்பட்டது.

1989 தேர்தலில் ஜானகி அணி போட்டியிட்டது. ஜானகி உட்பட அனைவருமே படுதோல்வியடைந்தனர். அதன்பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கினார் ஜானகி.

எம்.ஜி.ஆரின் மனைவியாக அவரை மதித்தனர் எம்.ஜி.ஆர் விசுவாசிகள். ஆனால் அவரை எம்.ஜி. ஆரின் அரசியல்வாரிசாக மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை.



வி.என். ஜானகியுடன் எம்.ஜி.ஆர்.



வி.என்.ஜானகி, எம்.ஜி.ஆர்., இரண்டாவது மனைவி சதானந்தவதி-எம்.ஜி.ஆர். வீட்டில், கால் முறிவு சிகிச்சையின் பின்

## தேன் கிண்ணம்

### திருவிழா

ஆயிரத்தில் ஒருவராக
ஆண்டவனிடம் வந்த
அடியார்கள் 'சிலர்' ஒருபுறம்..!
*
கடைசிக் காலத்தில்
சாகப் பயந்த
கிழடுகள் ஒரு புறம்...!
*
சுற்றியுள்ளவர்கள்
பார்ப்பதற்காகவே
சீவிச் சிங்காரித்த
சுந்தரிகள் ஒரு புறம்...!
*
காதலி(யைத்) தேடி
கோவிலுக்கு வந்த
காளையர்கள் ஒரு புறம்...!
*
கோயில் திருவிழா
குறையேது மில்லாமல்
கோலாகலமாக
நடந்து முடிந்தது!!
*
அ.டக்ளஸ் ஜெய சேகரன்,
வவுனியா.

## குருதிக் கனவுகளை துறந்து.......!

மாற்றத்தினால்
சுகம்
விளையும் என்று-
இதயத்தை
பூமெத்தையில்
கிடத்தி வைத்திருந்தேன்!
**
அது
புழுதிக்குள்
பிய்ந்துகிடக்கிறதே?
**
மனங்களில்
மருந்து இருக்கம்போது
தினங்கள்
குருதியில் நனைவதேன்?
**
கனவுகளில்
குருதிஓட.
தேசம்
குண்டுகளால்
கிழிந்து போவதேன்?
**
தியை
சுவாசிக்க வைத்து
என் மனதை
கொன்று விட்டு
நீ மரணிக்கலாமா?
**
காற்றைவிட
சக்தி வாய்ந்த நீ
இல்லாவிட்டால்,
இன்னும் நான்
இங்கே
சுவாசிக்க முடியாது!
**
நீ
மௌனிக்கும்
ஒவ்வொரு
வினாடியும்
இங்கே
இரத்த விடியல்கள்!
**
உயிரில்லாத
மனிதர்கள்,
உணர்வில்லாத
இதயங்கள்,
உறவில்லாத
வாழ்க்கை,
இரவாகிப்போன
உலகம்
இத்தனையும்
நீ
தொலைந்து போனதால்
துளிர்த்தவை!
**
சமாதானமே!
நீ
உயிர்த்தெழு!
கிழிந்துகிடக்கும்
இந்த மனங்கள்
அழிந்து போகாதிருக்க-
நீ
உயிர்த் தெழு!!
**
குருதிக் கனவுகளை
துறந்து
பன்னீர்க்கனவுகளில்!
நான்
நீந்த வேண்டும்.

நிந்தாசன்.

## ஞாபகத்தின் ஓலங்கள்

ஒவ்வொரு
இரவுகளின்
நீளங்களையும்
உன்
ஞாபகங்களே
எனக்கு
புரிய
வைக்கின்றன
*****
உறக்கம்
தழுவாத
என்
விழிகளில்
உன்
நினைவு
துகல்கள்
விழுந்து
கண்ணீர்
வழிந்தோட
தலையணை
நனைகிறது.
*****
நம்
நட்பின்
எச்சமாய்
மிஞ்சிபோன
நினைவுகள்
இதயத்தின்
ஒவ்வொரு
அணுவாய்
குத்தி
பிழிய....
*****
கடந்து
போன
காலங்கள்
கனவாய்
இருக்காதா
உன்னை
சந்தித்தது
வெறும்
நினைவாய்
இருக்காதா?

அகிலா ஜெகதீஸன்,
வவுனியா.

## காதல் என்ற இம்சை

உன் நினைவுகள்
என் இதய ஏட்டில்
படபடக்கும்போது
சந்தோஷித்துக் கொள்வேன்,
பழையபாடல்
கேட்பது போல......!
-0-
அடிக்கடி கேட்கின்றன-
உன் காலடிச் சப்தங்கள்,
என் இதய வீதியில்!
-0-
ஒரு முறை
உன்னை எண்ணிவிட்டு,
உமிழ்நீர் விழுங்கினால் கூட.
அடிக்கரும்பு தின்னும்
இனிமை!
-0-
பெண்ணே..!
பூக்களின் மகரந்தமா
உன்னை
சிருஷ்டித்தது..?
-0-
இல்லை..
நீ
நட்சத்திரம் விழுந்து
முளைத்தவளா..?
-0-
நீ
நடந்து செல்வது
வீதியில் அல்ல:
என் வாலிபத்தில்!
-0-
உன் தரிசனம்
கிடைக்காத நாட்களில்
என் ஜீவன்
சவுத்துப் போகும்:
இந்த பூமியை
விழுங்கின மாதிரி!
-0-
என் வாலிபக் கனவுகளில்
வால் வெள்ளியாக வந்து
மோதியது-
உன் நிலாத் தூது!
-0-
மீண்டும்...
என் காதல் ரணங்களுக்குள்
நீ
உப்புத் தூவி விடாதே!
-0-
எனக்குள்
வேர்பிடுங்க முடியாத
உன் நினைவுகளுக்கு
தண்ணீர் ஊற்று.
-0-
பெண்ணே....!
வெங்காயம் அரிந்துவிட்டு
கண்ணீரைத் துடைக்கும்
சிறு பிள்ளையாய்
என்னைக் காண்..!

சி.பி.எம்.ஜமீம், பொத்துவில்-2

## சித்திரைச் சித்திரவதை!

சீற்றம் கொண்ட
சூரியன்
நெருப்பைக்
கொளுத்திப் போடுது!
***
காற்றுக்குக்
காய்ச்சல்!
சூட்டைச்
சுமந்து வந்து
சுட்டெரிக்குது!
***
தாங்க முடியாமல்
உடலெல்லாம்
கண்கள் முளைத்து
கண்ணீர் சொரியுது?
***
வியர்வைத்-
துளிகளைக்
கோர்த்தாவது
ஒரு மழை
பெய்யக் கூடாதா?
உயிரு தவிக்குது!
***
மீராவோடை-
எஸ்.நளீம்.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 02.06.96 முதல் 08.06.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - செவ்வாய். |
| இடபம் | - சூரியன். புதன். |
| மிதுனம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி. கேது. |

சந்திரன்- துலாம். விருட்சிகம். தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, மனப் பயம் நீங்கும். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், மனமகிழச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- இனசன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தெய்வதரிசனம், வெளியிட வாழ்க்கை. | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் உதவி, அகால போசனம். | பகல் 12 மணி |
| வியாழன்-தெய்வானுகூலம், தன்னம்பிக்கை. | காலை 6 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, உடல் நலக்குறைவு. | காலை 8 மணி |
| சனி- உறவினர் வருகை, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணவிரயம். | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பயனுள்ள செயல். | பகல் 11 மணி |
| செவ்வாய்- இனசன மகிழ்ச்சி, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், மனக் கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- செய்தொழில் நன்மை, பெரியோர் நட்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், பணவரவு. | காலை 6 மணி |
| சனி- பெரியோர் நட்பு, முன்னேற்றம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, மனமகிழச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- பயனற்ற செயல், வீண் அலைச்சல். | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், தெய்வானுகூலம். | காலை 6 மணி |
| சனி- உறவினர் பகை, மனச்சஞ்சலம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், தனலாபம். | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பணவரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், பணவிரயம். | மு.ப. 9 மணி |
| புதன்- செலவு மிகுதி, அந்நியர் பகை. | பகல் 12 மணி |
| வியாழன்- உடல் நலக்கேடு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், பொருள் பேறு. | மு.ப. 9 மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனத் தைரியம். | காலை 6 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் கவலை, கடன் பயம். | காலை 8 மணி |
| புதன்- துயர் நீங்கும், முன்னேற்றம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மனமகிழச்சி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- தன்னம்பிக்கை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| சனி- உறவினர் கலகம், மனக்கவலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, மனப்பயம். | காலை 6 மணி |
| செவ்வாய்- வீண் குறை கேட்டல், தொழில் மந்தம். | பகல் 11 மணி |
| புதன் - அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், காரிய சித்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி- மன அமைதி குன்றும், பணச் செலவு. | காலை 7 மணி |
| சனி- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- அந்நியர் பகை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், முயற்சி தோல்வி. | காலை 7 மணி |
| வியாழன்-புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |
| சனி- செலவு மிகுதி, பொருள் விரயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- முயற்சி மேன்மை, கௌரவ நிலை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்-அந்நியர் பகை, மனக்கவலை. | மு.ப. 9 மணி |
| புதன்- தனலாபம், எதிர்பார்த்த நன்மை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தேக சுகம் பாதிப்பு, உறவினர் உதவி. | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் முன்னேற்றம், பணவரவு0 | பகல் 10 மணி |
| சனி- இடமாற்றம், திடீர்ப் பயணம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- பொருள் வரவு, தொழில் விருத்தி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | காலை 8 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. 1 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், மறைமுக எதிர்ப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, காரிய சித்தி. | பகல் 11 மணி |
| சனி- உயர்ந்த எண்ணம், குடும்ப சுகம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பலவித நன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- மறைமுக எதிர்ப்பு, மனச் சஞ்சலம். | மு.ப. 9 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | காலை 7 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி-தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மேன்மை, பலவித நன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, தனலாபம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், அகாலபோசனம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனநிம்மதி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், அதிகார விருத்தி. | பகல் 11 மணி |
| சனி- பொருள் வரவு, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்





## கற்றுக் கொள்

நன்மை செய்யக் கற்றுக் கொள்!
நலமாய் வாழக் கற்றுக் கொள்!
உண்மை பேசக் கற்றுக் கொள்!
உயர்வாய் வாழக் கற்றுக் கொள்!

துயரைப் போக்கக் கற்றுக் கொள்!
துணிந்து செயற்படக் கற்றுக்கொள்!
உழைத்து வாழக் கற்றுக் கொள்!
உலகை ஆளக் கற்றுக் கொள்!

இனிதாய்ப் பேசக் கற்றுக் கொள்!
இன்பம் பயக்கக் கற்றுக் கொள்!
வறுமை வந்தால் வாழ்வினில்,
தாங்கி ஏற்கக் கற்றுக் கொள்!

அன்பாய் வாழக் கற்றக் கொள்!
பண்பாய்ப் பழகக் கற்றுக் கொள்!
அழியாக் கலையை வாழ்வினில்,
அறிந்து பயின்றிடக் கற்றுக்கொள்!

அனுப்பியவர்-எல்ரீயெம்-சாதிக்கீன், மீராவோடை.

ஓடி விளையாடு பாப்பா! -நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா- ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

-சுப்பிரமணிய பாரதியார்.

## தற்புகழ்ச்சி

### பாப்பா முரசு சிறுகதை

ஓர் ஊரில் விநாயகம் என்ற பணக்காரன் ஒருவன் இருந்தான். இவன் மிகவும் தற்பெருமை கொண்டவன். இவனது முன்னோர்கள் சேர்த்து வைத்த சொத்தில் வசதியாக வாழ்பவன்.

விநாயகம் தனது தற்பெருமைக்காகவும், தற்புகழ்ச்சிக்காகவும் தினமும் பெரும் பணம் செலவு செய்வான். இவனைப் புகழ்வதற்காக எப்போதும் இவனைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.

ஒரு நாள் விநாயகம் தெருவில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தான்.

அப்பொழுது ஏழ்மையான மனிதன் ஒருவன் எதிரில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்த விநாயகம், கைநீட்டி அவனை நிறுத்தினான்.

"யாரப்பா நீ? ஊருக்குப் புதுசா?" என்று கேட்டான் விநாயகம்

"ஆமாம் ஐயா. வேலை தேடி பக்கத்து ஊரிலிருந்து வருகிறேன்," என்றான் அந்த மனிதன்.

"இதோ பார்! நான் தான் இந்த ஊரிலே பெரிய பணக்காரன். என்னிடம் இப்போது இருநூறு ரூபாய் இருக்கிறது. என்னை ஒரு முறை ஏதாவது புகழ்ந்து பேசு. உனக்கு ஐம்பது ரூபாய் தருகிறேன்," என்றான் விநாயகம்.

அதைக்கேட்ட அந்த மனிதனுக்கு விநாயகத்தின் மனநிலையும் தற்பெருமையும் நன்றாகப் புரிந்தது. உடனே அவன்,

"ஐயா! தங்களைத் தாராளமாகப் புகழ்கிறேன். அதேசமயம் பணத்தை விட, புகழ்ச்சிச் சொல்லுக்கு மதிப்பு அதிகம் என்பதையும் தாங்கள் உணர வேண்டும். தாங்கள் முதலில் பணத்தைக் கொடுங்கள். அதன் பிறகு பாருங்கள் புகழ்ச்சியான வார்த்தைகளை," என்றான்.

உடனே விநாயகம் ஐம்பது ரூபாயை எடுத்து அந்த மனிதனிடம் கொடுத்தான்.

அதைப் பெற்றுக்கொண்ட அம்மனிதன்,

"ஐயா! நான் புகழப் போகும் புகழ்ச்சிச் சொற்களின் மதிப்பை விட இந்த ஐம்பது ரூபாயின் மதிப்பு மிகவும் குறைவாக உள்ளது. நல்ல தரமான புகழ்ச்சி வேண்டுமென்றால் நீங்கள் இன்னும் தர வேண்டியிருக்கும்!" என்றான்.

"அப்படியா? இந்தா பிடி இன்னுமொரு ஐம்பது!" என்று சொல்லி, மேலும் ஐம்பது ரூபாயை எடுத்து அந்த மனிதனிடம் கொடுத்தான் விநாயகம்.

"இருநூறில் நூறை உனக்குக் கொடுத்து விட்டேன். கெதியாகப் புகழ்ந்து பேசு," என்றான் விநாயகம்.

அதைக்கேட்டு மெல்லப் புன்னகைத்த அந்த மனிதன்,

"என்ன ஐயா நீங்கள்! எதுவுமே புரியவில்லையே. உங்களிடம் நூறு ரூபாய் உள்ளது போல் இப்பொழுது என்னிடமும் நூறு ரூபாய் உள்ளது. பொருளாதார ரீதியில் இப்பொழுது நாம் இருவரும் சரிசமமானவர்கள். இப்படி சரிசமமாக உள்ளவர்கள், ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்வதில்லையே!" என்றான்.

"ஓ, அது உண்மைதான். இதோ மீதமுள்ள நூறு ரூபாவையும் நீயே வைத்துக்கொள். இப்போது நீ என்னைப் புகழ எந்தத் தடையும் இ[illegible]காது என்று நினைக்கிறேன்," என்று சொன்ன விநாயகம் மீதமிருந்த நூறு ரூபாவையும் யோசிக்காமல் அவனிடம் கொடுத்தான்.

அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்ட அவன்,

"இதோ பாருங்கள், இப்பொழுது நான் உங்களைப் புகழ்ந்து பேச வேண்டிய அவசியமே இல்லை. ஒன்றுமே இல்லாதவனை, இருக்கிறவன் எங்கேயாவது புகழ்வானா?" என்று கேட்டான் அம்மனிதன்.

வெறும் புகழ்ச்சிக்காக பணத்தை இழந்ததோடு, பணம் இல்லாவிட்டால் சுற்றியிருக்கும் கூட்டம்கூட விலகிவிடும் என்று அப்போது தான் விநாயகத்திற்கு உறைத்தது.

"பெருமை, புகழ் என்பது செய்யக் கூடிய நற்காரியங்களுக்காகத் தேடி வர வேண்டும். அதை விலை கொடுத்து வாங்க முடியாது. இந்தாருங்கள் ஐயா உங்கள் பணம்," என்று கூறி அவனது பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டுச் சென்றான் அந்த மனிதன். புகழ் என்ற போதையில் இருந்து முற்றிலும் விடுபட்டு, ஒரு புதிய மனிதனாக வீடு திரும்பினான் விநாயகம்.



## வாரம் ஒரு நாடு



**தலைநகர்**– மொனாக்கோ
**பரப்பு** – 1.95 சதுர கிலோ மீட்டர்.
**மக்கள் தொகை** – 29,000
**மொழி** – ஃபிரெஞ்ச், மொனகாஸ்கு, இத்தாலியன்
**எழுத்தறிவு** – 99%
**சமயம்** – கிறிஸ்தவம்
**நாணயம்** – ஃபிராங்க்

**மொனாக்கோ**

**அமைவிடம்:**

மொனாக்கோ, அரசபரம்பரை ஆளுமையுடைய ஃபிரான்ஸின் தென்கிழக்கு மத்திய தரைக் கடற்கரையில் உள்ள நாடு.

**வரலாறு:**

பரம்பரையாக முடியாட்சி நடைபெற்று வரும் நாடாக இருப்பினும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அசெம்பிளி நிர்வாகத்தில் பங்கு பெறுகிறது.

**பொருளாதாரம்:**

நகரங்களின் ஒழுங்கு முறை குறிப்பிடத்தக்கது. மொனாக்கோ நவநாகரிகச் சுற்றுலாத் தலமாகும். இதன் முக்கிய கவர்ச்சி, இங்குள்ள சூதாட்ட அரங்குகளும் அகில உலக மோட்டார் பந்தயங்களுமாகும். மொண்டி கார்லோ பந்தயம், மொனாக்கோ கிராண்ட் பிரீ ஆகியன இதில் குறிப்பிடத்தக்கவை, சுற்றலாத் துறை, சூதாட்டம், புகையிலைத் தனியுரிமை ஆகியன இந்நாட்டு வருமான மூலங்களாகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.06.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 143
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 141

**பரிசுக்குரியவர்:**
செல்வன். எஸ். ஹரிபிரசாத்.
கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருக்கோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வன். ப. ருசான். நாமகள் வித்தியாலயம், கல்குடா. | ரிஹானா ஜபார்டீன். பேராதெனிய றோட், கண்டி. |
| பாத்திமா தஹானி அல் மக்கியா முஸ்லிம் மகா வித்தியாலயம், இரத்தினபுரி. | செல்வி. எஸ். தீபிஹா. ஸ்ரீ சன்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. |
| றிபாஸ். நூறானியா வீதி, மருதமுனை-3, கல்முனை. | என். பானு. இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| ஏ. சி. முஹமட் றிஸ்வின். தில்லையடி முஸ்லிம் வித்தியாலயம், புத்தளம். | எஸ். சர்மிளா சிவகுமார். கல்பொத்த வீதி, கொழும்பு-13. |
| வீ. பிரகாஷினி. கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை. | செல்வி. ஜே. வருசாணி, கம்பளை றோட், நாவலப்பிட்டி. |

## விடுகதைகளும் விடைகளும்


1. பச்சை நிறச் செடியிலே பவள நிறங்கள் தொங்குது! இது என்ன?
2. நாளெல்லாம் நடந்தாலும் நாற்பதடி செல்லாது-அந்த நாயகனுக்கோ உடல் மேல் கவசம்! அது என்ன?
3. பச்சை, வெள்ளை, செந்நிறம் பக்குவமானால் சிவப்பு! இது என்ன?
4. தாய் வெளியிலே, மகள் வீட்டிலே; தாய் மாட்டுக்கு உணவானாள்; மகள் மனிதனுக்கு உணவானாள்! இவை என்ன?
5. நீளவால் குதிரையின் வால் ஓட ஓடக் குறையும் அது என்ன?
6. ஏரியில் இல்லாத நீர், தாகத்திற்கு உதவாத நீர், தண்ணீர் அல்ல. அது என்ன?
7. நெட்டையானவன் பள்ளத்தில் குதித்து எழுந்து நீரோடு மேல் வருவான்; யார் இவன்?
8. கார்த்திகையில் வந்து மார்கழியில் வளர்ந்து தையிலே தடுமாறி மாசியில் மறையும், அது என்ன?

**விடைகள்**


1. [illegible] 2. [illegible]
3. [illegible] 4. [illegible]
5. [illegible] 6. [illegible]
7. [illegible] 8. [illegible]

**தொகுப்பு: ஏ. அகல்யா, நுவரெலியா.**

## சின்னச் சின்னச் செய்திகள்



ஒரு சிலந்தி உற்பத்தி செய்யும் நூலைக் கொண்டு இந்த உலகத்தின் மேல் பூமத்திய ரேகையின் வழியாக (12,756 கிலோ மீட்டர்) ஒரு சுற்று சுற்றி விடலாம். ஆனால் இவ்வளவு நூலின் மொத்த எடை வெறும் 800 கிராம்தான்.



கடற்பஞ்சு என்னும் பிராணியைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி, நீரிலேயே விட்டு விட்டால், அத்தனை துண்டுகளும் தனித்தனிக் கடற்பஞ்சுகளாக வளர்ந்து விடும்.



ராக்கூன் என்னும் பிராணி தனக்குக் கிடைக்கும் இரையை நீரில் தானே கழுவிய பின்புதான் தின்னும்.




சிங்கம் குட்டியாக இருக்கும் போது ஆணும், பெண்ணும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கும். மூன்று வயது ஆன பிறகுதான் ஆண் சிங்கத்திற்கு பிடரிமயிர் முளைக்க ஆரம்பிக்கும்.



'சிக்லிடே' என்னும் மீன் தான் இட்ட முட்டைகளை வாயில் அடக்கிக் கொண்டுதான் அடைகாக்கும். அந்த முட்டைகள் குஞ்சாகிற வரையில் அந்த மீன் பட்டினிதான்.

## ரசவாதம்

★ ரசவாதம் (அல்கெமி) என்றால் என்ன?
ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்றும் முறைக்கு ரசவாதம் என்று பெயர்.



★ இக்கலை எப்பொழுது புழக்கத்திற்கு வந்தது?
பண்டைய எகிப்தியர் காலத்திலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை..

★ ரசவாதத்தின் முக்கிய குறிக்கோள் என்ன?
இதன் முக்கிய குறிக்கோள், ஈயம் போன்ற எல்லா உலோகங்களையும் தங்கமாக மாற்றுவது.

★ 'வேதாந்தியின் கல்' (ஃபிலோசபேர்ஸ் ஸ்டோன்) என்றால் என்ன?
இந்தக் கல் உலகில் இருப்பதாகவும், இதற்கு எந்த உலோகத்தையும் தங்கமாக மாற்றும் சக்தி உள்ளது என்றும் ரசவாத பயிற்சியாளர்கள் நம்பினர்.

★ இம்முயற்சியில் விஞ்ஞானிகளுக்கு வெற்றி கிடைத்ததா?
கிடைத்தது. 1949ம் ஆண்டு பாதரசத்தைத் தங்கமாக்கி வெற்றி கண்டனர் விஞ்ஞானிகள். ஆயினும் இம்முயற்சிக்கு அதிகமான பொருள் செலவாகவே இம் முயற்சி கைவிடப்பட்டது.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# 15 திகில்

# நீ! நீயா!



இரும்பு கடற்கரை! கடல் ஓரத்தில் நிறைய இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. பெரிய ஹோட்டல் அல்லது மோட்டல்.

அங்காங்கே மூங்கிலாலும், மரப் பலகையினாலுமான குடிசைகள். பெரிய மாளிகை, நட்சத்திர ஹோட்டல் அறைகள், அலுத்துப் போனவர்களுக்கென மாறுதல் குடிசைகள். குடிசை வாசம்தான்; ஆனால்-

அங்கே ஏழ்மையில்லை.

குளிர் பதனப்பெட்டி, குளிர்சாதனம் பொருந்திய அறை சீதோஷ்ணம். பெரிய கட்டில், ஆடம்பர சோபாக்கள் அனைத்து வசதிகளுமிருந்தன. நினைத்தால் மாட்டிக் கொண்டு கடலுக்கு குளிக்க ஓட நீச்சல் உடைகள் அலமாரி நிரம்ப அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இரவானால், திறந்த வெளியில் மண் சட்டியில் சமைத்து மீன், இறைச்சி, கோழி, பன்றி என்று பஃபே முறை உணவு. தமிழ் கலாசாரத்தை டூரிஸ்ட்டுகளுக்கு (அநேகமாக வெளி நாட்டார்) அறிமுகப்படுத்த பொய்க்கால் குதிரை, கரகம்-பரத நாட்டியமென்று நிறைய வகைகள்.



இன்ஸ்பெக்டர் வேதநாயகம் வரவேற்பறையில் போன போது- அங்கேயிருந்த இளைஞன் அப்போது தான் பூத்த ரோஜாவின் வனப்புடன் இருந்தான். அழகான சிரிப்புடன் வரவேற்றான்-

"வாங்க இன்ஸ்பெக்டர் யாரும் வி.ஐ.பி வருகிறார்களா? காட்டேஜ் பதிவு பண்ணணுமா?"

"வேணாம். ஏற்கெனவே வந்து தங்கிய வி.ஐ.பி.க்களைப் பற்றி விசாரிக்க வந்திருக்கேன்."

"எனக்கு புரியல்ல. எங்க நிர்வாகியைப் பார்க்க விரும்பறீங்களா?"

"அவர் உதவியும் தேவைப்படும். இதைப்பார்." படுக்கை விரிப்பை எடுத்துக் காட்டினார். "இது உங்கள் ஹோட்டல் படுக்கை விரிப்புத்தானே?"

"ஆமாம். இது உங்க கைக்கு எப்படி வந்தது? என்ன இது ரத்தம் மாதிரி தெரிகிறது?"

"ரத்தமேதான்."

"இதில் காட்டேஜ் பதினாறு, இந்த முத்திரையும் எங்கள் ஹோட்டலதுதான்."

"உங்க நிர்வாகியை இப்ப கூப்பிடலாம்."

"ஏன் சார்?"

"இந்தக் காட்டேஜைப் பார்க்கணும்."

"ஆனா அது பூட்டியிருக்கிறது சார்!" என்றவன் தொலைபேசியில் அழைக்கவே நிர்வாகி அவசரமாக வந்து நின்றார்.

"ஒண்ணுமில்லே. காட்டேஜ் பதினாறைத் திறந்து பார்க்கணும்."

"சாவி இருக்கிறதாப்பா?"

"இல்லே சார்! போனவாரம் ஒரு பெண் வந்து பதினைஞ்சு நாளைக்கு முன் பணமும் கொடுத்து பதிவும் செய்துட்டுப் போயிருக்கிறாங்க. அந்த காலகட்டம் நாளை மறுநாள் முடிகிறது. அதுவரை நாங்கள் சந்தேகப்படவோ, கதவைத் திறந்து பார்க்கவோ அனுமதியில்லே. அஃபென்ஸ் ஆயிடும்."

"அந்தப் பெண் தனியாகவா தங்கினாள்?"

"இல்லே. அவளோட விருந்தாளிங்க வருவாங்க சாவியைக் கொடுங்கன்னு சொல்லிட்டுதான் போனாள்."

"வந்தாங்களா?"

"ஆமாம். ஒரு வாலிபனும் அழகான பெண்ணும் வந்து அறை சாவியைக் கேட்டாங்க கொடுத்தேன்."

"எப்படி இருந்தாங்க."

"ஸாரி. அப்ப நான் கவனிக்கல்லே. டியூட்டி மாறுகிற அவசரத்தில இருந்தேன்."

"பதிவு செய்த பெண் பெயராவது இருக்கிறதா?"

"இருக்கிறது சார்! அந்தப் பெண் தன் பேராலேயே பதிவு செய்து கொண்டிருக்கிறாள். ஒரு பதினைந்து நாளைக்கான பணத்தை முன் பணமாகவே கொடுத்து விட்டாள். அதனால் சந்தேகப்படத் தோணலை. எதுவும் தவறு நடந்திருக்கிறதா இன்ஸ்பெக்டர்?"

> "அதாவது அவங்க வருகிறதற்கு முன்னாலேயே ஒரு பெண் இருந்திருக்கிறாள். இவங்க இரண்டு பேர் மொத்தம் மூன்று பேர் இங்கே தங்கி இருக்கிறாங்க என்கிறீங்க."

"அப்படித்தான் நினைக்கிறேன்."

"என்ன தப்பு?"

"போய் ஆராய்ந்து பார்த்தால் தான் தெரியும்." கையை நீட்டினார். "சாவியைக் கொடுங்க."

வரவேற்பாளர் நிர்வாகியைப் பார்த்தார். அவர் தலையசைத்து சம்மதிக்கவே- சாவியைக் கொடுத்தான்.

நிர்வாகி பின் தொடர போலிஸ்காரர்கள் முன் நடக்க- கம்பீரமான நடையுடன் நடந்தார் இன்ஸ்பெக்டர் வேதநாயகம், பதினாறாம் நம்பர் காட்டேஜை நோக்கி.

பதிமூன்றாம் நம்பர் காட்டேஜில் ஏதோ அயர்லாந்த் நாட்டு ஹிப்பி ஜோடி ஒன்று மரப்படிக்கட்டிலேயே தன்னை மறந்த நிலையில் இவர்களை அலட்சியம் செய்தார்கள்.

"இன்ஸ்பெக்டர் ப்ளீஸ்" நிர்வாகி கெஞ்சினார். "இப்படி ஒரு போலிஸ் பட்டாளம் உலா வந்தால் ஹோட்டல் பெயர் கெடும். நீங்கள் காலையில் வரலாமே."

"ஸாரி. துப்பு என்று கையில் கிடைத்து விட்டால் எங்களுக்கு பகல் இரவு எதுவும் தெரியாது."

பதினைந்தாவது காட்டேஜில் ஓர் ஐந்து வயசுப் பையன் சட்டை நிஜார் மட்டும் அணிந்து தனது ஐரீஷ் பளபளப்பு உடம்பை காட்டி நின்று- "டா....டா"

இவரும் பதிலுக்கு டாட்டா காட்டிவிட்டு நடந்தார்.

"இதுதானே அந்த பதினாறாம் நம்பர் காட்டேஜ்?"

"ஆமாம்."

படிக்கட்டில்லாமல் சரிவாகவே மேடேறிப் போன சாலையில் போய் குடிசை வாசலில் நின்றார்கள்.

"திறங்க."

சாவியை செலுத்தி நிர்வாகி பூட்டைத் திறக்க உள்ளே போனார்கள்.

அறை சுத்தமாக இருந்தது.

ஃபிரிஜ் இயங்கிக் கொண்டிருந்தது. படுக்கை விரிப்புகள் சுத்தமாக படர விடப்பட்டிருந்தன, சலவை மணத்துடன்.

"இதெப்படி இவ்வளவு சுத்தமாகி விட்டது?"

## மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

"மறு நாளே ஆட்கள் வந்து சுத்தப்படுத்தி பெட் ஷீட்டை மாற்றி இருப்பார்கள். இதில் என்ன சந்தேகம்?"

இன்ஸ்பெக்டர் வேதநாயகத்தின் கண்களில் ஏமாற்றம் வந்தது.

"எங்கள் ஹோட்டல் சர்வீஸ் அப்படி. சுத்தம், சைவசுத்தம். ஆள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கொருதரம் சுத்தம் செய்து விடுவோம்." என்று பெருமை பேசும் நிர்வாகியை எரிச்சலாகப் பார்த்தார்.

"தடயங்கள் எல்லாமே அழிந்து போய் விட்ட வயிற்றெரிச்சல்ல இருக்கேன். நீர் வேற கடுப்படிக்காதேய்யா."

"எங்களுக்கெப்படி தெரியும்? நீங்க கைரேகை தேடி வருவீங்கன்னு நாங்க என்னத்தைக் கண்டோம்?"

"அதுவும் நியாயம்தான். எங்க புலன் விசாரணைதான் அரைகுறையாகிவிட்டது. அந்தப் பெண்களையும் ஆளையும் நீங்களாவது பார்த்தீர்களா?"

"பார்த்தேனே."

"வாட்? பார்த்தீரா? எப்போ? எப்படி?"

"காட்டேஜூக்கு இரண்டு பேர் தான் அனுமதி. மூன்றாவது நபர் வந்தால் அதிகமாக பணம் தந்தேயாகணும்னு சண்டை போட்டேன். அப்ப பார்த்தேன் அந்த இரண்டு பேரையும்."

"அடையாளம் சொல்ல முடியுமா?"

"அதெப்படி? மெட்ராஸில லட்சக்கணக்கான பேர் இருக்கிறாங்க. அவங்களை எப்படி தேட முடியும்?"

"இந்தப் படத்தைப் பார்த்துச் சொல்லுங்க. இவர்கள் தானா?"

வாங்கினார். நிறைய ஆராய்ந்தார். பிறகு சொன்னார்: "இவங்க மாதிரி தெரியுது. படம் தெளிவாக இல்லாததினால உறுதியாகச் சொல்ல முடியல்ல. ஓரளவுக்கு குத்து மதிப்பாக சொன்னால்- ஆமாம். இவங்க தான்."

"இவங்க வருகிறச்ச மணி சுமாராக எத்தனை இருக்கும்?"

"பத்தரையிலேர்ந்து பதினொன்றுக்குள்ளே இருக்கலாம்."

"எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்றீங்க?"

"பத்துமணி என்கிறது என் இரவு சாப்பாட்டு நேரம். சாப்பிட்டு நான் வெளியே வரவும் இவங்க தகராறு பண்ணவும் சரியாயிருந்தது. அதனால தான் அவ்வளவு உறுதியாகச் சொல்றேன்."

"அதாவது அவங்க வருகிறதற்கு முன்னாலயே ஒரு பெண் இருந்திருக்கிறாள். இவங்க இரண்டு பேர் ஆக மொத்தம் மூன்று பேர் இங்கே தங்கி இருக்கிறாங்க என்கிறீங்க."

"ஷ்யூர். அதில சந்தேகத்துக்கே இடமில்லை."

"நேற்று இந்த ரூமை கிளீன் செய்த ரூம் பாயைக் கூப்பிட முடியுமா? விசாரிக்கலாம்."

"வாங்க போகலாம்."

"எங்கே?"

"பக்கத்திலதான் அவங்களுக்கு இருப்பிடம் ஒண்ணு கட்டிக் கொடுத்து இருக்கோம். எல்லோரும் கும்பலாக அங்கே தான் இருப்பாங்க."

பேசிக் கொண்டே படியிறங்கி நடந்தார்கள்.

ஒரு காட்டேஜைக் கடந்து போகும்போது ஒரு பெண்ணின் சுவாரஸ்யமான வீறிடல் கேட்டது.

சிரித்துக் கொண்டே நடந்தார்கள்.

"இதெல்லாம் கூட இங்கே நடக்கிறதா?" இன்ஸ்பெக்டர் சொன்னார். "என்றைக்கோ ஒரு நாள் திடீர்னு வந்து ரெய்ட் நடத்தப்போகிறேன்."

"சே! சே! அப்படியெல்லாம் தப்பாக எதுவும் நடக்கிறதில்லை சார். எல்லாமே தாலி கட்டிய குடும்பப்பெண்கள் தான் வருவாங்க."

சற்றுத் தள்ளி தெரிந்த சின்னதொரு வீட்டில் விளக்குகள் இறந்து இருட்டு இருந்தது.

போய் நின்ற நிர்வாகி கதவைத் தட்டி, "சௌமியா" என்று குரல் கொடுத்து அடையாளம் காட்டியதும்,

உள்ளே விளக்குகள் உயிர் பெற்றன.

கதவைத் திறந்து வெளிப்பட்ட பையனின் கண்களில் தூக்கமிருந்தது. நிர்வாகியைக் கண்டதும் கொஞ்சமாக மிரண்டு-

பின்னாலேயே போலிஸைக் கண்டதும் மேலும் மிரண்டான். சூழ்நிலைப் பயமில்லாமல் வெறும் ஜட்டியுடன் படுத்திருந்த பையன்கள் கும்பல் ஓடிப்போய் கைலியும் வேட்டியும் கட்டிக்கொண்டு அச்சமாகப் பார்த்தார்கள்.

"யார்டா இன்னைக்கு காட்டேஜூகளை சுத்தம் செய்தது?"

"ஆளுக்கொரு காட்டேஜ் செய்தோம். ஏன் மானேஜர் சார்? ஏதாவது காணோம்னு புகார் வந்திருக்கா?"

"பதினாறாம் நம்பர் காட்டேஜை சுத்தம் செய்தது யாரு?"

"நான் தான் சார். காட்டேஜை நான் சுத்தம் செய்தேன் சார். கிளீன் செய்யச் சொன்னா கடைசி வரை இந்தப் பாலையா செய்யவேயில்லை சார்."

"ஏண்டா பாலையா? ஏன்?"

"சுத்தமாயிருந்ததுதான். அதான் கண்டுக்காம விட்டுட்டேன்."

"முண்டம். நாளைக்கு காலையில பேசிக்கறேன். சுத்தமா இருந்தாலும் நீ சுத்தம் செய்யணும். அது உன் வேலை."

"ஒரு நிமிஷம் மனேஜர் சேர்! தம்பி உன் பெயர் என்ன?"

"பாலையாங்க."

"பாலையா! அங்கே உள்ளே எதையும் தொடவேயில்லைங்கறே இல்லையா?"

தயங்கினாலும் சொன்னான். "ஆமாம் சார்! ஹால்ல இருந்த மூணு ஸ்டீல் தம்ளர்களை மட்டும் கழுவலாம்னு உள்ளே கொண்டு வைச்சேன். சரி அதுக்கேன் ரூமை நனைக்கணும்னு தோணுச்சி. ஷெல்ப்பில் வைச்சிட்டு வந்துட்டேன் சார்." என்றவன்,

"நன்றி.....ரொம்பவும் நன்றி" என்று சொல்லும் காரணம் புரியாமல் விழித்தான் அந்தப் பாலையா.

இன்ஸ்பெக்டர் தொலைபேசியில் பேசிய சில நிமிட நேரத்திற்கெல்லாம் கைரேகை நிபுணர் வந்தார். படம் எடுப்பவர் வந்ததும் வேலையில்லாமல் நின்றார்.

தம்ளர்களில் பவுடரை அடித்து கைரேகையைக் கண்டுபிடித்து, ரேகைகளில் இரண்டு பெண்ணின் ரேகைகள், ஒன்று ஆணுடையது. மூன்றிலும் பொதுவாக இருந்த ரேகை- உள்ளே எடுத்துக் கொண்டு போய் வைத்த அந்த பாலையாவுடையதாகத்தான் இருக்க வேண்டும்.

"அவர்கள் கிளம்பிப் போவதை நீங்கள் பார்க்கவில்லை என்கிறவரை நிச்சயம்தானே?"

"எப்படி சார் பார்த்திருக்க முடியும்? காரை காட்டேஜ் வாசல்வரை கொண்டு வர முடியும். ஏறிட்டுப் போயிருக்கலாம்."

"உண்மை."

"அப்படியே போனாலும், ரிசப்ஷன் வழியாகத்தான் போகவேண்டிய அவசியமில்லே. இப்படியே பின்பக்கமாகவும் நேரே போயிடலாம்."

"உள்ளே வருகிற கார் நம்பர்களை- வெளியே போகிற கார்களை மெயின் கேட்டில் குறிப்பு எடுப்பாங்க இல்லே?"

"எடுப்பாங்களே. சொல்லுவார்களே."

கேட்டில் இன்ஸ்பெக்டர் விசாரித்த போது உற்சாகம் வடிந்தார்.

அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் கிட்டத்தட்ட பதினாலு கார்கள் கிளம்பிப் போயிருக்கின்றன. நம்பர்களைக் காட்டினார்கள்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: பி. மருமுது
வயது: 29
முகவரி: 15/1, கேணிலேன், சபீக்கமன்சில், காத்தான்குடி-5.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: எம். சிவகணேசரட்ணம்
வயது: 23
முகவரி: 3/1,ஏ, றைகம, இங்கிரிய.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எம். நுஹ்மான்
வயது: 20
முகவரி: லெப்பை வீதி, தாராபுரம், மன்னார்.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பேனாநட்பு.

பெயர்: வி.சின்னையன்
வயது: 25
முகவரி: AL-HASSA, P.O.BOX-9400, DUBAI. U.A.E.
பொழுது போக்கு: நண்பர் தொடர்பு.

பெயர்: ரி.நந்தினி.
வயது: 17
முகவரி: சந்தை வீதி, அக்கரைப்பற்று-8.
பொழுது போக்கு: புத்தகம், ரீ.வி.

பெயர்: எச்.வஹாப்தீன்.
வயது: 22
முகவரி: மொஸ்க் ஜங்சன், அங்குநொச்சிய, ஹொரவ பொத்தான.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.

பெயர்: ஹஸ்னாமுஸ்கி
வயது: 23
முகவரி: P.O.BOX-11462 RIYADH-11551, SADUDI ARABIA.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். ரிஸ்வி
வயது: 24
முகவரி: 25, மனம்பொட, உக்குவளை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ரவிச்சந்திரன்.
வயது: 22
முகவரி: THE AMERICAN SCHOOL 6926, MONTAGNOLA . SWITZERLAND.
பொழுது போக்கு: கிரிக்கெட், சினிமா.

பெயர்: ஏ.விஜயகுமார்
வயது: 22
முகவரி: 48 பி, ஸ்டேசன் வீதி, வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: வி.கோபாலசிங்கம்
வயது: 17
முகவரி: பழுகாமம்-2, திருப்பழுகாமம்.
பொழுது போக்கு: ஓவியம் வரைதல், பத்திரிகை.

பெயர்: எம். அஸ்ரப்
வயது: 28
முகவரி: P.O.BOX-52775, RIYADH-11573, K.S.A.
பொழுது போக்கு: கிரிக்கெட், உதைபந்து.



படிப்பகம்

www.padippakam.com

# 78

# தாய்

“ஒருக்காலும் நடக்காது. என்னிடம் ஏதோ கோளாறு இருக்கிறதாம். எனக்கு இனி மேல் குழந்தைகளே பிறக்காது என்று வைத்தியர் சொன்னார்.”

ஒரு சுண்டெலி தரையில் குறுக்கே விழுந்தோடியது. அந்த அமைதியை மின்னல் மாதிரி கிழித்துக் கொண்டு எங்கிருந்தோ படாரென்று ஒரு ஓசை யெழுந்தது. மீண்டும் கூரையின் வைக்கோலில் எதையோ பயந்து நடுநடுங்கும் மெல்லிய விரல்களால் துழாவித் துழாவித் தேடுவது போல மழை பெய்தது. தண்ணீர் சொட்டுச் சொட்டாகத் தரையில் வழிந்து, அந்த இலையுதிர்கால இரவுக்குப் பாதை வகுத்துக் கொடுத்தது.....

தூக்கக் கிறக்கத்திலும் தாயின் காதில் அந்த மெல்லிய காலடியோசை வாசற் புறத்தில் நெருங்கி வருவது கேட்டது. கதவை ஜாக்கிரதையுடன் திறந்து கொண்டு யாரோ உள்ளே நுழைந்தார்கள்.

“தத்யானா, நீ படுத்து விட்டாயா?”

“இல்லை.”

“அவள் தூங்கி விட்டாளா?”

“அப்படித் தான் தெரிகிறது.”

விளக்கின் சுடர் ஓங்கியது. ஒரு நிமிஷம் அந்த இருளில் திக்கித் திணறிப் படபடத்தது. அந்த முஜீக் தாயின் படுக்கையின் அருகே வந்து, தனது கோட்டை எடுத்து அவளது பாதங்களைப் பதனமாகப் போர்த்தி மூடினான். அவனது பணிவிடையின் எளிமை தாயின் உள்ளத்தைத் தொட்டு விட்டது; அவள் புன்னகையோடு தன் கண்களை மீண்டும் மூடிக் கொண்டாள். ஸ்திபான் ஒன்றுமே பேசாமல் உடுப்புக்களைக் கழற்றி விட்டுப் பரணின் மீது ஏறிப் படுத்தான். மீண்டும் எங்கும் அமைதி நிலவியது.

தாய் அசையாமல் படுத்தவாறே இருளின் கனவுக் குரலைக் கேட்டுக் கொண்டு கிடந்தாள். அப்போது அவளது கண் முன்னால் இரத்தம் தோய்ந்த ரீபினின் முகம் நிழலாடித் தெரிந்தது.

மேலே பரணில் உசும்பும் சத்தம் கேட்டது.

“இந்த மாதிரி வேலையில் எப்படிப் பட்டவர்கள் ஈடுபடுகிறார்கள், பார்த்தாயா? வாழ்க்கை முழுவதும் சோகத்தையே அனுபவித்து அனுபவித்து உழைத்த வர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த வயசிலே இவர்கள் ஓய்வெடுக்க வேண்டியது தான் நியாயம். ஆனால் அதற்குப் பதிலாக இந்த மாதிரிக் காரியங்களில் ஈடுபட்டு வேலை செய்கிறார்கள்.. நீயும் இளமையாகவும் துடிப்பாகவும் தானிருக்கிறாய்....இருந்தும் என்ன, ஸ்திபான்..”

அந்த முஜீக்கின் பதில் ஆழ்ந்த செழுமையான குரலில் ஒலித்தது:


## மக்சீம் கார்க்கி

“இறங்குவதற்கு முன்னால் முதலில் யோசிக்க வேண்டாமா?”

“இந்த மாதிரி நீ முன்னாலேயே சொல்லியிருக்கிறாய்.”

இருவர் குரலும் ஒரு நிமிஷ நேரம் நின்று போயின. பிறகு ஸ்திபானின் குரல் ஒலித்தது.

“இப்படித் தான் ஆரம்பிக்க வேண்டும். முதலில் முஜீக்குகளிடம் தனித் தனியாகப் பேச வேண்டும். உதாரண மாக, அலெக்சிமாகவிடம் பேசத் தொடங்குவோம். அவன் படித்தவன். உணர்ச்சி நிறைந்தவன்; அதிகாரிகளால் துன்பத்துக்கு ஆளானவன். செர்கேய் ஷோரின்- அவனும் ஒரு புத்திசாலியான முஜீக்தான். கினியாசெவ் நேர்மையான வன்; பயப்பட மாட்டான். ஆரம்பத்திலே இவர்கள் போதும். அவள் நமக்குச் சொன்னாளே, அந்த மாதிரி மக்களை நாமும் பார்க்கத்தான் வேண்டும். நான் ஒரு கோடரியைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு, விறகு பிளந்து கொடுத்துக் கொஞ்சம் மேல் வரும்படி சம்பாதிக்கப் போகிறவன் மாதிரி நகருக் குப் போய் வருகிறேன். நாம் மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். ஒரு மனிதனின் மதிப்பு அவன் செய்யும் வேலையில் இருக்கிறது என்று அவள் சொன்னாளே, அது ரொம்ப சரி. இன்று அந்த மூஜீக் நடந்து கொண்டானே, அந்த மாதிரி. கடவுளின் முன்னால் கூட அவனைக் கொண்டு வந்து நிறுத்திப் பாரேன்.



அவன் தன் பிடி யிலிருந்து கொஞ்சம் கூடத் தவற மாட்டான். சரி. நீ அந்த நிகீதாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்? மனச்சாட்சிக்கு ஆட் பட்டவன். இல்லையா? சரி.”

“உங்கள் கண் முன்னாலே அவர்கள் ஒரு மனிதனை அடித்து நொறுக்குகிறார்கள். நீங்களானால் வாயைப் பிளந்து கொண்டு வெறுமனே வேடிக்கை பார்க்கிறீர்கள்.”

“அவசரப்படாதே. அந்த மனிதனை நாங்களும் சேர்ந்து கொண்டு அடிக்காமல் விட்டோமே. அதை நினைத்து நீ சந்தோஷப் பட வேண்டும்.”

அவன் வெகுநேரம் வரையிலும் ரகசியம் பேசிக்கொண்டிருந்தான். சமயங்களில் சத்தத்தை மிகவும் குறைத்துப் பேசினான். எனவே தாய்க்கு அநேகமாக ஒன்றும் கேட்கவில்லை. சமயங்களில் உச்சஸ்தாயியிலும் பேசினான். அப்படி பேசும்போது அவனது மனைவி அவனைத் தடுத்து நிறுத்துவாள்.

“உஷ்! அவளை எழுப்பி விட்டுவிடப் போகிறாய்!”

தன்னைக் கவிந்து மேகம் போல் சூழ்ந்து வந்த தூக்கத்துக்குத் தாய் ஆளாகித் தூங்கலானாள்.

மங்கலான அருணோதயப் பொழுது அந்தக் குடிசையின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கும் வேளையில், ராத்திரிக் காவல் ஓய்ந்ததை அறிவிக்கும் தேவாலய மணியோசை மிதந்து ஒலித்த நேரத்தில், தத்யானா தாயை உசுப்பி எழச்செய்தாள்.

“நான் தேநீர் தயாரித்து விட்டேன். முதலில் ஒரு கோப்பை தேநீரைக் குடியுங்கள். படுக்கையிலிருந்து எழுந்தவுடன் நேராகச் சென்றால் குளிர் உறைக்கும்.”

ஸ்திபான் தனது சிக்கலான தாடியைக் கோதிவிட்டவாறே தாயிடம் அவளது விலாசத்தைக் கேட்டான். இராத்திரியில் தோன்றியதை விட, இப்போது அந்த முஜீக்கின் முகம் தெளிவாகவும் பரிபூரணமாகவும் தோன்றுவது போலத் தாய்க்குப்பட்டது.

“நடந்ததையெல்லாம் எண்ணிப் பார்க்க எவ்வளவு வியப்பாக இருக்கிறது!” என்று அவர்கள் தேநீர் பருகும் சமயத்தில் சிரித்துக் கொண்டே சொன்னான், அவன்.

“என்னது?” என்று கேட்டாள் தத்யானா.

“நாம் ஒருவருக்கொருவர் பழகிப் போனதுதான் எவ்வளவு எளிதாக...”

“நமது வேலையோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலுமே ஓர் அதிசயமான எளிமை இருக்கத்தான் செய்கிறது” என்று ஏதோ சிந்தித்தவாறே சொன்னாள் தாய்.

தாயிடம் விடை பெற்றுக் கொள்ளும் போது அவர்கள் எந்த விதமான பரபரப்பையும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் அவளிடம் பேசாமலே, தாங்கள் செய்யும் சின்னஞ்சிறிதான பற்பல செயல்களின் மூலம் அவளுக்குச் சௌகரியம் செய்து கொடுப்பதில் தாங்கள் எவ்வளவு அக்கறை கொண்டவர்கள் என்பதைக் காட்டிக் கொண்டார்கள்.

தபால் வண்டியில் ஏறி உட்கார்ந்ததுமே, தாய் நினைத்தாள்- ஸ்திபான் ஒரு வயல் வெளியைப் போல மிகுந்த ஜாக்கிரதையோடும் சத்தமின்றியும், களைப்படையாமலும் வேலை செய்யத் தொடங்குவான். அவனது மனைவியின் குறைபாடுகள் அவன் காதுகளில் என்றென்றும் ஒலிக்கும். அவளது பசிய கண்களின் கூரிய ஒளி மறையவே

> **வாழ்க்கை முழுவதும் சோகத்தையே அனுபவித்து அனுபவித்து உழைத்து; தன்னுடைய சொந்த முயற்சிகளால் தான் பெற்ற வெற்றியை அவள் மீண்டும் நினைவுகூர்ந்தபோது, உள்ளம் ஆனந்த வெறியால் அமைதியாகப் படபடத்தது.**

மறையாது. தனது இறந்துபோன குழந்தைகளை எண்ணி, தாய்மையுணர்ச்சியோடு உறுமிக் கொண்டிருக்கும் அவளது பழி வாங்கும் எண்ணம் அவள் உயிர் வாழ்கின்ற வரையிலும் தீரவே தீராது.”

அவள் ரீபினைப் பற்றியும் நினைத்துப் பார்த்தாள். அவனது இரத்தத்தை, அவனது முகத்தை, அவனது கனன்றெரியும் கண்களை, அவனது பேச்சை யெல்லாம் நினைத்துப் பார்த்தாள். அந்த அகோரமான மிருகத்தனத்தை எண்ணி அவளது மனத்தில் நிர்க்கதியான நிலைமையின் கசப்புணர்ச்சி புகுந்து, அவளது இதயத்தைக் கசக்கி இறுக்கியது. நகருக்கு வந்துசேருகிற வரையிலும் வழியெல்லாம் அந்தக் காலைப் பொழுதின் மங்கிய புகைப் புலத்திலே மிகயீலின் உருவம்தான் அவள் கண்முன்னே உருவாகிக் கொண்டிருந்தது. அவனது கட்டுமஸ்தான, கரிய தாடி கொண்ட உருவத்தை, கந்தல் கந்தலாகக் கிழிந்த சட்டையோடும், பின்புறமாகக் கட்டிய கைகளோடும், பறட்டைத் தலையோடும் அவள் கண்டாள். எந்த உண்மைக்காக அவன் போராடுகிறானோ அதன்மீது கொண்ட நம்பிக்கையும், அது தாக்கப்படுவ தால் எழுந்தகோபமும் நிறைந்து பொங்கும் மனிதனாக அவனைக் கண்டாள். பூமியோடு ஒட்டிக்கொண்டிருக்கும் எண்ணிறந்த கிராமங்களையும், அந்தக் கிராமங்களிலே நியாயத்தின் திக்விஜயத்தை வரேவற்க ரகசிய மாகக் காத்திருக்கும் ஜனங்களையும், எந்தவித எதிர்ப்புமின்றி, எதிர்கால சுபிட்சத்தில் எவ்வித நம்பிக்கையுமின்றி அர்த்தமற்ற உழைப்பிலேயே தமது வாழ்நாளையெல்லாம் போக்கிவிட்ட ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தையும் அவள் எண்ணிப் பார்த்தாள்.

குன்றுகள் பெருத்துக் கரடு முரடாக, உழவற்றுக் கிடக்கும் நிலத்தைப்போல், உழுப வனை எதிர்நோக்கி ஆர்வத்தோடும் மௌனத் தோடும் அங்காங்கு காத்திருக்கும் காத்திருக் கும் தரிசு நிலம்போன்ற வாழ்க்கையை அவள் கற்பனை பண்ணிப் பார்த்தாள்.

அந்தத் தரிசு நிலம் சுதந்திரமான, நேர்மை நிறைந்த மனிதர்களை நோக்கி, “என்மீது சத்தியத்தையும் அறிவையும் விதைத்துப் பயிராக் குங்கள்; நான் உங்களுக்கு உங்கள் உழைப்புக்கு நூறு மடங்காகப் பலன் அளிக்கிறேன்” என்று சொல்வது போலிருந்தது.

தன்னுடைய சொந்த முயற்சிகளால் தான் பெற்ற வெற்றியை அவள் மீண்டும் நினைவு கூர்ந்தபோது, அவளது உள்ளம் ஆனந்த வெறியால் அமைதியாகப் படபடத்தது; அந்த ஆனந்தத்தை அவள் நாணிக் கோணி உள்ளடக்கிக் கொண்டாள்.

நிகலாய் இவானவிச் அவளுக்குக் கதவைத் திறந்து விட்டான், அவனது தலை கலைந்து போயிருந்தது; கையில் ஒரு புத்தகம் இருந்தது.

“அதற்குள்ளாகவா?” என்று உற்சாகமா கக் கூறினான் அவன் “நீங்கள் மிகவும் சுறு சுறுப்பான பேர்வழிதான்!”

அன்பு ததும்பும் கண்கள் அவனது மூக்குக் கண்ணாடிக்குப் பின்னே படபட வென்று இமை தட்டி விழித்தன. அவளது மேல் கோட்டைக் கழற்றுவதற்கு அவளுக்கு உதவினான்; அன்பு நிறைந்த புன்னகையோடு அவளது முகத்தைப் பார்த்தான்.

“நேற்றிரவு நம் வீட்டைச் சோதனை போட்டார்கள்” என்றான் அவன். “அதைக் கண்டு, போன இடத்தில் உங்களுக்கு ஏதா வது ஆபத்து நேர்ந்துவிட்டதோ என்று நான் பயந்து போனேன். ஆனால் அவர்கள் என்னைக் கைது செய்ய வில்லை. உங்களைக் கைது செய்திருந் தால், என்னையும் அவர்கள் நிச்சயம் கொண்டு போயிருப்பார்கள்.”

அவளைச் சாப்பாட்டு அறைக்குள் அழைத்துச் சென்றான். போகும்போதே ஒரே உற்காகத்தோடு பேசிக்கொண்டே போனான்.

(தொடர்ந்து வரும்)

---

அசோக் இறந்துபோன செய்தியை, காலை பதினொரு மணிக்கு நவீன் எனக்கு ஃபோன் செய்து தெரிவித்தான்.

மனதுக்குள் அதிர்ச்சியின் கனம் பலமாய் இறங்கியது.

# அடையாளம்

மேனேஜரிடம் விடுமுறை சொல்லி விட்டு ஆட்டோ பிடித்து மருத்துவமனை அடைந்தேன். நவீன் முகப்பிலேயே நின்றிருந்தான். அருகே நெருங்கி “எப்படியாச்சு?” என்றேன்.

“ஸ்கூட்டர்ல ஆபீஸ் போறப்ப எதிர்ல வந்த பஸ் மோதி.. ஆள் அங்கேயே அவுட். அவனோட பேர்ஸில் இருந்த அட்ரஸை வைச்சி ஹொஸ்டலுக்கு தகவல் வந்தது. நானும் சுந்தரும் அப்பதான் கடைக்கு கிளம்பிக்கிட்டிருந்தோம். விஷயத்தை கேள்விப்பட்டதும் உடனே அடிச்சி பிடிச்சி வந்தோம். இப்ப போஸ்ட் மார்ட்டம் நடக்குது.”

“அசோக்கோட பேரன்ட்ஸுக்கு தெரியப்படுத்தியாச்சா?”

“ம்...”

“ஆமா... சுந்தர் எங்கே?”

“‘தம்’ அடிச்சிட்டு வர்ரேன்னு போனான். அதோ.. சுந்தர் வருகிறான்.”

“இப்பதான்.”

இன்ஸ்பெக்டர் வந்து நவீனிடம் எதிலோ கையெழுத்து வாங்கிக் கொண்டு போனார்.

சென்ற வருடம் திருமணம் ஆகும் வரை நான் பேச்சிலர் ஹொஸ்டலில் தங்கியிருந்த பொழுது அசோக் பக்கத்து அறையில் இருந்தான். மென்மையானவன். பழக இனிமையானவன். அவனது ஆயுள் இப்படி சக்கரத்தினடியில் சிதைந்து போனது கொடூரம்.

“பாபுவுக்கு விஷயம் தெரியாதா?” என்றான்.

“தெரியுமே.”

“பின்னே காணோம்.”

“அவனைப் பற்றி உனக்குத் தெரியாதா? அவன் தான் எதுக்கும் அலட்டிக்காத ஆளாச்சே. நீங்க போங்க நான் வரல்லேன்னு சொல்லிட்டான்.”

பாபு எதிலும் பட்டுக் கொள்ளாத டைப் என்பதை நானறிவேன். என்றாலும் தன்னுடைய அறையில் தங்கியிருக்கும் ஒருவன் அகாலமாக இறந்துவிட்டதற்கு கூடவா வர மாட்டான்?

> **“எனக்குள் ஆத்திரம் கனன்றது. உடல் அளவிலான பிரசன்னம் மட்டுமே நட்பாகிவிடுமா?”**

நேரம் கடந்தது.

“குணா.. சாப்பிடப் போகலாம்.”

“வேண்டாம். யூ கேரி ஆன்.”

“நீ ஒருத்தன் மட்டும் தனியா நின்னுகிட்டு என்ன பண்ணப் போறே?”

“அசோக்கோட அப்பா, அம்மா வந்துட்டா... நாம யாராவது இங்க இருக்கறது நல்லதுதானே?”

“திருக்கோவிலூரிலயிருந்து வந்து சேர சாயந்தரமாயிடும். கவலைப்படாம வா.”

அதற்கு மேல் மறுக்க முடியவில்லை.

சாலை முனையில் சாப்பாட்டுக்கடை. கணிசமான கூட்டம்.

பேரர் கொண்டு வந்து வைத்த சாதத்தில் வெறுமனே கை அளைந்தேன்.

“ஏன் குணா?”

“ச்ச.. சாப்பிட தோணல”

இருவரும் சில்லி சிக்கனும், மட்டன் பிரியாணியும் சொன்னார்கள். எனது கவனம் முழுக்க ஹொஸ்பிடலிலேயே இருந்தது.

“நான் வேணுமானா முன்னாடி போகட்டுமா?” என்றேன்.

“ஓ.கே. நாங்க கொஞ்ச நேரத்தில வந்திடறோம்.”

மாலை நான்கு மணிக்கு அசோக்கின் பெற்றோர் வந்தார்கள். அவனது அம்மா வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு



— உதாதீபன் —

அழுதாள். அப்பா மௌனமாக கண்ணீர் சிந்தினார். நான் நடந்த விபரீதத்தை அவர்களிடம் சொன்னேன். இன்ஸ்பெக்டர் வந்தார்.

“ஐ ஆம் வெரி ஸொரி. மனசை திடப் படுத்திக்குங்க...” என்று சம்பிரதாயமாக ஆறுதல் சொன்னார்.

“போஸ்ட் மோர்டம் முடிஞ்சிடுச்சி. உங்களுக்காகதான் காத்துக்கிட்டிருக்கோம். கையெழுத்துப் போட்டுட்டு ‘பாடி’யை வாங்கிக்குங்க.”

எல்லாம் முடிந்தது.

தங்கள் மகனின் கூறுபோட்ட உடலை வாங்கிக் கொண்டு, கொள்ளை வாடகைக்கு டாக்ஸி பிடித்து அவர்கள் போய்விட்டார்கள்.

நான் வெறுமையான இதயத்துடன் வெளியேறுகையில் நவீனும், சுந்தரும் எதிர்ப் பட்டார்கள்.

“இவ்வளவு நேரமா எங்கே போய்ட்டீங்க?”

“லிபேர்ட்டியில் நல்ல இங்கிலிஷ் படம் போட்டிருக்கான். டைம் பாஸ் ஆகணுமேன்னு அதுக்குப் போய்ட்டு வர்றோம். சரி. பி.எம். முடிஞ்சுதா?”

“முடிஞ்சி அசோக்கோட பேரண்ட்ஸ் பாடியை வாங்கிட்டும் போய் சேர்ந்துட்டாங்க.”

“அதுக்குள்ளயா... அடடா... நாங்க இல்லாம போய்ட்டோமே?”

“பரவாயில்லை. குணா ஒருத்தன் இருந்தானே... அது போதும். பாபு வந்தானா?” என்றான் நவீன்.

“இல்லை.”

“ஓ.கே.ஸீயு குணா..” இருவரும் அகன்றார்கள்.

எனக்கு பாபுவைப் பார்த்து சூடாய் நாலு வார்த்தை கேட்க வேண்டும் போல தோன்றியது. எனவே வெல்லம்பிட்டி செல்லும் பேருந்தில் ஏறினேன்.

அறைக்கதவு பெறுமனே மூடியிருந்தது. திறந்தேன்.

பாபு கட்டிலில் குப்புறப் படுத்திருந்தான். தூங்குகிறானா?

அருகே சென்று முதுகை தொட்டதும் புரண்டான். கண்கள் இரத்தமாய் சிவந்திருந்தன. முகம் ஜிவ்வென்று வீங்கி கன்னத்தில் உப்புக் கோடுகள்.

“குணா..” என பாய்ந்தெழுந்து கட்டிக் கொண்டான்.

“ஏன் அசோக்கைப் பார்க்க வரல்ல?” என்றேன்.

“எப்படி வர முடியும்? காலையில ‘போய்ட்டு வர்றேன் பாபு’ன்னு சிரிச்சிக்கிட்டே சொல்லிட்டுப் போனானே! அந்த முகந்தான் எனக்குள்ள பதிஞ்சிருக்கு. அதை உருக் குலைஞ்ச நிலையில் பார்க்க, எனக்கு திராணியில்லை.”

அழுதான்.

“பாபு... ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர் செல்ப்.”

“முடியல குணா...”

“காலையிலயிருந்தே இப்படியே தான் கிடக்கறியா?”

“ஆமா. எவ்வளவு அழுதாலும் மனசு ஆறமாட்டேங்குது.”

கட்டிலுக்கடியில் கடை சாப்பாடு தொடப்படாமல் காய்ந்து கிடப்பதைக் கவனித்தேன்.

“சாப்பிடக் கூட இல்லையா?”

“ம்ஹூம்.”

அவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு சூடாய் காபி வாங்கி வற்புறுத்தி குடிக்க வைத்துவிட்டு புறப்பட்டேன்.

மாடிப்படியிறங்கித் தெருவை அடைந்த பொழுது நவீனும் சுந்தரும் ஓட்டோவிலிருந்து இறங்கினார்கள்.

“ஹேய் குணா... ஹொஸ்டலுக்கு வந்தியா?”

“ம்.”

“நாங்க அப்படியே ‘பாரு’க்கு போய்ட்டு வந்தோம். அதான் லேட்டாயிடுச்சு.” என்றான் சுந்தர். இருவரிடமும் விஸ்கி நாற்றம்.

“பாபு இருக்கானா..? ரூம் மேட் ஒருத்தன் ஆக்ஸிடெண்ட்ல செத்துப் போய்ட்டான். அதைப் பார்க்க வராத இவனெல்லாம் ஒரு நண்பனா?” நவீனின் பேச்சு குழறியது.

“நண்பனாங்கிறது இரண்டாம் பட்சம். முதல்ல அவன் மனுஷனே கிடையாது.”

இதைக் கேட்டு எனக்குள் ஆத்திரம் கனன்றது. அடக்கிக் கொண்டேன். உடல் அளவிலான பிரசன்னம் மட்டுமே நட்பின் வெளிப்பாடாகி விடுமா? மனம் பாதித்து வருந்தி கண்ணீர் சிந்தி துடிப்பது தானே துயர பங்கேற்பின் அடையாளம்! அது தானே நண்பனின் மரணத்திற்கு உண்மையாக செலுத்தும் அஞ்சலி!

அந்த விதத்தில், அசோக்கின் இழப்பை நினைத்து நாள் முழுக்க பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்காமல் அழுது கிடக்கும் பாபு எங்கே? சற்றும் வருத்தமின்றி வயிறுமுட்ட இறைச்சிச் சாப்பாடு உண்டு, உல்லாசமாய் சுற்றி, போதையில் திளைத்து வந்திருக்கும் இவர்கள் எங்கே?

‘த்து!’ மானசீகமாக அவர்கள் மேல் காறி உமிழ்ந்துவிட்டு நடந்தேன்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரே ஒரு வார்த்தை

வெண்மணற்பரப்பு.

விழிகள் நீளும் அளவிற்கு நீர்ப்பரப்பு. அலைகள் எழுந்து விழுந்து நுரைகளாக கரையினை உரசிக் கொண்டிருந்தன.

"கீதா...! என்ன... நம்பு..."

வசந்தனின் உறுதி மொழி.

"என்னத் தயவுசெஞ்சி தொந்தரவு பண்ணாதீங்க..." அவன் அவளின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. கீதாவின் அன்பைப் பெறுவதிலேயே குறியாக இருந்தான். அவனின் கடிதங்கள் அவளுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தின.

கண்ணீரால் எழுதினான்.

கவிதைகளால் எழுதினான்.

பெண்மை மென்மையல்லவா? அவள் கசிந்தாள். கரைந்தாள். வசந்தனிடமே உறைந்தாள். அவனை இதயத்தில் நிறைத்தாள். வசந்தன் என்று உச்சரிக்கும் போது அவளுக்குள் வசந்தகாலம் மலர்வது போன்றிருக்கும். அவனின் பேச்சில் அவள் மயங்கிக்கிடந்தாள். காரியாலயத்தில் அவளின் விரல்கள் எழுத்துக்களை அமர்த்தும் போதும் அவளையறியாமலேயே அவனின் பெயர் பதிவாகும்.

காதல் எவ்வளவு விசித்திரமானது! கீதாவுக்கு அது எவ்வளவு சந்தோசமானது! அவளின் இதயத்திற்கு இறகு முளைத்திருந்தது.

வசந்தனின் நடை, அவன் அணியும் ஆடைகளின் விதம், காதல் ரசம் வடியும் அவனது பேச்சுக்கள் அத்தனையும் அவளுக்குள் ஒரு இனம் புரியாத, இதயத்திற்கே இதற்கு முன்பு அறிமுகமாகாத சிலிர்ப்பை ஏற்படுத்தின.

அவளின் எதிர்காலம் அவளின் முன்னே விரிந்து கிடப்பதாகவும் அதில் பௌர்ணமி வெளிச்சம் பால்வார்த்திருப்பதாகவும் நினைத்துக் கொண்டாள்.

இந்தக் காதல் விவகாரம் அவளின் வீட்டில் சூடுபிடித்தபோது,

"நான் அவரத்தான் காதலிக்கிறேன்..." கீதா முடிவாகச் சொன்னாள்.

"காதலுக்கு நான் எதிரானவனல்ல.. ஆனா.. காதலிக்கிறவன் நல்லவனா..? கெட்டவனா..? அவண்ட குடும்ப நிலை இதெல்லாம் பத்தி யோசிக்காம மடத்தனமா காதலிக்கிறது தான் மகாதப்பு..."

அப்பாவின் பேச்சில் நியாயம் இருப்பதாக அவளுக்குப்பட்டது.

வசந்தனின் குடும்பத்தைப்பற்றியோ, அவனின் நடத்தை பற்றியோ அதுவரை அவள் ஆராயவில்லை.

"அவன் எங்க வேர்க் பண்ணுறான்?"

"......."

"பேரன்ட்ஸ் என்ன செய்யுறாங்க..?"

"........"

அவளால் இப்போது பேச முடியவில்லை.

காதல் எவ்வளவு போதையானது என்பதை அனுபவ பூர்வமாக கீதா உணர்ந்தாள். தன்னுடைய அறியாமையினை நினைத்து வெட்கப்பட்டாள். அவளின் தவறை அப்பாவுக்குத் தெரியப்படுத்த விரும்பவில்லை.

"அப்பா, நீங்க நினைக்கிறமாதிரி அவரு தப்பானவரில்ல. நல்ல குடும்பத்தச் சேர்ந்தவர்..."

காதல்– சந்தேகங்களால் களங்கப்படுவதாக நினைத்தாள் கீதா.

'என் இதயத்தை
எனக்கு அறிமுகப்படுத்தியவள்
நீ!'

அவன் அன்று சொன்ன வார்த்தைக்குள் எவ்வளவு காதல் சக்தி நிறைந்துள்ளது.

'நீ இல்லாத
நேரங்களில்
எனக்குள்
நெருப்பு எரிகிறது'

கீதா பெருமைப்பட்டாள். அவனுடைய அன்பின் ஆழத்தில் அவள் நிறைந்திருப்பதாக நினைத்து சந்தோசம் அடைந்தாள்.

***

அன்று ஞாயிற்றுக்கிழமை. நிர்மலாவின் வீட்டுக்குச் சென்றிருந்தாள் கீதா. எதையும் மறைக்காத நட்பு. அவர்கள் இருவருக்கும் இடையில் திரை இருக்கவில்லை. இருந்தாலும் தன்னுடைய காதல் விவகாரத்தை மட்டும் ராஜதந்திரம்போல மறைத்தாள்.

காதலை நிரந்தரமாக மறைப்பதற்கு, உபாலி சேனநாயக்க சென்ற விமானமா என்ன..?

இருமல்

## "அவனுடைய அன்பின் ஆழத்தில் நிறைந்திருப்பதாக நினைத்துப் பெருமைப்பட்டாள்"

தும்மல்-

இவற்றை மறைக்க முடியாதுதானே! அது போலத்தான் இந்தக் காதலும்.

"என்னடி... வசந்தன் எண்டவனோட சுத்துறியாமே?"

நிர்மலா நேரடியாகவே கேட்டாள்.

**-நிந்ததாசன்-**



அவள் அப்படிக் கேட்டதனால் கீதாவுக்கு கொஞ்சம் வலித்தது.

"அது.. வ..ந்..து.."

அவளால் பேச முடியவில்லை.

"ஏண்டி.. எனக்கிட்ட மறைக்கணும்..?"

"..."

"நீ என்ன நினைச்சாலும் பரவாயில்ல.. ஒண்டு சொல்றன் கேள்! இந்த ஆம்புளகள மட்டும் லேசில நம்பிடாதே!"

"நிர்மலா! வசந்தன் ரொம்ப நல்லவர்"

"அப்படியெண்டு நீ நினைக்கிற!"

"ஆமா!"

"நான் நினைக்கல்ல. ஆமா! உன்ன ஏமாத்திட்டான் எண்டு வெச்சிக்க; என்ன பண்ணுவாய்?"

"......"

நிர்மலா அன்று கூறியவைகள் அவளின் ஞாபகத்தை அதிகப்படுத்தியது.

அவளுக்கு இப்போது ஞாபகம் வந்தது.

***

நேரம் 4 மணி.

வேலை முடிந்தது.

அந்தக்கடற்கரை, வெண்மணற்பரப்பு, கீதா சென்றாள். அங்கே வசந்தன் கீதாவை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

அவனின் பக்கத்தில் அவள்..

அவள்+அவன்+மனம்=போராட்டம்.

அவன் பேசவில்லை.

அவளும் அப்படித்தான்.

"............"

"............"

கீதா பொறுமை இழந்தாள்.

"ஏன் பேசாம...ம்...?"

"............"

"என்ன.. கோவமா...?"

"............"

"இப்ப பேசப் போறீங்களா இல்லையா.....?"

"அப்ப நான் போறன்...."

எழுந்தாள்.

அவளின் கையைப்பற்றி இருக்கச் சொன்னான் அவன்.

"நான் கேக்கிற கேள்விகளுக்கு மறைக்காம, கோவிக்காம பதில் சொல்லணும்!"

அவளை அவன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

"நீங்க எங்க, எங்க வேர்க் பண்ணுறீங்க...?"

"............"

ஒரு நாளுமே அவள் அவனிடம் கேட்காத கேள்வி.

"உங்கட பெமிலி, பேரன்ட்ஸ் பத்தியும் சொல்லணும்!"

அவள் உறங்கிக் கிடப்பதாகத்தான் அவன் இத்தனை நாளும் நினைத்துக் கொண்டிருந்தான்.

"ஏன் இதெல்லாம் இப்ப கேக்ற?"

"தேவைப்படுது..."

"லவ் பண்றதுக்கு முந்தி தேவைப்படல்லையா...?"

"இல்ல"

"ஏன்..?"

"அதுக்கு முன்ன நான் லவ்பண்ணல்லையே!"

அவன் சிரித்தான்.

அவளும் சிரித்தாள்.

"யாரோ, எவரோ, ஏதோ சொல்லியிருப்பாங்க. அதக்கேட்டு இப்ப நீ என்ன சந்தேகப்படுறாய்!"

"இது சந்தேகமில்ல. நாலுபேர் உங்களப் பத்திக்கேக்கிற போது நான் சொல்லணுமே!"

"அந்த அவசியமே உனக்கில்ல. எனக்கு அடுத்த மாதம் கல்யாணம். ஆனா, நிச்சயமா உன்னோட இல்ல.." அவன் இது வரையும் முற்றுப்புள்ளி வைப்பதற்காகக் காத்திருந்தான். இப்போது அதனைச் சாதித்துவிட்டான்.

அவள் கலங்கவில்லை.

அழவில்லை என்றாலும் இதயம் நொறுங்கித்தான் போனது.

அவன் என்ன வெல்லாமோ சமாதானம் சொன்னான். அவள் கேட்கவில்லை. கேட்க வேண்டிய அவசியமும் அவளுக்கு இப்போதில்லை.

"நான் சொல்லட்டுமா..?" என்று கேட்டாள். அவள் அவனை ஒரே ஒரு பார்வை பார்த்துவிட்டு, உறுதியான குரலில் சொன்னாள்:

"போடா...!"

அந்த ஒரே ஒரு வார்த்தை கோடி வார்த்தைகளால் அவனை மிதிப்பதற்குச் சமன் என்ற திருப்தியில் அவள் சென்று கொண்டிருந்தாள். ●

# மீண்டும் நாம்....

## "எப்போது நாங்கள் வீட்டுக்குப் போறது?" சஞ்சு அடிக்கடி மழலையில் கேட்கிறான்.

என் அடிவயிற்றிலிருந்து குபீரிட்ட துயரம் போலத்தான் இந்தப் பிரதேசமக்கள் ஒவ்வொருவருக்குள்ளும் துயரம், வேதனை, சலிப்பு. எங்கள் வாழ்கையின் மூலவேர் அறுக்கப்பட்டு சாயும் விருட்சங்களாய் வலிகாமத்து மண்ணைவிட்டு சாய்ந்து கொண்டிருக்கிறோம். கதைகளில் வாசித்துப் பாவப்பட்ட பாலஸ்தீனத்து அகதிகள் போல.. இப்போது நாங்களும் ஓடியோடிக் களைத்துப் போய்விட்டோம். இந்த உலகின் சாபக்கேடாகிப் போய்விட்டதான உணர்வு. யாழ்ப்பாணத்தையும் தென்மராட்சியையும் இணைக்கும் நாவற்குழிப்பாலத்தில் நின்று திரும்பித் திரும்பிப் பார்த்து..... ஓடிப்போன நாட்கள்



எத்தனை கொடூரமானவை: 'வலிகாமத்தை விட்டு வடமராட்சிக்கோ தென்மராட்சிக்கோ ஓடித் தப்பித்துக்கொள்ளுங்கள்' என்ற அறிவிப்புக் கேட்ட போது எங்களுள் காணப்பட்ட உணர்வு... சே.. அதை எப்படி மறப்பது? எதை எடுப்பது..? எதைவிடுவது..? எங்கு போவது? எல்லாமே கணப்பொழுதின் சஞ்சலங்களாய் கரைய சடுதியாய் எதுவுமேயில்லாது ஓடிப்போனது.

"எங்கையக்கா போறது?" என் கரம் பிடித்து நடந்த சஞ்சு அடிக்கடி மழலையில் கேட்டுக்கேட்டு என் உயிரை வாங்கிக் கொண்டிருந்தான். "ஸ்கூலுக்குப் போவம்",

"படிக்கவே?" எனக்குத் திகீரென்றது.

பாடசாலை என்றால் படிக்கப்போகிற இடமென்று தான் குழந்தைக்குத் தெரியும். அகதிமுகாமென்று தெரியாதே.. சொன்னாலும் விளங்குமா?

"ஏனக்கா ஸ்கூலுக்குப் போறமாதிரி அச்சாச்சட்டை, ஷூஸ் போடாமல் பேறம்?" எனக்குத் தலைவலித்தது. அந்தளவில் சஞ்சு அமைதியாகிவிட்டான். வயோதிபச் சுமைகளோடு, வயிற்றுச்சுமைகளோடு தள்ளாடித் தள்ளாடி ஐந்து லட்சம் அகதிகள் நகர்ந்து கொண்டிருந்த அந்தக் கறுத்த இரவின் அவலங்களை மீட்டுப் பார்க்கவே நெஞ்சு கனக்கிறது. கண்ணீர் கரைபுரண்டோடுகிறது.

தட்டாதெருவில் இருந்து வந்த சங்கரப்பிள்ளை ஐயா.. கானுக்குள் விழுந்து செத்ததும், பார்வதி அக்கா தெருவோரத்தில் பிரசவம் கண்டதும், சன நெரிசலில் மிதிபட்டு சரவணனின் பத்துவயதுப்பிள்ளை இறந்து போனதும்- எல்லாமே என்றுமே மறக்கப்பட முடியாத இதயரணங்கள்-அழிக்கப்படாத சுவடுகள்.

தென்மராட்சி மக்கள் சுமைதாங்காது தவித்த கோலம். நடைபாதையும் குடிமனையாகிய அவலம். பார்க்குமிடமெல்லாம் மனிதத்தலைகளாய்.. சமூகத்தின் சகல தரப்பினரும் சமத்துவமாய் அகதிமுகாம்களில் தஞ்சம் கோரிக்கிடந்த கோலம்... இன்னமும் என் மனப்படிகளில் பாசியாய் படிந்து கொண்டிருக்கிறது. 'நாங்கள் வீட்ட போவமே' என்று அடம்பிடித்தழும் சஞ்சுவை பராக்குக் காட்டுவதற்காக வெளியில் போனபோது பலதும் பத்துமாக வதந்திகள் பரவிக் கொண்டிருந்தன. "கெதியில எல்லாரும் யாழ்ப்பாணம் போகலாம் போல!" எதிரில் வந்த செந்தில் சொல்லிவிட்டு என்னைப்பார்த்தான் "ஆர் சொன்னது?" "பரவலாய்க் கதைக்கினம்." "ஆளையாள் பேய்க்காட்டினம் நீ நம்பிக்கொண்டு நிற்கத் தெரியாமல் குதிக்கிறாய்!" "இல்லையக்கா உன்னாணை ராமநாதன் ஐயாதான் சொன்னவர்.. நடப்பு அப்பிடித்தான் இருக்குதாம் பேந்தென்ன.. செத்தாலும் அங்கு போய்ச்சாவம். உந்தச் சீரழிவு படுறதைவிட வீட்டிலை.. சொந்த மண்ணிலையிருந்து சாவமே! அது நிம்மதியெல்லே!" செந்திலின் வார்த்தைக் கோர்வையில் விரக்தி விரவியிருந்தது. இதைக்கேட்ட சஞ்சு 'கோயில் வளவில விளையாடப் போவம்...

"வீட்ட போவம்.. வீட்ட எப்பையக்கா போறது" சஞ்சு ஓலமெடுக்கத் தொடங்கி விட்டான். ஒவ்வொருவர் வாயிலும் இதே புலம்பல்தான். குழந்தைகளுக்கெல்லாம் தொற்று வியாதிகள் பரவத்தொடங்கி ஒவ்வொன்றாக உயிரிழந்து கொண்டிருந்தன. பெரியவர்களுக்கெல்லாம் பிறந்தமண் ஏக்கம் பிறஷர், ஹாட் என்று கொன்று கொண்டிருந்தன.

நாவற்குழிப்பாலம் தாண்டும் போது சனநெரிசலில் விழுந்து உராய்வுபட்ட எனது முழங்கால் சிராய்ப்பு பெரியதொரு வடுவாய் பளிச்சென்று தெரிந்தது. இது அந்த ஒக்டோபர் மாதத்து 'சூரியக்கதிரின் வடு..' என்று மனம் ஞாபகப்படுத்தி ஆறுதலடைந்தது. ஒவ்வொரு உள்ளத்திலும் எத்தனை எத்தனை வடுக்கள்! அடைமழையில் ஐந்து லட்சம் பேரும் அகதியாய் ஓடிய அந்தக் கணப்பொழுதை கண்முன் நிறுத்திப் பார்க்கவே சரீரம் நடுங்குகிறது.

"எப்ப வீட்ட போறது?" சஞ்சுவுக்கு ஏக்கம் பிடித்துவிட்டது. நெற்றியில் கை வைத்த போது அனலாய்க் கொதித்தது. "சஞ்சு மகன், எங்கடை அச்சாப்பிள்ளையெல்லே.. இஞ்ச வாங்கோ வெளிய போவம்;" தூக்கிக் கொண்டு பாடசாலை தாண்டி வந்து நீரேரிக்கரையில் நின்று பார்த்து "அங்க பாருங்கோ எங்கடை வீட்டுப்பக்கம் ஒருத்தரும் இல்லை.. பாத்தீங்களோ.. நாங்கள் மட்டும் எப்பிடிப்போறது?" நாவற்குழிப் பாலம் மனித சஞ்சாரமற்றுக் கிடப்பதைக் குழந்தைபார்த்துச் சொல்கிறது. "எங்க போட்டினம்..? ஆமியங்கிள்மார் எங்கட வீட்டை இருப்பினம்தானே...? நாங்களும் வோவமேயக்கா.." எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மீண்டும் எல்லாரும் யாழ்ப்பாணம் போவது பற்றிக்கதைக்கிறார்கள்..

"எப்போ போவது? எப்போ போவது?" எல்லா வாயிலும் இதே வினாத்தான். சஞ்சு இப்போது சிரிக்கின்றான். நாங்கள் யாழ்ப்பாணம் போக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டு உற்சாகம் பொங்கிக் குதூகலிக்கிறான். ●

# ஒரே பாடல்

"டெலிபோன் மணிபோல் சிரிப்பவள் இவளா..." ரகுமானின் இசையில் அனுபமா குழுவினர் அற்புதமாகப் பாடிய அந்தப் பாடலை பத்தாவது தடவையாகப் போட்டுக் கேட்க ஆரம்பித்தான் விவேக். நேரம் இரவு 11 மணி. கிட்டத்தட்ட கடந்த ஒரு வாரமாக இதே வேலைதான்.

அலுவலகத்திலிருந்து வந்ததும் கைகால் அலம்பி, கொஞ்ச நேரம் ரி.வி. பார்த்து, இரவுச் சாப்பாட்டை முடித்தால், நித்திரைக்குப் போகும் வரை "டெலிபோன் மணி போல்...." பாடல் ஒலித்துக் கொண்டே இருக்கும். திரும்பத் திரும்பப் பலமுறை கேட்டும் அலுக்காமல் பாடலைக் கேட்டு மயங்கிக் கிடக்கும் விவேக்கைப் பார்க்கையில் அவனது புது மனைவி நிவேதாவுக்குப் பத்திக் கொண்டு வந்தது. 'ச்சே! சுத்த சூனியமா இருப்பார் போலிருக்கே! ஒரு புது மனைவியோட ஆசைகளைப் புரிஞ்சிக்கத் தெரியாதவர் எப்பிடிப் பாட்டை ரசிக்கிறார்?' மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். பத்தாவது தடவையாகப் பாட்டைக் கேட்டு முடித்த விவேக்,

"உண்மையிலேயே பாட்டு சுப்பரா இருக்கு நிவேதா. அற்புதமான கவிதை வரிகள்...."

"உன் பேரை யாரும்
சொல்லவும் விடமாட்டேன்
அந்த சுகத்தையும் தரமாட்டேன்
உன் கூந்தல் பூக்களை
விழவே விடமாட்டேன்
அதை வெய்யிலில் விடமாட்டேன்...
வெள்ளை நதியே
உன்னுள் என்னைக் கொஞ்சம்
மூழ்கி நீந்த விடு
வெட்கம் வந்தால்...."

"ஆஹா! எத்தனை தடவை கேட்டாலும் சலிக்காது நிவேதா!" உணர்ச்சி பொங்கக் கூறியவன், பதினோராவது தடவையாகவும் பாட்டைப் போட்டுவிட்டுக் கண்ணை மூடி ரசிக்க ஆரம்பித்தான். ஆத்திரம் தாங்க முடியாத நிவேதா அவன் முன் வந்து நின்று கிட்டத்தட்ட அழ ஆரம்பித்தாள்.

"இந்தப் பாட்டைப் பாடின அனுபமாவையே கல்யாணம் பண்ணித் தொலைக்க வேண்டியதுதானே....என்னை எதுக்குக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க? உங்களுக்கு என்மேல ஆசையோ, அன்போ எதுவுமே கிடையாது."

திடீரென்று மழை பெய்ததுபோல நிவேதாவின் அழுகை ஒலியைக் கேட்டு திடுக்கிட்டுக் கண் திறந்த விவேக், நிவேதாவைத் தன்னருகே இழுத்து.

"ஏய்! என்ன இது சின்னப் பொண்ணாட்டம்! நான் இந்தப் பாட்டைக் கேக்கிறப்போ ஏன் இப்பிடி மயங்கிப் போயிடறேன்னு ஒனக்குத் தெரியுமா?"

"....."

"இந்தப் பாட்டைக் கேக்கிறப்போ எல்லாம் நான் உன்னையே நெனைக்கிறேன் நிவேதா! நீ என் மனம் முழுக்க நிறைந்ததும் எனக்குத் தானாகவே மயக்கம் வர்ற மாதிரி ஒரு சுகம்....அதனால் திரும்பத் திரும்ப இந்தப் பாட்டை..."

மேலே பேசவிடாமல் அவன் வாயைப் பொத்திய நிவேதா,

"நீ இல்லாது போனால் இதயமிருக்காது என் இளமை பசிக்காது." பாடல் வரிகளைச் சொல்ல, விவேக் ஆனந்தத்தில் தடுமாறிப் போனான். நிவேதா அவன் மார்பில் மெல்லத் தலை சாய்க்க அவனுக்கு மீண்டும் மயக்கம்.... பாடலைக் கேட்டல்ல!



**எம். சுரேஷ்**



படிப்பகம்

www.padippakam.com

# தொடராத நாடகம்

இலக்கிய நயம்

தருவது ரசிகன்

"தென்றலே கொஞ்சம் நின்று போ.
சேதியைக் காதில் வாங்கிப் போ.
தென்திசையிலே என் காதலன்-
தேடிப்போய் சேதி சொல்!
வாடிப்போய் அவன் மல்லிகை,
வந்து சூடிக்கொள் என்று சொல்!
திகட்டுமோ தேன்குழல் என்று கேள்.
திரும்பிவா, விருந்து கேள் என்று சொல்!"

மல்லிகாதேவி வீணையை மீட்டியபடி தேன்குரலில் தன் செவ்விதழால் பாடல் உதிர்த்தாள்.

"என்றுதான் மீண்டும் திருநாள்.
அன்றுதான் வசந்தம் வரும்நாள்.
நன்றுதான் கள்வன் தரும் தோள்.
மொன்றுதான் சுகம் பெறும்நாள்."

சுயமாக புனைந்த பாடல் மனதுக்கு இதமாக இருந்தது.

"கவிதை எழுத கற்றதில்லை.
இலக்கண மரபும் கற்றுத்தெளிந்ததில்லை.
கள்வா உன் செயல் மறக்கவில்லை;
கவிதை மலர அதனால் பஞ்சமில்லை!"

மல்லிகாதேவிக்கு மனதுக்குள் ஆனந்தக் குதியல். கவிதை வருகிறதே. மறந்துவிடாமல் குறித்துவைத்து அவர் வந்ததும் சொல்லவேண்டும்.

என்ன சொல்வார்?

"நீயே ஒரு கவிதை. அதனை படித்து பொருள் அறியவே போதவில்லை நேரம்! அதற்குள், கவிதை நீ எழுதிய கவிதையை படிக்கக் கிடைக்குமா நேரம்?" என்று கேட்பார்.

அதற்கு சொல்லக்கூடிய பதிலையும் மனதில் உற்பத்தி செய்து பார்த்தாள் மல்லிகாதேவி.

"கண்ணால் படிப்பது, இதழால் பாடுவது, கருத்தினில் பதிப்பது அதுதான் கவிதை."

"கண்ணால் படிப்பது, கரத்தால் புரட்டுவது, இதழால் மீட்டுவது, சுருத்தால் வியப்பது, சுகத்தில் லயிப்பது என்றெல்லாம் எத்தனையோ அர்த்தம் பொதிந்த கவிதை ஒன்று இருக்கிறது. காட்டவா?"

"எங்கே காட்டுங்கள்?"

அவன் சுட்டுவிரலை அவள் மார்புக்கு எதிரே நீட்டிச் சொல்வான், "நீ!"

"மிகையான புகழ்ச்சி!"

"சொன்னதெல்லாம் மெய்! நிரு பிக்கவா?"

வேண்டாம் என்பாளே தவிர, அவன் கைநீட்டி அவள் இடையை வளைத்து தன் அருகே இழுத்துக் கொள்வதை தடுக்க மாட்டாள்.

தாடையை தொட்டு நிமிர்த்துவான். அவன் முகம் பார்க்க வெட்கம். கண்களை மூடிக்கொள்வாள். இதழ்கள் துடித்து அவள் எதிர்பார்ப்பைக் காட்டிக்கொடுத்து விடும்.

எதிர்பார்ப்பை ஈடுசெய்ய மறுப்பானா. இதழில் திருவிழா கொண்டாட உதட்டை அனுப்பிவைப்பான். கைகள் கனக மணித் தேர் உடலில் ஊர்வலம் நடத்த, தேர் குலுங்கும். வடம் அவனிடம். தேர் அவன் வசம்.



தேருக்குள் எத்தனை சிற்பங்கள். சிற்பங்களில் எத்தனை கலை நயம். ஆராய்ச்சி தொடரும்.

ஒரு கட்டத்தில் சொல்லிப்பார்ப்பாள், "கவிதை படித்தது போதும்!"

அவன் ஆராய்ச்சியை நிறுத்தாமல் சொல்வான்; "நுனிப்புல் மேய்வது எனக்குப் பிடிக்காது!"

நெஞ்சுக்குள் குறு குறுப்பு, நினைவுக்குள் சுடு நெருப்பு, பஞ்சுக்குள் தீயை வைத்தால் பற்றாமல் என்ன செய்யும்?

பற்றிய தீ படரும். தீயைத் தீயால் அணைக்கும் அதிசய முயற்சி தொடரும்.

நினைவில் கோர்த்துப் பார்த்த நிகழ்வை மல்லிகாதேவி கவிதையாக்கினாள்.

"உடலுக்கு உடலே திரையாகும்.
வாழை மடலுக்கும் உடலே சமமாகும்.
கடலுக்குள் அலைகள் எழுவது போல்,
உள்ளக் கடலுக்குள் ஆசை மோதியெழும்"

அனுபவம் கவிதையில் வந்து விழுந்தது.

"குட விளக்காய் ஆசை மறைந்திருக்கும்
சரச விளக்கத்தில் ஆசை வெளிப்பட்டு
மலை முகட்டினில் இருக்கும் விளக்காகும்!
அணைத்தும் அணையா விளக்காகும்!"

கோர்க்கப்பட்ட வார்த்தைகள் இதழால் வெளிப்படும்போதே சிந்தையில் இனித்தது.

தேகம் மெல்லச் சுட்டது.

"இருட்டினில் தூக்கம் திருட்டுப் போகும்.
வெளியே சொன்னால் வெட்கம் கொல்லும்.
திருடனைச் சிறையில் போட்டுவைப்பேன்
திருந்தவே மறுத்து திருடித் தின்பான்"

வீணையை விரல்கள் மீட்ட, சிந்தையில் நினைவுகளை மீட்டியவளை வெளியே கேட்ட சத்தம் விழிப்பூட்டியது.

தொண்டையை கனைத்துக் காட்டியதில் இருந்தே வந்தவன் துணைவன்தான் என்பது தெரிந்து போனது.

நெஞ்சுக்குள் சட்டென்று இன்ப வெள்ளம். துள்ளியெழுந்திட்டாள். வாசல் கதவு திறக்க விரைந்திட்டாள்.

கதவு திறக்கும் போது முகத்தை கோபமாய் வைத்துக்கொண்டாள். உள்ளத்தில் இருந்து பாய்ந்த மகிழ்ச்சி வெள்ளத்தை உதட்டில் வராமல் தடுத்துக் கொண்டாள்.

அவனுக்கும் புரிந்தது.

உணவு பரிமாறினாள். உணர்வை மட்டும் ஒளித்துவைத்துக் கொண்டாள்.

பள்ளியறையில் தொடர்ந்தது ஊடல் நாடகம். 'புள்ளிமான் பிடிக்குள் வராதா? அள்ளித் தேன் பருகத் தராதா?' என்று ஏங்கினான்.

அவனுக்கு முதுகு காட்டியபடி ஒருக்களித்துப் படுத்திருந்தாள்.

அகக்கண் திறந்திருந்தது. புறக்கண் மட்டும் கட்டாயமாக பூட்டப்பட்டிருந்தது.

முதுகில் அவன் மூச்சுக் காற்று சுடும் நெருப்பாய் தொட்டுப் போனது.

கால்களை தூக்கிப் போட்டான். கண்கள் பேசாததை கால்கள் பேசின. தன் கால்களை மீட்க நினைத்தாள், மனம் மறுத்தது.

நெருப்பு நெருங்கிவிட்டது. நெருப்பில் இட்டால் கொழுப்பு கரையும்தானே. அது தானே இயற்கை விதி.

தோளில் கைவைத்து தன் புறமாகத் திருப்பினான்.

மறுக்கத்தான் நினைத்தாள். இன்னும் சில நேரம் ஊடல் என்னும் மல்லுக் கட்டத்தான் நினைத்தாள்.

அவன் கெஞ்சுவதை ரசிப்பதில் ஒரு ஆனந்தம். அவன் கெஞ்ச, அவள் மிஞ்ச, ஊடல் நாடகத்தின் திரை அவன் கொஞ்சுதலோடு விழும்.

'போராடிக் கிடைத்த கனி. அதனைப் புசிப்பதில்தானே இன்பம் தனி' என்பது போல அவன் நிலையிருக்கும்.



தாமதம் ஆர்வத்தைக் கொடுக்கும். ஆர்வம் வேகத்தைக் கொடுக்கும். அதற்குத் தானே ஊடல் நாடகம்.

ஆனால் மல்லிகாதேவியால் ஊடல் நாடகத்தைத் தொடர முடியவில்லை.

ஏன் முடியவில்லை? நினைத்துப் பார்த்தாள். பிடிவாதம் முறிந்ததுக்கு அவள் மனம் விளக்கம் சொன்னது.

"உன்னால் முடியாது!"

"ஏன் முடியாது?"

"உன் நெஞ்சு அப்படி!"

"எப்படி?"

"கொழுப்பை தீயில் இட்டதைப்போல, கொழுந்தன் கைபட்டதும் உருகும் நெஞ்சு உன்னுடையது. உருகும் நெஞ்சால் ஊடல் முடியுமோ?"

மல்லிகாதேவியின் மனம் சொன்னது சரிதானா? திருவள்ளுவரே 'சரி' என்கிறாரே.

"நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்போம் எனல்"

குறள்-1260. அதிகாரம்-126

# புருனேயில் பணப்பறிப்பு நாடகம்!

## வலையில் சிக்கிய தொழிலதிபர்கள்

புருனே நாட்டுக்கு செல்லும் தொழிலதிபர்கள் மற்றும் பணக்காரர்களுக்கு மோகினிப் பயம் பிடித்தாட்டுகிறது.

மோகினி என்றதும் பேய்- பிசாசு என்று நினைத்துவிடாதீர்கள். இது மனித மோகினிகள்.

புருனே விமான நிலையத்தில் கையில் பசையுள்ள புள்ளிகளின் காலடி வைத்தவுடனேயே ஒரு கும்பல் கவனிக்கத் தொடங்கி விடும்.

அவரது வசதி எப்படி, அவரது குடும்ப நிலவரம், ஆள் எப்படி சபலிஸ்டா என்றெல்லாம் அவரது ஜாதகத்தை ஆராய்ந்து வலை வீசத் தொடங்கும்.

சபல புத்தி உள்ளவர்கள் என்றால் காரியம் சுலபமாகிவிடும். அவர் தங்கியிருக்கும் நட்சத்திர விடுதிக்கு அழகான பெண் ஒருத்தி அனுப்பிவைக்கப்படுவாள். பின்னர் அங்கு நடக்கும் லீலைகளை நட்சத்திர விடுதியில் மறைத்துவைக்கப்பட்ட வீடியோ கமரா பத்திரமாக படமாக்கிவிடும்.



காரியம் முடிந்ததும் மறுநாள் மிரட்டல் ஆரம்பமாகும். வீடியோ படத்தைக் காட்டி பணம் கேட்பார்கள். கொடுக்க மறுத்தால் அவரது வீட்டிற்கு வீடியோவை அனுப்பி வைத்துவிடுவோம் என்று அன்பாக எச்சரிப்பார்கள்.

வெளியே தெரிந்தால் வெட்கக்கேடு. அதனால் அந்தக் கும்பல் கேட்கும் பணத்தைக் கொடுத்துவிடுவார்கள். இது ஒரு இலாபகரமான தொழிலாக புருனேயில் கொடிகட்டிப்பறக்கிறது.

நட்சத்திர விடுதிக்காரர்கள் சிலரையும் கைக்குள் போட்டுவைத்துக் கொண்டு ஒரு கும்பல் தனது கெட்டித்தனத்தை காட்டி வருகிறது.

தாய்லாந்து நாட்டில் இருந்து விசேஷமாக தருவிக்கப்பட்ட அழகிகளை வைத்துத் தான் பணக்காரர்களை கட்டிலில் வீழ்த்துகிறார்கள்.

அந்த அழகிகள் ஒவ்வொருவருக்கும் மாத வருமானமாக குறைந்தது ஒரு இலட்சம் ரூபாய்களாவது கிடைக்கிறது. அதனால் வெகு மகிழ்ச்சியோடு அந்தக் கும்பலுக்காக விசுவாசமாக உழைக்கிறார்கள்.

வித்தியாசமான முறையிலும் தங்கள் திட்டத்தை நிறைவேற்றுகிறார்களாம். அனுபவப்பட்ட தொழிலதிபர் ஒருவர் சொன்ன கதையைக் கேளுங்கள்:

புருனேயில் உள்ள நட்சத்திர விடுதியில் தங்கியிருந்த அவருக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த தொழிலதிபரின் மனைவிக்கு தான் சிநேகிதி என்று சொல்லி ஒரு பெண் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். "உங்கள் மனைவிக்கு ஒரு பரிசு தந்துவிட விரும்புகிறேன். நேரில் வர முடியுமா?" என்று கேட்டாள்.

தொழிலதிபரும் அவள் சொன்ன முகவரிக்குச் சென்றார். அவரது மனைவிக்கு சில புத்தகங்களை பரிசாகத் தருவதாக சொல்லி ஒரு பார்சலைக் கொடுத்தாள். பின்னர் தொழிலதிபரோடு பேச்சுக் கொடுத்தபடியே அவரை மெல்ல சலனப்படுத்த ஆரம்பித்தாள். தொழிலதிபரும் தன் வசம் இழந்து கட்டிலறைவரை சென்றுவிட்டார். வீடியோ கமரா தன் காரியத்தில் கண்ணாயிருந்தது. பின்னர்தான் அவருக்கு விஷயமே தெரிந்தது. தான் ஏமாற்றப்பட்ட ஆத்திரத்தில் பணம் கொடுக்க மறுத்துவிட்டார்.

வீடியோ படம் வீட்டுக்கு அனுப்பப் பட்டது. போட்டுப் பார்த்தார் தொழிலதிபரின் மனைவி. அவ்வளவுதான்; குடும்பம் பிரிந்து விட்டது.

இவ்வாறு பல தொழிலதிபர்களும், கோடீஸ்வரர்களும் இந்தக் கும்பலிடம் மாட்டி கேட்டதைக் கொடுத்துவிட்டு துணியைக் காணோம், துண்டைக் காணோம் என்று புருனேயில் இருந்து ஓடியிருக்கிறார்கள்.

விஷயம் மெல்ல கசியத் தொடங்கியிருப்பதால் புருனேக்கு செல்லவே பணக்காரர்கள் பயப்படத் தொடங்கியிருக்கிறார்கள்.

# சிந்தியா பதில்கள்

*** ஒரு மணி நேரத்தை முன்நோக்கி தள்ளியதால் இலாபமா, நஷ்டமா?**

சி. புவனேஸ்வரன், கண்டி.

மின்சார சேமிப்புக்கு ஓரளவு லாபம் தான். அது ஒருபுறமிருக்க, தூங்கும் நேரம் பழக்கப்பட்டதால் அதனை மாற்ற முடியவில்லை. ஆனால் எப்படியும் ஒரு மணி நேரம் முன்பாகவே எழவேண்டிய கட்டாயம். அதனால் குறைந்தது ஒரு மணிநேர தூக்கம் நஷ்டமய்யா! உங்களுக்கு எப்படி?

*** சிந்தியா! இசைப் பயணத்தில் நடிக்கும் சனோஜா பிப்லி இலங்கையைச் சேர்ந்தவரா?**

முகம்மது லாபிர்-புல்மோட்டை-01.

ஆம். ஆனால் இங்கு வெள்ளித் திரையில் வசதியில்லை என்று நினைத்தாரோ என்னவோ, அங்குபோய்த்தான் பிரமாண்டமான திறமைகளைக் காட்டிக்கொண்டிருக்கிறார். எல்லாம் ஒரு கலைச்சேவைதானே.

*** காதல், காமம் வேறுபாடு என்ன?**

கே.ஹரிகரன்-திருமலை.

முன்னது அள்ளக்குறையாத அட்சய பாத்திரம். பின்னது நிறைக்க, நிறைக்க நிறையாத பிச்சைப்பாத்திரம். (எங்கோ படித்த ஞாபகம்.)

*** வாழ்க்கையில் மிக உயர்ந்த பதவி எது?**

என். எம். அஜார்தீன்-நிக்கவெவ.

மிக நல்ல உள்ளம் ஒன்றில் உங்களுக்கு ஒரு நாற்காலிபோட்டுத் தரப்படுமானால், அதுதான்.

*** தற்போது தமிழக அரசியலில் ரஜினியின் பங்கு என்ன?**

வி. தாமோதரன், கம்பளை.

வாக்குக் கேட்கும் விளம்பரங்களில் ரஜினி இல்லாத விளம்பரமே இல்லை. வாக்குப் போட்டவர்களுக்கு நன்றி தெரிவித்து வெளியான விளம்பரங்களில் ரஜினி படங்களையே சல்லடை போட்டுத் தேட வேண்டியதாக இருந்தது. தேவை உள்ள போது மட்டும்தான் அரசியல்வாதிகள் பங்கு கொடுப்பார்கள்- பங்காளி என்று தோளில் கைபோட்டுக் கொள்வார்கள்.

*** பி.பி.சியில் பாலியல் கல்வி ஒலிபரப்புகிறார்களே அது பற்றி என்ன நினைக்கிறீர்?**

க. செல்வநாதன், கொழும்பு-10.

தமிழில் முதன் முதலாக பிரபலமாக அறிமுகமாகியிருக்கும் தேவையான முயற்சி. பாலியல் பற்றி பேசுவது கெட்டகாரியம் என்று போலித்தனமாக கதைப்பதெல்லாம் காலம் கடந்தாகிவிட்டது. வாழ்க்கைக்கு உயிரோட்டமான ஒரு விஷயத்தை உணர்வு பூர்வமாக விவாதிப்பதும், தப்பான அபிப்பிராயங்களைப் போக்குவதும் நல்ல காரியம். ஆனந்திக்குப் பாராட்டுக்கள்.

*** அழும் ஆண்களை நம்பமுடியுமா?**

என். பிரியா, கண்டி.

ஈரமுள்ள மனதின் இயல்பான வெளிப்பாடுகளில் கண்ணீரும் ஒன்று. அதில் ஆணென்ன, பெண்ணென்ன? வாய்விட்டு அழுதால்தான் சிலருக்கு சோகம் கரைகிறது.

*** இலங்கை அரசியலில் ஜே.ஆரின் அரசியல் தந்திரம் பற்றி என்ன நினைக்கிறீர்?**

அம்தரவல்லை அமீர், முறுத்தகஹமுன.

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியாவை வெறுக்க வைக்க, நண்பர்களுக்குள் பகையை வளர்க்கும் முதல் விதையை போட்டவராச்சே! அந்தத் தந்திரம் இன்று வரை பல வழிகளில் அரசுக்கு உதவுகிறதே. ஜே.ஆரை எப்படி மறப்பது!

*** தூக்கம் வராமல் இருக்க (இரவில்) என்ன செய்யலாம்?**

சி. சிவபாலன், பதுளை.

ஓடிப்பிடித்து விளையாடலாமே- கொசுவுடன்.

*** வறுமையில் காதல் எப்படியிருக்கும் சிந்தியா?**

ஜே. ஜிப்ரி, அக்கரைப்பற்று-06.

பந்தா இல்லாமல் அடக்கமாக! கடற்கரைக்குப் போவதானாலும் ஓட்டோவில் போவதைவிட காலாற நடந்தே போவது மூலம் உடலுக்கும் ஆரோக்கியமாக.... என்று நீட்டிக்கொண்டே போகலாம்.

*** நம் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் சில படங்கள் சகிக்க முடியவில்லையே. உதாரணம், 'சூரியராஜா'. ஏன் இப்படிப்பட்ட படங்களை தெரிவு செய்கிறார்கள்?**

அ. பவித்ரா, நுவரெலியா.

கால நேரத்தோடு மக்கள் தூங்கி எழ வேண்டும் என்ற அக்கறையாக இருக்கலாம்.

*** இந்தியா-இங்கிலாந்து ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தொடரில் இந்தியாவின் ஆட்டம் எப்படி?**

வ.விஜயன், கொழும்பு-6.

குளிரில் நடுக்கம். ஸ்ரீநாத், வெங்கடபிரசாத், அசாருதீன், விக்ரம் ராதோர் போன்ற சிலருக்கு மட்டும்தான் உடம்பில் சூடு இருந்திருக்கிறது.

*** சில பெண்களின் விழிக்குளத்தில் மீனும் தெரிகிறது. தூண்டிலும் தெரிகிறது!? என்ன செய்யலாம்?**

என்.ரி.அமீர்னுதீன், அக்கரைப்பற்று-06.

மீனையும் கொத்தவேண்டும், தூண்டிலிலும் சிக்க வேண்டும். அதுதானே காதல்!

*** வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாதவர்கள் ஆண்களா, பெண்களா?**

ரி. பத்மா, கொழும்பு-13.

வாழ்வே மாயம் என்று நினைத்து புலம்புவர்கள்! (இரு தரப்பிலும் உண்டு அந்த ரகத்தினர்.)

*** தமிழ் நடிகர்களில் கைநிறைய சம்பளம் வாங்கும் நடிகர் யார்?**

ஆர். தேவரூபன், மாத்தளை.

சில நடிகர்கள் வாங்கும் சம்பளத்துக்கு பையே போதவில்லை, நீர் கையைப் பற்றி பேசுகிறீர். கவுண்டமணி வீட்டில் கறுப்புப் பணமாக ஒரு கோடி ரூபாய் கைப்பற்றப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் கண்ணில்பட்ட கறுப்புப் பணமே இவ்வளவு என்றால், படாதது எவ்வளவு தேறும்?

*** தமிழ் நாட்டில் வீசிய அலை எப்படி?**

கே. மாலதி, ஹட்டன்.

அலை என்றால் அடித்துத்தான் செல்லும். தூக்கிப் பந்தாடி வீசாது. தமிழகத்தில் வீசியது சூறாவளி.

*** ரம்பா அலையால் நக்மாவுக்கு பாதிப்பு வருமா?**

ஜெ. நரேஸ், வவுனியா.

அலையால் பாதிப்பு வராவிட்டாலும் ரம்பாவின் கைவசமுள்ள கலைகளால் பாதிப்பு வரக்கூடும்.

*** டியர் சிந்தியா! முகம் பார்த்து பேசும் அன்பு, கடிதம் மூலம் உண்டாகும் அன்பு. எது உயர்வானது?**

ஏ.ஜெ. ஜெசீமா, கந்தளாய்.

இரண்டையும்விட உயர்வானது அகம் பார்த்து மலரும் அன்பு.






படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 33

இராமர் தனி ஒருவராகவே நின்று மாபெரும் அரக்கர் படையினை எவ்வாறு வதம் செய்தார்; கரன், தூடணன் ஆகியோருடன் மற்றுமோர் அசுரர் தளபதியாகிய-மூன்று சிரசுகளை உடைய-திரிசிரன் ஆகிய மாபெரும் வீரர்களை எவ்வாறு கொன்றார் என்ற விபரங்களை அகம்பன் மூலம் அறிந்த

## இலங்கேஸ்வரனின் கலக்கம்

இராவணன் சற்று மனம் தளர்ந்துதான் போனான், அவர்கள் அனைவரையும் அழித்தொழித்தவன் இராமன் என்ற ஒரு மாநிடன் என்பதனை அறிந்ததும் இராவணன் சற்றுத் துணுக்குற்றான். எவராலும் தனக்கு அழிவு ஏற்படக்கூடாது என்று அவன் முன்னர் பிரம்மதேவரிடம் பெற்ற வரத்தினைச் சற்று எண்ணிப்பார்த்தான். தேவராலும் மூவராலும், யட்சர், கந்தர்வர் ஆகியோராலும் தான் அழிக்கப்படலாகாது என்றுதான் வரம் கேட்டுப் பெற்றான். மாநிடரால் தனக்கு அழிவு ஏற்படலாகாது என்று கேட்காமல் விட்டு விட்டதை ஒருகணம் இராவணன் எண்ணியிருக்க வேண்டும். இதன் காரணமாகத்தான் இராவணன் சிம்மா சனத்திலிருந்து கீழே இறங்கும்போது நிலை தடுமாறினான்.

எக்காலத்திலும் ஏற்படாத தடுமாற்றம் இக்கணம் ஏற்படக்காரணம் என்ன என்று அவையிலுள்ள அனைவரும்-ஆளுக்கொரு கருத்துக் கொண்டனர். 'எத்தகைய வீரனாக இருந்த போதிலும் வயதினால் உடலில் வலு குன்றாமலா போய்விடும்! இலங்கேஸ்வரனின் உள்ளம் உருக்கினைப் போன்றிருப்பினும் காலத்தால் உடல் தளரத் தொடங்கி விட்டது' என்றுதான் பலர் தீர்மானித்தனர். ஆனால் அவையின்கண்ணிருந்த அரக்கர் குருவும் சோதிடர்களும் இதனை ஒரு துர்ச்சகுனம் என்றே கணக்கிட்டனர்.

இராவணனின் உள்ளத்திலும் ஒரு தளப்ப நிலை உருவானது. அரியாசனத்தை விட்டு கீழிறங்கிவந்து, அகம்பனின் தோளைப் பிடித்து உலுக்கியவாறு "வா என்னுடன்" என்று அழைத்துக்கொண்டு மந்திராலோசனை மண்டபத்தை வந்தடைந்தான்.

### அடைக்கலம் பெற்ற அகம்பன்

இராவணனின் குணம் விசித்திரமானது. திடீர்திடீரென அவனது சுபாவம் மாறும். சாந்த சொரூபியாகக் காட்சி தருவான்;

### இராஜதானி

எதிர்பாராத நிலையில் கடும் கோபம் கொண்டு கொதித்தெழுவான். இத்தகைய இராவணனின் குணம் தெரிந்த அகம்பன், ஜனஸ்தானத்திலிருந்து-அங்கு அரக்கர்கள் அழிவுற்ற நிகழ்வுகளை எடுத்துக் கூற இராவணனிடம் வரும் போதே, அவன் தாள் பணிந்து, அடைக்கலம் கோரிவிட்டே சம்பவத்தைக் கூறினான். இருப்பினும் "வா என்னுடன்" என்று அழைப்பு விடுக்கப் பட்டதும் தனக்கு என்ன நடக்கப் போகிறதோ என்று தெரியாமல் அச்சம் கொண்டவனாக உடன் சென்றான். ஏற்கனவே அபயம் அளித்து விட்டமையினால் தனக்கு உயிர பாயம் ஏற்படப் போவதில்லை என்பதனை உறுதி செய்து கொண்டான்.

### இலங்கேஸ்வரனின் ஆலோசனை

தனக்குரிய ஆசனத்தில் அமர்ந்து கொண்ட இலங்கேஸ்வரன் அகம்பனையும் இருக்கையில் அமரும்படி சைகை செய்தான். ஆனால் அகம்பன் அமரவில்லை. "அகம்பா! எனது சகோதரர்களையும் அரக்கர் சேனையையும் வதம் செய்தவன் ஒரு மாநிடன் என்றாய்! கோசல நாட்டரசன் தசரதனின் மைந்தன் இராமன் என்றாய். ஜனகனின் அரசவையில் அவனை நான் பார்த்திருக்கிறேன். அவன் ஒரு சிறுவன் தான். ஆனால், என்னால்கூட முடியாத சாதனையைச் செய்தான்-ஜனக மன்னரிடமிருந்த சிவதனுசை முறித்தவன், ஜனகரின் மகள்-ஆம்! அந்தப் பேரழகியை மணந்தவன். அவன்தான் எமது அரக்கர் பெரும்படையை தனியாக நின்று அழித்தொழித்தான் என்கிறாய்! அகம்பா! உண்மையைச் சொல்! அந்த இராமனை எதிர்த்துப் போரிட முடியாதா? அவனை வெல்லுவதற்கு எம்மால் முடியாதா?" என்று இராவணன் சர்வ சாதாரணமாகவே கேட்டான்.

இராவணன் அப்போதிருந்த நிலையை நன்கு உணர்ந்த அதற்கேற்றாற் போல் பதிலளிக்கலானான். "அண்ணலே! இராமனுடைய போர்த்திறமையை நான் நேராகவே பார்த்தேன். அவனிடம் அஸ்திரங்கள் எங்கிருந்தோ வந்து குவிகின்றன. அஸ்திரங்களாலேயே தன்னைச்சுற்றி அரண் அமைத்துக் கொண்டான். அந்த அரணை ஊடுருவிக் கொண்டு எமது வீரர்களின் பாணங்கள் எவையும் உட் செல்ல முடியவில்லை. ஜனஸ்தானத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற யானைப்படை, குதிரைப் படை, தேர்ப்படை காலாட் படைகள் அனைத்துமே இராமனின் கணைகளால் சில நாழிகைக்குள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன. அவனை நேருக்கு நேர் நின்று போரிட்டு வெல்வது முடியாத காரியம் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்" இவ்வாறு அடக்க ஒடுக்கமாக அகம்பன் கூறி முடித்தான்.



"என் திசையிலுள்ளோரும் தேவரும் என் பெயர் கேட்டாலே நடுநடுங்கும் தரசகண்ட இராவணனைக் கோழை என்று நினைத்து விட்டாயா அகம்பா? அந்தக் கைலயங்கிரியையே பெயர்த்தெடுத்தவன் நான்! இந்தப் பூமியையே தாங்கும் வாரணங்கள் நான்குனும் பொருதி விழுப் புண்களைப் பெற்ற மார்பல்லவா என்னுடைய மார்பு? கேவலம் ஒரு மானிடப் பூச்சியைக் கண்டு என்னை மடக்கி விடலாம் என்று பார்க்கிறாயா? அகம்பா! ஏற்கனவே நீ என்னிடம் அபயம் கோரி விட்டாய்! இல்லை விட்டால்...!"

இலங்கேஸ்வரன் நறநறவென்று தன்னுடைய பத்து வாய்களிலுமுள்ள பற்களைக் கடித்தான். பற்களிலிருந்து எழுந்த பேரொலி பேரிடி போலெழுந்து அம்மண்டபத்தையே ஆட்டங்காண வைத்தது. நொடிப்பொழுதில் இராவணனின் சுபாவம் மாற்றமடைந்ததை கண்டு அச்சம் மேலிட அகம்பன் நடுநடுங்கிப் போனான். பொங்கி எழுந்த இராவணன் திடீரெனப் பெட்டிப் பாம்பாகிவிட்டான். "அகம்பா! மேலும் சொல்! அந்த இராமனுடன் வேறு எவரும் சேர்ந்து போர் புரிய வில்லையா?" என்று வினவினான்.

"இல்லை ஐயனே! இராமன் தனித்தே நின்றான். கரனுடன் போர் தொடங்குவதற்கு முன்னர் நானே இராமனிடம் தூதுவனாகச் சென்றேன். கரன் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 'ஆரண்யத்தை விட்டகன்று வந்த வழியே ஏகி உயிரைக் காப்பாற்றிக் கொள்!' என்று இராமனிடம் நான் கூறினேன்."

"அப்படியா? அதற்கு அவன் என்ன சொன்னான்?"

"ரிஷிகளின் வேண்டுகோளுக்கிணங்கி அரக்கர் குலத்தை வேரோடழிக்கவே வந்திருக்கிறேன்! போர் பொருத வேண்டுமானால் உமது படைகளையும் மன்னனையும் வரச் சொல் என்றான் பிரபு."

"அவ்வளவு தைரியமா அவனுக்கு? நாளைப் பொழுது புலரட்டும். நானே தனியாக அவனிடம் செல்கிறேன். அந்த நரனை ஒரே நசியலாக நசித்து விடுகிறேன்!"

### அகம்பன் கூறிய உபாயம்

"வேண்டாம் பிரபு! தங்களுடைய வீரம் நான் அறியாததொன்றல்ல; ஆனால் அந்த இராமனிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. ஆகவே, அவனைத் தந்திரத்தால் வெற்றி கொள்ளவே தாங்கள் முயற்சிக்க வேண்டும். தாங்கள் உத்தரவிட்டால் நானே ஓர் உபாயம் கூறுகிறேன்."

இராவணன், அகம்பனின் உரை கேட்டு இடியேறுபோல் பலமாகச் சிரித்தான். அதன்பின் "அகம்பா! எங்கே கூறு பார்க்கலாம் உன் உபாயத்தை?" என்றான்.

"அண்ணலே! இராமனுடைய மனைவி சீதையின் அழகை வர்ணிக்க வார்த்தையே இல்லை. ஈரேழு பதினான்கு உலகிலும் அவளைப் போன்ற ஒரு பேரழகியைக் காணவே முடியாது. இராமனும் சீதை மீது தன் உயிரையே வைத்துள்ளான். அவளை விட்டுப் பிரியவே மாட்டான். தாங்கள் அந்த அழகியை அவனிடமிருந்து பிரித்துவிட்டால், இராமன் அப்பிரிவுத்துயர் தாங்காமலே உயிர் விட்டுவிடுவான்." என்று அகம்பன் கூறியதும் இலங்கேஸ்வரனின் பரந்த நெற்றியில் பத்தும் பல்லாயிரம் கோடுகளிட்டன. சற்று நேரம் கண்களை மூடி சிந்தனையிலாழ்ந்தான். பின்னர் கண் விழித்து, "அகம்பா! நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது. ஓர் அரசன் மற்றொரு நாட்டின் அரசனைப் போருக்கிழுப்பதானால், அவ்வரசனிடமுள்ள 'ஆனிரை கவர்தல்'-அதாவது கால் நடைகள் போன்ற பொருட்களை அபகரித்தலும் ஒரு முறையாகும். இராமனோ அரசகுமாரனாக இருந்தாலும் தற்போது கானகத்தில் வசிக்கிறான். அவனிடம்- நீ சொன்னதுபோல்- அவன் பேரழகு மனைவியைத் தவிர வேறு எதுவும் கிடையாது. சரி நீ சென்றுவா!" என்று தன் கழுத்தில் தொங்கிய மாணிக்க ஆரம் ஒன்றினை எடுத்து அகம்பனின் கழுத்தில் சூடிவிட்டான். அகமகிழ்வுடன் அரசனின் தாள் பணிந்து விடைபெற்றான் அகம்பன்.

அகம்பனுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டபோதிலும் இலங்கேஸ்வரனின் உள்ளம் பெருங்கடல் போல் அலை மோதியது. முன்பொரு தடவை மிதிலாபுரி சென்று ஜனகனின் அரசவையில் சிவதனுசினை தன் கைகளினால் தூக்கி எடுக்கவே முடியாமல் தடுமாறித் தலை குனிந்ததை உணர்ந்தான். அப்போது அரசவையின் ஒரு முனையிலிருந்த உப்பரிகையில் மின்வெட்டுப் போன்று தோன்றிய சீதையின் அழகுத்திருவுருவை ஒரே ஒரு நொடியில் கண்டதையும் அதனால் ஏற்பட்ட கலக்கம் மறைந்தும் மறையாமல் தன்னுள்ளத்தில் நீறுபூத்த நெருப்புப் போல் கனன்றுகொண்டிருப்பதையும் உணர்ந்தான். அகம்பன் சீதையின் பேரழகை வர்ணித்ததையும் மறுகணம் சிந்தனைத் திரையில் இழுத்துப் பார்த்தான். 'எப்படியும் அந்த அழகியின் திருவுருவைப் பார்த்தாக வேண்டும்; பார்த்தால் மட்டும் போதாது; அப்பாவையை பூங்கொத்துப் போல் பறித்து வர வேண்டும்.' இவ்வாறெல்லாம் அன்றிரவு முழுவதும் கண்ணுறங்காமல் எண்ணங்களுக்கு உருக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

காலை மலர்ந்தது. காலைக் கடன்களை முடித்த இலங்கை வேந்தன் சிவ பூசையை முடித்துக் கொண்டு, கோவேறு கழுதைகள் பூட்டப்பட்ட-வான வீதியில் பறந்து செல்லும் தன்னுடைய விமானத்தில் ஏறினான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி : 31**

**சரியானவிடை:- பிரம்மதேவன்.**

1. வா.கலைவாணி. இராசேந்திரம் குளம், வவுனியா.
2. செல்வன். ப. சுதன். பார் வீதி, மட்டக்களப்பு.
3. சு. ஊர்மிளை. தம்பிலுவில்-02, கி.மா.
4. செல்வி. சு. கணபதிப்பிள்ளை. 102, பேராதெனிய வீதி, கண்டி.
5. தி. பிரகலாதன். உருத்திரபுரம், கிளிநொச்சி.

**போட்டி இல. 33** கேள்வி:- உபாயம் கூறிய அகம்பனிற்குப் பரிசாகக் கிடைத்தது யாது?

ஜுன்.08 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.33, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# நாளை நடக்கலாம் இப்படியும்

**காதிலை பூ கந்தசாமி**

தமிழக தேர்தல் நடந்து முடிந்த பின்னர் ரஜினிகாந்தை தனித்து முக்கியத்துவப்படுத்தவில்லை கலைஞர். இந்நிலையில் எதிர்ககாலத்தில் ரஜினிகாந்த் தனிக்கட்சி தொடங்கினால் கலைஞர் கருணாநிதி எப்படிப் பேசுவார். அதன்பின் ரஜினி எப்படிப் பேசுவார்? கற்பனை செய்கிறார் காதிலை பூ கந்தசாமி.

## "படம் போட்டது வடம் பிடிக்கவல்ல"



**நிருபர்:-** நடிகர் ரஜினிகாந்த் தனிக்கட்சி தொடங்கியுள்ளார். அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**கலைஞர்:-** அவர் ஒரு நல்ல நடிகர் என்றுதான் அன்றும் சொன்னேன். இன்றும் சொல்கிறேன். என்றும் சொல்வேன்.

**நிருபர்:-** சென்ற தேர்தலில் உங்களை கடுமையாக ஆதரித்தார் அல்லவா?

**கலைஞர்:-** அவர் மட்டுமல்ல, தம்பிகள் விஜயகாந்த், நெப்போலியன், சரத்குமார், தியாகு, குமரிமுத்து . குள்ளமணி, மற்றும் பல ஸ்டண்ட் நடிகர்கள் எல்லோரும் ஆதரித்தார்கள்.

**நிருபர்:-** ரஜினியின் படம் போட்டு உங்கள் கட்சியினர் வாக்குக் கேட்டார்களே.

**கலைஞர்:-** படம் போட்டு வாக்குக் கேட்டது, அவர் ஆட்சிக்கு வரவேண்டும் என்று வடம் பிடித்து இழுத்தாக அர்த்தம் இல்லை.

**நிருபர்:-** என் இளவல் ரஜினி என்று பேசினீர்களே?

**கலைஞர்:-** இப்போதும் அவர் என் இளவல் தான். அதனால்தான் அண்ணன் என்ற ரீதியில் சொல்கிறேன். ஆசைத்தம்பி நீ ரொம்ப ஆசைப்படாதே.

**நிருபர்:-** ரஜினிக்குப் பின்னால் ஒரு கூட்டமே இருக்கிறதே?

**கலைஞர்:-** அதிலே பலர் தி.மு.க உடன் பிறப்புக்கள். அதனை ரஜினியே என்னிடம் சொல்லியிருக்கிறார்.

**நிருபர்:-** அடுத்த ஆட்சி ரஜினி ஆட்சி என்கிறாரே துக்ளக் சோ.

**கலைஞர்:-** அவருக்கு பகுத்தறிவுக்காரர்களை கண்டால் பிடிக்காது. திராவிடக் கட்சிகள் என்றால் தெவிட்டும். யார் இந்த சோ? ஜெயலலிதாவுக்கும் ஆலோசகராக இருந்தவர்தானே! ரஜினியை வைத்து ஆட்சியை பிடிக்க நினைக்கிறார். அண்ணா வளர்த்த இயக்கத்தை அழித்துவிடத் துடிக்கிறார்.

**நிருபர்:-** ரஜினிகாந்த்தின் அரசியல் எதிர்காலம் எப்படியிருக்கும்?

**கலைஞர்:-** திரையில் மட்டும் நடித்துக் கொண்டிருந்திருக்கலாமே என்று அவரே நினைத்து வருத்தப்படவேண்டி இருக்கும்.

## 'மூன்' ரீ.வியில் ரஜினி பேட்டி

நடிகர் ரஜினிகாந்த் 'மூன்' ரி.வியில் நேற்று பேட்டியளித்தார். அந்த பேட்டியில் அவர் தெரிவித்ததாவது: பெரியவர். ரொம்ப பெரிய மனுஷன் கலைஞர் ஆட்சிக்கு வந்தா நல்லது செய்வார் என்று நம்பினேன். ரொம்ப ரொம்ப நம்பினேன். ஏமாற்றிட்டாரு. பட். அவரால தொடர்ந்து ஏமாற்ற முடியாது.

அன்புப் பெரியவர் கலைஞரே! ஒண்ணு சொல்றேன் கேட்டுக்குங்க. தமிழக மக்கள், என்னையும் உங்களையும் வாழவைக்கும் தெய்வங்கள்- ரொம்ப புத்திசாலிங்க. ஒரு தடவை ஏமாந்தாங்க என்று சொன்னா. நூறு தடவை ஏமாறுவாங்க எண்ணு நாம நினைக்கப்படாது.

முன்னாடி அந்த அம்மா என்ன பண்ணினாங்க. இப்ப என்னாணாங்க எண்ணு உங்களுக் கும் தெரியும். எனக்கும் தெரியும்.

இந்த ஸ்ரீராகவேந்திரர் மீது ஆணையாகச் சொல்றேன். எனக்கு இதிலே, இந்த அரசியலிலே எல்லாம் நாட்டம் கிடையாது. நான் என் வழியிலேயே போய்க்கிட்டிருந்தேன். பட். ஸ்ராங்கா போய்க்கிட்டிருந்தேன். தட் இஸ் குட் வே.

முதல்லே அந்த அம்மா என் வழியிலே வந்து வம்பு பண்ணினாங்க. விட்டுங்க அம்மா. நான் போய்க்கிட்டே இருக்கேன் எண்ணு சொன்னேன். கேட்கலை. குறுக்கே நின்னாங்க.

என் சுபாவம் என்னன்னா, வலிய வம்புக்கு வந்தா விட மாட்டேன். சரி பார்த்துக்குவோம் எண்ணு ரெடியாயிடுவேன். ஸ்டெடியாயிடுவேன்.

அம்மா தனியா வராம தாத்தாவையும் அழைச்சுக்கிட்டு வந்து நின்னாங்க. சரி பார்த்துக்கலாம் எண்ணு . நானும் முஸ்டியை உயர்த்தினேன். என் பின்னாடி நீங்களும் வந்து நின்னுட்டீங்க.

அந்த அம்மாவை வீழ்த்துங்க ரஜினி. அப்பத்தான் நாங்க முன்னாடி போய் அந்த நாற்காலியை பிடிக்கலாம் எண்ணீங்க.

நாற்காலியா? நம்மை விட்டுடுங்க எண்ணு நான் அமெரிக்கா போயிட்டேன். நீங்க போனா எப்படிங்க. திரும்பி வந்துருங்க. நீங்க சண்டை போட வேணாம். சினிமாவில வாற மாதிரி ஒரு பாவ்லா காட்டுங்க போதும். அந்த உற்சாகத்திலயே நாங்க மத்ததையெல்லாம் பார்த்துக்கறோம் எண்ணீங்க.

'அதெப்பிடிங்க. நல்லாயிருக்காதே' என்றேன். கலைஞர் பெரியவர். பெரிய பெரிய இலக்கியமெல்லம் படிச்சவரு. அவரு என்னோட பேசினாரு. "மகாபாரதத்தில கண்ண பரமாத்மா நேரடியா யாரையும் அடித்து வீழ்த்தலே. அம்பு விடல்லே. தேர் மட்டும்தான் ஓட்டினாரு. அவரு தம்மோட நிக்கிறாரு என்கிறதே பாண்டவ சேனைக்கு ரொம்பப் பலமா இருந்திச்சு" என்று சொன்னாரு கலைஞர்.

நான் ரொம்ப ரொம்பச் சின்னவன். கண்ண பரமாத்மா லெவலுக்கு என்னை வைச்சுப் பேசாதீங்க. அது தப்பு. எண்ணு கேட்டுக்கிட்டேன்.

நீங்க நினைக்கல்ல. மக்கள் நினைக்கிறாங்க. அந்த அம்மா போகணுமா வேண்டாமா. போகணும் எண்ணா கண்டிப்பா நீங்க வரணு ம் எண்ணாங்க.

பெரியவங்க எல்லாம் அழைக்கிறாங்களே எண்ணு வந்தேன். அப்புறமா என்ன வெல்லாம் நடத்திச்சு எண்ணு உங்களுக்கே தெரியும்.

சென்னைக் கடற்கரைக் கூட்டத்திலே கலைஞர் எல்லாருக்கும் நன்றி சொன்னாரு.

என்னங்க, தேர்தலுக்கு முன்னாடி மூச்சுக்கு மூச்சு ரஜினி என் இளவல் எண்ணு பேசினாரு. இப்ப என்னடாண்ணா பத்தோடு பதினொன்றா உங்க பெயரையும் சொல்லிட்டுப் போய்ட்டாரே எண்ணாங்க.

அவரு பெரிய மனுசன். வயதானவரு. ரொம்ப களைத்துப் போயிருப்பாரு. மனசில எதையும் நினைச்சிட்டு அப்படிச் செய்திருக்க மாட்டாரு. நன்றி சொன்னாரில்லையா. அது போதும். அவருக்கு ஏகப்பட்ட வேலை இருக்கும் எண்ணு நான் சமாதானம் சொல்லிக்கிட்டேன்.

பின்னாடி துக்ளக் சார்பாக கலைஞர் கிட்டப்போய் பேட்டி எடுத்தாங்க. அவங்களாவே 'ரஜினியின் பங்கு என்ன?' எண்ணு கேட்டாங்க. கலைஞரின் முகம் உடனே மாறிடுச்சு. ஒரு நிமிஷம் யோசிச்சாரு. பின்னாடி, பாண்டியன், ராதாரவி, சரத்குமார், ரஜினி, விஜயகாந்த் எல்லோரும் ரொம்ப உதவினாங்க எண்ணு சொன்னாரு. இது அப்படியே துக்ளக்கிலே வந்திடுச்சு. நானும் பார்த்தேன். அப்போதான் கலைஞர் நம்மை தவிர்க்க நினைக்கிறாரு. பயப்படுறாரு எண்ணு புரிஞ்சு கிட்டேன்.



அவர் மகன் ஸ்டாலினுக்கு போட்டியாயிடுமோ எண்ணு பயப்படுறாரு எண்ணு சோ சொன்னாரு. நான் 'அப்படியா?' எண்ணு கேட்டு சிரிச்சேன். மனசுக்குள்ளே ரொம்ப கவலையா இருந்துச்சு.

என்னடா இது, நாம யாருக்கும் போட்டி கிடையாதே. ஏன் நம்மைக் கண்டு பயப்படுறாங்க எண்ணு நினைச்சேன்.

அதனால கொஞ்சக் காலம் சைலண்டா இருக்கலாம் எண்ணு அவுஸ்த்திரேலியாவில இருக்கிற ரிஷிமகான் ஆசிரமத்துக்கு போயிருந்தேன். ஒரு நாள் ரிஷிகள் என்னை அழைச்சாரு. நீதானே அவங்களை ஆட்சிக்கு கொண்டுவந்தாய். அவரு மக்களை மறந்திட்டாரு. மகனை மட்டுமே நினைக்கிறாரு. மகனுக்கு மந்திரி பதவி கொடுக்கமாட்டேன் எண்ணு சொல்லிக் கிட்டே நிழல் முதலமைச்சரா வைச்சிருக்காரு. நீ போ. கடமையைச் செய். நல்லது செய். எண்ணு சொன்னாரு.

ரிஷிகள் சொன்ன பின்னாடி மறுக்க முடியுமா. அதான் வந்துட்டேன்.

என்னை வாழவைக்கும் தெய்வங்களான தமிழக மக்களுக்கு என்னாலானதை செய்யப் போறன்.

நான் நூறென்ன நூற்றி இருபது வீதம் உறுதியா சொல்றேன், கிடைக்க வேண்டியது யாருக்கும் கிடைக்காமல் போகாது. கிடைக்காமல் இருக்க வேண்டியது கிடைக்காது.

ஜெய்ஹிந்த்.

www.padippakam.com




அருள் ஜீவலர்ஸ்

ARUL JEWELLERS

436331

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# ஹலோ-ஹலோ நலமா?




அம்மன் ஜீவல்

AMMAN JEWEL



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

332033

29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


மனிதர்கள் மட்டும்தான் மூக்குக் கண்ணாடி போட முடியும் என்று சட்டமா? இல்லைதானே.

மனிதர்களைவிட நாய்கள் மரியாதை பெறும் காலம் இது. மனிதர்கள் சிலரைவிட அவை பரவாயில்லை என்ற அபிப்பிராயமும் அதற்கு காரணமாக இருக்கலாம்.

நாம் வளர்த்தால் மட்டும் போதுமா. நாம் வளர்க்கும் நாய்கள் தரணியில் அழகென்று மகிழவும் நாம் வளர்ப்போருக்கு கொள்ளை ஆசை.

படத்தில் மூக்குக் கண்ணாடி, தொப்பி சகிதம் போஸ் கொடுக்கும் நாயார் பம்பாயில் நடைபெற்ற கண்காட்சியொன்றில் முதல் பரிசை வென்றுவிட்டார். அவரை வளர்த்தோரை ஆனந்தக் கண்ணீர் விடவைத்து வளர்த்தோருக்கு ஆற்றும் கடனை செய்துவிட்டார்.

தருவது

வீயோட



## எப்போதும் உற்சாகம்

சுழற் பந்து வீச்சாளர்களில் சூப்பர் ஸ்டார் அந்தஸ்துப் பெற்று வருபவர் அனில் கும்ளே.

இந்திய கிரிக்கெட் நட்சத்திரங்களில் இளம் வீரர்களில் ஒருவர். கும்ளே பிறந்தது 1970 அக்டோபர் 17ம் திகதி

இவரது ஜாதகத்தை கணித்துப் பார்த்த ஜோசியர்கள் நல்ல சேதி சொல்லியிருக்கிறார்களாம். அதனால் உற்சாக மனநிலையில் இருக்கிறார்.

கும்ளேயின் ஜாதகப்படி செவ்வாய்கிரகம் 11வது இடத்தில் இருக்கிறதாம். அது மட்டுமல்ல செவ்வாய் கிரகத்துடன் சூரியனும் இணைந்திருப்பது 'சுழற் பந்துவீச்சு' என்ற விசேஷ தன்மையை வழங்கிக் கொண்டிருக்கிறது. ராகு 4வது இடத்தில் இருப்பதால் இவரது பந்து வீச்சைக் கண்டு துடுப் பாட்டக்காரர்கள் பயப்படும்படியாக இருக்கிறதாம். இதெல்லாம் ஜோசியர்களது கணிப்பு. கணிப்பு பொய்யோ இல்லையோ கும்ளேக்கு ஜோசியர்கள் நம்பிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது ஒரு உற்சாக டொனிக் மாதிரித்தான்.

18 வயதில் கிரிக்கெட் களத்தில் புகுந்தவர் அனில் கும்ளே. கர்நாடகா மாநில அணியின் கப்டன் இவர்தான். இந்த வருடம் ரஞ்சி கோப்பையை தட்டிக்கொண்டது கர்நாடகா மாநில அணிதான். தமிழ்நாடு அணியுடன் நடந்த இறுதி மோதலில் வென்று ரஞ்சிக் கோப்பையைக் கைப்பற்றியது கர்நாடகா அணி.

உலகக் கோப்பையைத் தவறவிட்ட சோகம்தீர அனில் கும்ளேக்கு கிடைத்த ஆறுதல் அதுதான். கர்நாடக அணியின் கப்டன் ஒருநாள் இந்திய அணியின் கப்டனாகவும் மாறக்கூடும். முதலில் உதவிக் கப்டனாக என்றாலும் பதவி கிடைக்கக் கூடும்.



## பங்கர்

உயர் ரக சீன ஜாடி அதற்குள் பாதுகாப்பு நாடி புகுந்துவிட்டார் பூனையார்.

பங்கருக்குள் மனிதர்கள் பதுங்குவது போரில் இருந்து தப்பத்தான். இந்த பூனையார் யாரிடமிருந்து தப்ப நினைத்தாரோ? என்றாலும் அழகான பங்கர்தான். இப் புகைப்படம் சிறந்த படப்பிடிப்புக்காக கனடாவில் பரிசு பெற்றுள்ளது.

## நடந்தால் தெரு அழகு

படத்தில் ஒய்யாரமாய் தெரிபவர்தான் உலகில் சூப்பர் மொடல் அழகிகளில் ஒருவர். இவர் விழாக்களுக்குச் சென்றால், இவரைப் பார்ப்பதற்காகவே ஜொள்ளர்கள் மொய்த்து விடுகிறார்கள். அப்படி என்ன விசேஷம் என்கிறீர்களா? கால்கள் மிக அபாயமாக தெரியக்கூடிய ஆடைகளைத்தான் இவர் எப்போதும் அணிந்து செல்வார். இவரைப் பின்பற்றி பல பெண்களும் இதே ஃபாசனை அணிந்து மிரட்டுகிறார்களாம். நாகரீகம் அபாய உயரத்தில்! (அழகியின் பெயர்-மக்பேர்சன்)





## என்ன- புரிகிறதா?

என்ன இது? தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளலாம்போல இருக்கிறதா? அதுதான் விஷயம். படத்தில் இருப்பது தலைமுடியேதான்!

அடிக்கடி முடியை வெட்டி திருத்திக் கொள்ளாதவர்களுக்கும், முடியை ஒழுங்காகப் பராமரிக்காதவர்களுக்கும் முடி வெடிக்கும் அபாயம் உண்டு. அவ்வாறு வெடித்த ஒரே ஒரு முடியின் நுனியை உருப்பெருக்கிமூலம் பலமடங்கு பெருப்பித்துப் பார்த்தபோதுதான் இந்த மாதிரித் தெரிந்தது. ஒரு முடியில் இப்படியா? என்று வியந்துதான் கின்னஸ் புத்தகத்தில் இதனை இடம்பிடிக்க வைத்துள்ளார்கள்.

முடியைப் பற்றி மற்றொரு தகவல். அல்ஃபிரெட் வெஸ்ட் (1901-85) என்னும் சாதனையாளர் ஒரே ஒரு தலைமுடியை 18 பாகங்களாக கிளித்தெடுத்து சாதனை படைத்துள்ளார். 17 தடவை அந்த சாதனையை நிகழ்த்திக் காட்டினார். உங்களாலும் முடிகிறதா என்று பாருங்கள். (முடிகுறைந்தவர் முயன்றால் நஷ்டத்திற்கு நாம் பொறுப்பல்ல)

## தங்க மகன்

1993 இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் தனது பங்குக்கு அமெரிக்காவுக்கு தங்கம் பெற்றுக் கொடுத்தவர் இவர்.

இந்த தங்க மகனின் பெயர்; கெவின் யங். 400 மீற்றர் தடை தாண்டி ஓட்டத்தில் படு சூரர். 46.78 செக்கனில் 400 மீற்றர் தாண்டினார். அது ஒரு உலக சாதனை. இவருக்கு முன்னர் 400 மீற்றர் தடை தாண்டி ஓட்டத்தில் எட்மோஸஸ் என்பவர்தான் சாதனை படைத்திருந்தார். அவரைவிட 1/4 செக்கன் முன்னர்வந்து அந்த சாதனையை முறியடித்தார் கெவின் யங்.


1993 ஒலிம்பிக்கில் கெவின் யங்குக்கு அடுத்த இடத்தில் வந்தவர் வின்றொஸ் கிரஹாம். அவர் எடுத்த நேரம் 47.66 செக்கன்கள்.

இம்முறை ஒலிம்பிக்கில் கெவின் யங்கின் சாதனை முறியடிக்கப்படுமா? பார்க்கலாம்.

ஒலிம்பிக் திருவிழா தொடர்பாக மற்றொரு தகவல்.

சோவியத் யூனியன் உடைந்து சிதற முன்னர் ஒலிம்பிக்கில் அதன் கொடிதான் பறந்தது. உடைந்தபின்னர் அமெரிக்கா தன் கொடியை பறக்கவிடத் துடிக்கிறது.

இம்முறை அதிக தங்க அறுவடையில் வெற்றிபெறப் போவது யார்? போட்டி முடிவுகள் வரை காத்திருப்போம்.






படிப்பகம்